# காவேரி

24 APR 1944

3-9
134




EAD The Cauv -
IDEAL MAGAZINE FOR THE HOM

பக்ஷிராஜா பிலிம்ஸ்

# ஜகதலப்ரதாபன்

புது வருஷ வெளியீடு

ஏப்ரல் 13உ முதல்

| | |
|---|---|
| சின்னப்பா | ஸரோஜினி |
| ஜீவரத்னம் | சந்தானலக்ஷ்மி |
| வரலக்ஷ்மி | மதுரம் |
| கிருஷ்ணன் | பேபி கமலா |
| ரங்காச்சாரி | |

நடிப்பது.

டைரக்ஷன்: ஸ்ரீராமுலு நாயுடு



நாராயணன் கம்பெனி
வெளியீடு

J.E.11

P S M Co.

# இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்




குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

**ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.**

## தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

**கும்பகோணம்.**

## The Southern India Confectionery Factory

Proprietors:- **V. S. & Sons,**

**KUMBAKONAM.**




# T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 5,000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T. V. S. இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

**பிரதான அம்சங்கள்**

- **ஸ்டார்டிங் அதிசுலபம்:**—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- **சமகனம்:**—டயர் தேய்வு குறைவு. பிரேகிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- **மும்முறை வடிகட்டும் வசதி:**—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.
- **மிகவும் நம்பிக்கையானது:**—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- **நேர்த்தியான தோற்றம்:**—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்த தோற்றம்.

வாங்கு முன் மாதிரிகளைப் T·V·S கியாஸ் பிளாண்ட் பாருங்கள்.

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

**T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்**

மதுரை & சென்னை

TVS.K - 7 TM

# பொருளடக்கம்

சுபானு மலர் 3 — பங்குனி இதழ் 8


| | | |
|---|---|---|
| பணப் பெருக்கம் ... | ... | 5 |
| சீதையும் கஸ்தூரியும் ... | வே. நாராயணன் | 8 |
| காதலர் தொடர்பு ... | வே. நாராயணன் | 9 |
| உள்ளும் புறமும் ... | "வாணி" | 11 |
| மந்திரி சபை நினைவுகள் ... | தி. சே. சௌ. ராஜன் | 17 |
| தோல் வாத்தியங்கள் ... | ஆர். கே. விசுவநாதன் | 22 |
| பணம் பேசுகிறது ... | ரா. வீழிநாதன் | 25 |
| வாஜபேயரின் வைராக்கியம் ... | "மாரார்" | 30 |
| தேர்ப் புளியமரம் ... | "கௌசீ" | 33 |
| மசக்கை ஆசை ... | கமலா பத்மநாபன் | 40 |
| உடைந்த வீணை ... | கே. சுந்தரம்மாள் | 46 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் ... | 'ராமய்யா' | 53 |
| கன்னியின் கனவு ... | க. சந்தானம் | 55 |


**முகப்புப் படம்:—** கும்பகோணத்துக்கருகிலுள்ள அரிய சிற்பங்கள் நிறைந்த தாராசுரத்துக் கோயிலின் தோற்றம்.


# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 25,00,000 |
| வெளியிடப்பட்ட மூலதனம் | ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 18,75,000 |
| காப்பு (ரிசர்வ்) திரவியம் | ரூ. | 2,50000 |
| மொத்த வரவு சிலவுகள் | ரூ. | 2,25,00,000மேல் |

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | மாயவரம் | திருநெல்வேலி |
| அனகாபள்ளி | மதருஸ் | பாலக்காடு | திருச்சிறுப்பள்ளி |
| சிதம்பரம் | மாம்பலம் | புதுக்கோட்டை | வேலூர் |
| காஞ்சீவரம் | மைலாப்பூர் | சீயாழி | விஜயபுரம் (திருவாரூர்) |
| ஈரோடு | திருவல்லிக்கேணி | தாட்பள்ளிக்கூடம் | விருதுநகர் |
| காரைக்குடி | மதுரை | தஞ்சாவூர் | விஜயநகரம் |
| | சாலூர் | பார்வதிபுரம் | |

நிர்வாக போர்டார்:

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E. (சேர்மென்)
,, வி. வெங்கட்ராம அய்யர், M.A.,B.L.,
,, ஆர். எஸ். எ. சங்கர அய்யர்
ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், B.A.,B.L.,
,, கே. சிவஸ்வாமி அய்யர்
,, எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.



219013
சென்னை-600 008

எதிர்பாருங்கள்

பக்ஷிராஜா பிலிம்ஸ்

# ஜகதலப்ரதாபன்

சின்னப்பா

ஸரோஜினி · ஜீவரத்தனம் · வரலக்ஷ்மி.

ஸந்தானலக்ஷ்மி · கிருஷ்ணன் · மதுரம்

*Directed by* S.M. SRIRAMULU NAIDU

A NARAYANAN Co. *Release*

P.S.M.Co.

J.T.28

# காவேரி

சுபானு மலர் 3

"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்

பங்குனி இதழ் 8


## பணப் பெருக்கம்

சில காலமாகப் பணப் பெருக்கம் (inflation) என்ற பதம் நாட்டில் எங்கும் உலவிவருகிறது. மத்திய சட்டசபையில் நிதி மெம்பர் வருடாந்தர வரவு செலவு திட்டத்தைப் பிரேரேபிக்கையில் அவ்வார்த்தையை அபரிமிதமாக உபயோகித்தார். அகில இந்திய வியாபாரச் சங்கத்தார் கூட்டத்தில் இதைப்பற்றிய பேச்சுக்கு அளவேயில்லை. நாட்டில் பொருளாதார நிலைமை விபரீதமாக இருப்பதற்கும், யுத்த நிதிக்குப் பணம் திரட்டுவதற்கும், நாட்டில் முன்னமேயே தாங்கமுடியாமலிருக்கும் வரிப் பளுவை இன்னும் அதிகரிக்கச் செய்வதற்கும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் இது காரணமாக எடுத்துக் காட்டப்படுகிறது. பணப் பெருக்கு என்றால் என்ன? இந்தியாவின் பரம்பரையான ஏழ்மை நீங்கி மக்கள் பணக்காரர்களாகிவிட்டனரா? மக்களின் அவதி அதிகரித்துக்கொண்டே இருக்கும் இக் காலத்தில், பசியினாலும், வறுமையினாலும் மக்கள் லக்ஷக்கணக்கில் மடியும் இக் காலத்திலே மக்களிடத்தில் பணம் அதிகரித்துவிட்டது என்றால் பொது மக்கள் அதை எப்படி நம்புவது? ஆனால் பணப்பெருக்கு நாட்டில் அளவுக்கு மிஞ்சி இருப்பதாக யாவரும் ஒப்புக் கொள்கிறார்களே! அதன் அர்த்தம் என்ன? இதைச் சற்றே ஆராய்வோம்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள எந்தத் தேசத்திலும் இப்பணப் பெருக்கம் ஏற்படுவது ஸகஜம். ராணுவ சிப்பந்திகளுக்கு ஊதியமளிப்பதற்கும், யுத்தத்திற்கு வேண்டியஏராளமான சாமான்களை வாங்குவதற்கும் கவர்மெண்டார் பெருந்தொகையான பணம் செலவழிக்க வேண்டி வருகிறது. இதற்கு வேண்டிய தொகை முழுவதும் வரிவசூலின் மூலமாகக் கவர்மெண்டார் திரட்டமுடியாது. ஆகையினால் பெருவாரியான காகித நாணயங்களை அச்சிட்டு அதன் மூலம் சாமான்களையும், ராணுவ சிப்பந்திகளின் சேவையையும் அடைகின்றனர். யுத்தத்திற்கென்று நாட்டிலுள்ள பொருள்கள் ஒதுக்கப்படுவதினால் பொது மக்களுக்குத் தேவையான சாமான்களின் அளவு குன்றிவிடுகிறது. ஆனால் அதை வாங்கும் பணத்தின் அளவு — கவர்மெண்டார் அச்சடிக்கும் நோட்டு ரூபாய்கள்—நாட்டில் அபரிமிதமாக அதிகரித்து விடுகிறது. எனவே ரூபாயின் மதிப்புக் குறைந்துவிடுகிறது. குறைந்துள்ள சாமான்களை வாங்க மிக அதிகமான பணம் நாட்டில் குவியவே அவைகளின் விலை ஒன்றுக்குப் பலமடங்கு அதிகரித்து விடுகிறது. கவர்மெண்டார் சாமான்களை வாங்கும்பொழுது அளிக்கும் பணம் பொது மக்கள் எல்லோர் கைக்கும் எட்டுவதில்லை. எனவே பொருள்களின் விலை உயர்வு பொது மக்களை அதிகமாகப் பாதித்து அவதிக்குள்ளாக்குகிறது. மேலும் காகித நோட்டுக்கள் அதிகரிக்க அதிகரிக்க விலைவாசிகள் விஷம்போல் ஏறுகின்றன. நோட்டின் மதிப்பும் குறைந்துவிடுகிறது. இந்நிலை நாட்டின் பொருளாதார நிலையை மிகவும் பாதிக்கக்கூடியது; ஆகையால் எல்லோரும் கவலை கொள்ளுகிறார்கள். சென்ற மஹா யுத்தத்திற்குப் பிறகு ஜர்மனியில் இத்தகைய நிலை ஏற்பட்டு ஜர்மன் மார்க் நோட்டுக்கு மதிப்பே அற்றுவிட்டது.

இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும், அமெரிக்க கவர்ன்மெண்டாரும் மூலப் பொருள்களை யுத்தத்திற்காக அதிகமாக வாங்குகிறார்கள். சாதாரணமாக வெளிநாட்டார் சாமான் வாங்கினால் அதற்குத் தங்கம் கொடுத்துத்தான் அக்கடனை உளவடைத்துக் கொள்வது. ஆனால் நம் நாட்டில் நடப்பது விசித்திரம். பிரிட்டன், அமெரிக்கா முதலிய நேச நாடுகள் தங்கம் கொடுத்து வாங்காமல், பிரிட்டிஷ் ஸ்டர்லிங் நோட்டுக்களைக் கொடுத்து, அவற்றிற்கு ஈடாக ரூபாய் நோட்டுக்களை வாங்கிச் சாமான்களைப் பெறுகின்றன. இந் நோட்டுக்கள் பிராமிஸரி நோட்டுக்கள் மாதிரிதான். இவை கடன் பத்திரங்கள்தான். இவற்றிற்கு ஈடாக இப்பொழுது நமக்குத் தேவையான யாதொரு முக்கிய சாமான்களும் அந்நாடுகளிலிருந்து அனுப்பப்படுவதில்லை. யுத்தத்திற்குப் பிறகுதான் இக்கடன் தீர்க்கப்படுமாம். சுமார் 713 கோடி ஸ்டர்லிங் பத்திரங்களுக்குச் சாமான்களை இவ்விதம் வாங்கியிருக்கிறார்கள். இக்காரணங்களால்தான் நாட்டில் பொருள் குறைவு, விலைவாசி அதிகம், பணப் பெருக்கம்.

இன்று நாட்டில் 821 கோடி ரூபாய் நோட்டுக்கள் சுற்றிவருகின்றன. இந்த

நோட்டுகளுக்கு ஈடாக இருப்பது 44 கோடி ரூபாய் நாணயங்கள், 713 கோடி பிரிட்டிஷ் ஸ்டர்லிங் கடன் பத்திரங்கள். யுத்தத்திற்குப் பிறகு பிரிட்டிஷ் ஸ்டர்லிங் பத்திரங்களின் மதிப்புக் குறைந்தால் நம் கதி நிர்க்கதிதான்.

இப் பணப்பெருக்கைச் சமாளிப்பதற்காக நாட்டில் உள்ள தீர்க்கதரிசிகளெல்லாரும் கவலைகொண்டு யோசித்து வருகிறார்கள்.

மக்களின் தேவைக்கு அதிகப்படியாக உள்ள பணத்தை வாபஸ் பெறவேண்டியது முதற் கடமை என்பதைச் சிரமேற்கொண்டு கவர்ன்மெண்டார் வரிப் பளுவைப் பன்மடங்கு அதிகரித்தும், கடன் பத்திரங்கள் மூலம் பணத்தைக் கவர்மெண்டாரே திரும்பிப் பெறவும் முயன்றுவருகிறார்கள். பலதரப்பட்ட முறைகளினால் இதைச் சாதிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது—பிரைஸ் பாண்டு என்ன, வட்டிப் பத்திரங்களென்ன, ஸேவிங்ஸ் பாங்க் டெபாஸிட்-இவை சில உதாரணங்கள் ஆகும்.

பணப் பெருக்கினால் ஏற்படும் பாதகத்தை நிவர்த்திக்கப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவது மற்றொரு முறை. இதனால் மக்கள் அவதிப்படாமலிருப்பர் என்ற நம்பிக்கை. சாமான்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும், ராணுவ சேவைக்கென்று பெருவாரியாக அபகரிக்கப்பட்டும் போவதினால் மீதியிருக்கும் பொருள்கள் நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. எனவே பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. விலையைக் கட்டுப்படுத்திவிட்டால் மட்டும் நிலைமை சரிப்பட்டுவிடுமென்பதில்லை. இதைத்தான் நம் நாட்டிலுள்ள வெள்ளை அரசாங்கத்தார் உணருவதில்லை. இவ்விலைக் கட்டுப்பாட்டினால் வெளி அரசாங்கங்கள் இந்நாட்டுப் பொருள்களை மலிவாக அடைகின்றன. மக்களின் அவதி குறைந்தபாடில்லை. விலை கட்டுப்படுத்தப்பட்ட பொருள்யாவும் கிடைப்பது துர்லபமாகிவிடுகிறது. பஞ்சம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் இதுதான்.

பொருள் குன்றிவிட்டால் மக்களுக்குத் தேவையளவு அதை உற்பத்திசெய்ய ஊக்கமளித்து முயல்விப்பது கவர்ன்மெண்டாரின் கடமை. ஆனால் இங்கேதான் அவர்கள் ஊக்கக் குறைவைக் காட்டுகிறார்கள். அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகக்கூடிய சாமான்கள் அனேகம் யுத்தம் காரணமாகத் தடைப்பட்டுவிட்டன. அவைகளை இங்கே உற்பத்திசெய்ய நம் நாட்டிலுள்ள வியாபாரிகள் முயன்று வெற்றியடைந்து வருகிறார்கள். இதைக் கவர்ன்மெண்டார் பூரணமாக ஆதரிப்பதில்லை. இப்பொழுது கப்பல் போக்கு வசதி கொஞ்சம் அதிகரிக்கவே, வெளிநாடுகளிலிருந்து சாமான்களை வரவழைப்பதிலேயே ஊக்கம் காட்டி வருகிறார்கள். வங்காளத்தில் பஞ்சம் தலைவிரித்தாடியபொழுது கானடா கவர்ன்மெண்டார் ஒரு லக்ஷம் டன் கோதுமை நமக்கு அனுப்பச் சித்தமாக இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால் அதற்குக் கப்பல் வசதி இல்லை என்று மறுதலித்துவிட்டார்கள். சுமார் முப்பத்தைந்து லக்ஷம் ஜனங்கள் வங்காளத்தில் பஞ்சத்தினால் வாடி மடிந்தார்கள் என்ற புள்ளி விபரம் இன்று கிடைத்திருக்கிறது. இதில் எத்தனை மக்களுக்கு அக்கோதுமைத் தானியம் உயிர்ப்பிச்சை அளித்திருக்கும்?

பணப்பெருக்கத்தை போக்கடிப்பதற்காகக் கவர்மெண்டார் மக்களுக்குத் தேவையான சாமான்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துவருவதாக மார்தட்டிப் பேசிவந்தார் மத்திய சட்டசபையில் ஸர் ரெய்ஸ்மன். ஆனால் இம்முறை அனுஷ்டானத்தில் எவ்வகையில் கையாளப்பட்டு வருகிறது என்பதைக் குமாரராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்கள் தலைமையில் கூடிய அகில இந்திய வர்த்தகர் சங்கத்தார் வெட்டவெளிச்சமாக்கிவிட்டார்கள். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியது என்னென்ன சாமான்கள் என்பதை ஆலோசித்து இந்தியா கவர்ன்மெண்டார் ஓர் திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதில் முதல் ஸ்தானம் பெற்றிருப்பது ஜானிவாகர் விஸ்கி. பசிப்பிணியால் மடியும் இந்திய மக்களுக்கு எத்தகைய சாதகம் செய்கிறார்கள் நமது இந்தியா கவர்ன்மெண்டார்? க்ஷவரக் கத்திகள், ஸைகிள்கள், எலெக்டிரிக் விசிறிகள், ரேடியோக்கள், சீமைத்துணிகள்—இத்தகைய சாமான்கள் வரவழைக்கப்படுகின்றன. கவர்மெண்டார் யுத்த ஆரம்பத்தில் இந்நாட்டில் பெரிய ஆலை முதலாளிகளைத் தூண்டிவிட்டு வெளிநாடுகளிலிருந்து வரவழைக்க முடியாத சாமான்களை இங்கே தயாரிக்க ஏற்பாடு செய்தார்கள். அதை நம்பி, தொழிற்சாலைகளில் அனேக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இன்று அவைகள் தயாரிக்கும் சாமான்களே கவர்மெண்டாரால் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்றனவாம். மண்குதிரையை நம்பின கதையாய்விட்டதே என்று ஓலமிடுகிறார்கள் அகில இந்திய வர்த்தகர் சங்கத்தார். இதையெல்லாம் வரவழைப்பதைவிட இத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான சில யந்திரங்களையும் அதன் பாகங்களையும் ஏன் வரவழைத்துக் கொடுக்கக்கூடாது? கவர்மெண்டாரின் கொள்கை என்ன என்பதைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். பணப்பெருக்கத்தை நீக்க, கவர்மெண்டார் கையாளும் முறைகளில் இது ஒன்று.

பணப்பெருக்கத்தைப் போக்க மற்றுமொரு விசித்திரமான முறை பிரிட்டிஷ் அமெரிக்க கவர்மெண்டார்களின் சார்பாக இந்தியா கவர்மெண்டார் தங்கத்தை இங்கே கொண்டுவந்து விற்பது. நாட்டு மக்களில் சிலர், கவர்மெண்ட் பத்திரங்கள் எவ்வளவு லாபகரமாகவிருப்பினும், அவற்றில் பணத்தைப் போடுவது கிடையாது. தங்கம் முதலியவற்றில் பணத்தை முடக்கிவைத்துக்கொள்ளும் தன்மையுள்ளவர்களுடைய பணத்தையும் கழற்ற இந்தியா

கவர்மெண்டார் ஓர் வழிசெய்து வருகிறார்கள். இதுவும் மக்களிடம் உலவிவரும் அதிகப் பணப்பெருக்கத்தை ஒழிப்பதற்குத் தான்.

தென் ஆப்பிரிக்கா முதலிய பாகங்களிலிருந்து தங்கம் இங்கு கொண்டுவரப்பட்டு இந்தியாவிலுள்ள ரிஸர்வ் பாங்கியின் மூலம் விலை ஏற்றி விற்கப்படுகிறது. இப்பழக்கம் சென்ற 1943 ஆகஸ்டிலிருந்து நடந்துவருகிறது. இவ்வருடம் ஜனவரி மாதம் முடிய சுமார் 40,000 தோலாக்கள் எடையுள்ள தங்கம் தினம் ஒன்றுக்கு விற்பனை ஆவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. தென் ஆப்பிரிக்காவில் வாங்கும் விலைக்கும் இங்கு விற்கும் விலைக்கும் ஏராளமான வித்யாசமிருக்கிறது. குறைந்தபக்ஷம் ரூ 10-தான் அவ்வித்தியாசம் என்று வைத்துக் கொண்டாலும், தினசரி இவ்விற்பனையினால் ஏற்படும் லாபம் 4 லக்ஷம் ரூபாய். இதே பிரகாரம் ஆறுமாத காலமாக விற்பனையாகி வருகிறது. இந்த லாபமெல்லாம் இந்தியா கவர்ன்மெண்டாருக்கல்ல; பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும்.

இப்படி இந்தியாவின் பணப்பெருக்கை ஒழிப்பதாகச் சொல்லி பல வகைகளிலும் இந்தியாவின் பணத்தை விழுங்கிவரும் பிரிட்டிஷ் கவர்மெண்டாரை நாம் எப்படி நம்பமுடியும்? இந்தியா கவர்மெண்டார் என்பது பெயரளவில் வேறுபட்டிருக்கிறது; உண்மையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மறைமுகப் பெயரே அது.

பணப் பெருக்கை ஒழிப்பதாகச் சொல்லி மக்களின் பணத்தைச் சூறையாடுவதுதான் மிச்சம். இவற்றாலெல்லாம் நாட்டில் சீர்குலைந்துள்ள பொருளாதார நிலைமையை நிவர்த்திக்க முடியாது. தேசீய அரசாங்கம் பதவி வகிக்க வேண்டும். இல்லையேல் இந்தியாவின் கதி அதோகதிதான். கட்சி, பிரதிகட்சி பேசிக் கொண்டிருந்த — இதுவரை தேசீயத்திற்கு முட்டுக்கட்டையிட்டுக்கொண்டிருந்த — குமாரராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்கள் கூட இதை உணர்ந்துவிட்டார் என்பதைக் காண மனத்தில் சற்றே ஆறுதலும் அமைதியும் தோன்றியுள்ளன. நம் நாட்டிற்கு விடுதலை ஏற்படலாம் என்ற நம்பிக்கையும் பிறக்கிறது. பிரிட்டிஷ்காரர்களின் சூழ்ச்சியை அகற்ற எல்லோரும் ஒன்றுபடவேண்டும். ஏகோபித்துத் தேசீய அரசாங்கத்துக்குப் பாடுபட வேண்டும். ஜின்னாவும் தம் சுபாவத்தைக் கொஞ்சம் மறந்து உச்சியிலிருந்து மக்கள் மத்தியில் இறங்கினாரென்றால் ஏன் இது வெற்றிகரமாக நடைபெறாது? காலம் புத்தி புகட்டலாம். காலரூபியான இறைவன் அருள் புரிவானாக.

THE REGISTRAR OF BOOKS
20 MAR 1944
MADRAS

ஜவுளி தினுசுகள் தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

# சீதையும் கஸ்தூரியும் —வே. நாராயணன்

*[சிறைவாசஞ் செய்த கிளி பறந்து சென்றது; வேடன் முகத்திலே ஈ ஆடவில்லை. அக்கிளி பழஞ்சட்டையை உரித்தெறிந்துவிட்டுப் புது உலகத்தை நாடிப் பறந்துபோயிற்று, சுதந்திரத்தைத் தேடிக்கொண்டு. தன்னாதகணவர் நிலையை விள்ளுவார் யார்? அன்னை கஸ்தூரிபாய்க்குச் சில மாதங்களுக்குமுன்பே நெருக்கடியான நிலைநேர்ந்தது. காந்தி மஹானே முந்திக் கொள்வார்என்று உலகம் உன்னிற்று. ஆனால் அன்னையாரின் திருமங்கலியம் இறைவனிடம் மன்றாடி வெற்றி பெற்றது. அன்னை கஸ்தூரிபாய் தாம் பதிவிரதா சிரோன்மணி என்பதை இக்காலத்தார் நன்குணரவே விண்ணுலகெய்தினர் போலும்!*

*இவ்வன்னையார் "கற்புக் கடம்பூண்ட பொற்புடைத் தெய்வம்" என்பதை விளக்க ஸ்ரீ வே. நாராயணன் அவர்களால் எழுதப்பட்டுள்ள இச்சிறந்த கட்டுரை கீழே பிரசுரிக்கப்பெற்றுள்ளது. ப-ர்]*

விடிந்தால் இராமனுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம்; அன்று இரவு கைகேயி ராணி தசரத மன்னனிடம் தனக்களித்த இரண்டு வரங்களையும் நிறைவேற்றுமாறு கேட்கிறாள். முதல் வரம் இராமன் காட்டிற்குப் போய்ப் பதினான்கு வருஷம் வசிக்கவேண்டும் என்பது. இரண்டாவது வரம் பரதன் யுவராஜாவாக வேண்டும் என்பது. முதல் வரத்தைப்பற்றியே மன்னன் வருத்தமுற்றுத் தவித்தான். அதைக் கேட்ட இராமன் தான் என்னசெய்ய வேண்டும் என்பதைப்பற்றிச் சிறிதும் சிந்தனை செய்யவில்லை. உடனே காட்டிற்குச் சென்று தந்தையை ஸத்யஸந்தனாக்கவேண்டுமென்று தீர்மானித்தான். ஆனால் சீதையைக் கட்டாயப்படுத்தவில்லை. அதற்கு நேர்மாறாக, அவளிடம் வந்து, "தந்தையின் ஆணையைச் சிரமேற்கொண்டு நான் காட்டிற்குச்சென்று பதினான்கு வருஷம் கழிந்ததும் திரும்ப வருவேன்; அதுவரை மாமனார் மாமியார் முதலானவர்களுக்குச் சிச்ருஷை செய்துகொண்டு ஆறியிரு" என்று சொல்கிறான். "தங்களைப் பிரிந்து இருக்கமாட்டேன்; கட்டாயமாக என்னையும் கூட்டிக்கொண்டு போகவேண்டும்" என்று சீதை பிடிவாதஞ் செய்கிறாள்; இராமனைக் கட்டிக்கொண்டு கண்ணீர் வடிக்கிறாள். அப்பொழுது அவளைத்தேற்றி இராமன் சொல்கிறான்: "தேவி! உனக்குத் துயரம் தருவதாயின் நான் ஸ்வர்க்கத்தையும் விரும்பேன்; உன்னைக் காட்டிலே காப்பாற்றமுடியாதே என்ற பயம் எனக்கு இல்லை. ஆனால் உன்னுடைய அபிப்பிராயம் முழுவதையும் தெரிந்து கொள்ளாமல், உன்னைக் காட்டிற்கு அழைத்துச்செல்ல நான் விரும்பவில்லை. மைதிலீ! நீ என்னோடு காட்டிலே வசிப்பதற்காகவே பிறந்தவள்; உன்னை எப்படி அழைத்துச் செல்லாதிருக்கமுடியும்?" என்கிறான்.

கிறிஸ்து பிறந்து 1913 வருஷங்கள் ஆயின. பாரிஸ்டர் காந்தி தென் ஆபிரிக்காவிலே இருக்கிறார். முந்தின வருஷம்தான் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பெற்றது. தொடக்கத்திலே இவ்வியக்கத்திலே ஸ்திரீகள் இடம் பெறவில்லை. ஆனால் 1913-ஆம் வருஷத்தில் கிறிஸ்துவ முறைப்படியோ அல்லது விவாகப் பதிவு முறைப்படியோ மணஞ் செய்துகொள்ளாத தம்பதிகளைச் சட்டப்படி தம்பதிகளாகக் கொள்ளமுடியாது என்று சர்க்கார் தீர்மானித்தனர். இதனால் தென் ஆபிரிக்காவிலே குடியேறிய இந்தியர்கள், ஹிந்து ஆயினும் முஸ்லிம் ஆயினும் பார்ஸி ஆயினும் அவர்கள் மதப்படி செய்துகொண்ட விவாகம் செல்லமாட்டாது என்ற கொடுமை ஏற்பட்டது. இதன் காரணமாக ஸ்திரீகளையும் இயக்கத்திலே சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கருதி, காந்தி "டால்ஸ்டாய்" பண்ணையைச்சேர்ந்தசில ஸ்திரீகளை இவ்வியக்கத்திலே சேரும்படி அழைத்தார். தம் மனைவியை மட்டும் அழைக்கவில்லை; இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவும் இல்லை.

இச்செய்தியை அறிந்ததும், கஸ்தூரிபாய் காந்தியைப் பார்த்து, "இதையெல்லாம் என்னிடம்மட்டும் ஏன் சொல்லவில்லை? இந்த இயக்கத்திலே சேர்ந்துகொள்ள எனக்கு யோக்யதை இல்லையா? என்னிடம் நம்பிக்கை இல்லையா? மற்றவர்களை ஒப்ப, நானும் உழைப்பேன்" என்று கோபித்துக்கொண்டு கூறினாள். அதைக்கேட்ட காந்தி, "நான் உன்னைச் சிறிதும் துயரங்கொள்ளவிடமாட்டேன் என்பது உனக்குத் தெரியாதா? உனக்கா யோக்யதை இல்லை? உன்னிடமா நம்பிக்கை இல்லை? நீ சிறை புகுவாயானால் என் மனம் களிப்படையும். ஆனால் எனக்காக நீ இவ்வியக்கத்திலே சேரக்கூடாது; இம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவரும் தம் தம் மனச்சாக்ஷிப்படியும் மனோதைர்யப்படியுமே நடந்துகொள்ளவேண்டும்" என்றார்.

பதியும் பத்தினியுமானாலும் பலவந்தம் என்பது கூடவேகூடாது என்பதற்கு இந்தத் தம்பதிகளின் நடத்தையே பிரமாணம் அன்றோ?

இப்பொழுதுதான் அச்சாகியுள்ள "ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளின் லிகிதங்கள்" என்னும் நூலிலே மேற்கண்ட "ஸீதாராம ஸம்வாத" விஷயமாக 1928லே மஹாத்மா காந்திக்கும் கனம் சாஸ்திரிகளுக்கும் இடையே நிகழ்ந்த கடிதப் போக்குவரவு அச்சிடப்பெற்றுள்ளது. அப்பொழுது சாஸ்திரிகள் தென் ஆபிரிக்காவிலே இருந்தார். காந்திஜீ திருவாங்கூர் ஸம்ஸ்தானத்திலே ஸ்திரீகள் கூட்டமொன்றிலே பேசும்போது "ஸீதாதேவி ஸ்ரீ ராமனையும் மீறி அவரோடு காட்டிற்குச் சென்றாள். தக்க காரணம் இருந்தால் கணவனையும் மீறுவது கடமையேயாகும்" என்றாராம். "வால்மீகி ராமாயணத்திலே அப்படி இல்லை" என்று எடுத்துக்காட்டினார் கனம் சாஸ்திரிகள். அதற்குப்பதில், "நான் வால்மீகியை மொழி பெயர்ப்பிலேதான் வாசித்திருக்கிறேன். அதுவும் நன்றாக வாசிக்கவில்லை; துளசிதாஸரே எனக்குப் பிரமாணம்" என்றார் காந்திஜீ. பின்பு 1940ல் சாஸ்திரிகள், "தக்கர் பாபா துளஸீ ராமாயணத்திலும் உம்முடைய கொள்கைக்கு ஆதாரமில்லை என்கிறார்" என்று எழுதினார். மஹாத்மா "பாபா துளஸீதாஸரை விளக்குவதிலும் நிபுணர் என்று நான் ஒப்புக் கொள்ளவில்லை" என்று முடிவுகூறினார்.

# காதலர் தொடர்பு

வே. நாராயணன்

●

“விவாகம் தெய்விகமானது; கணவனுக்கும் மனைவிக்குமுள்ள காதல் தொடர்ந்து பல பிறப்புக்களிலே வருவது” என்பது நம்முடைய முக்கியமான நம்பிக்கைகளுள் ஒன்று. இந்நம்பிக்கை பழைய தமிழ்ப் பாடல்களிலேயும் காணப்படுகின்றது. தலைவன் ஒருவன் தலைவி ஒருத்தியைக் கண்டு காதலுற்றுப் பின்பு அவளை மணந்துகொண்டு இல்லற வாழ்க்கை வாழ்கிறான் என்பதைச் சுவைபெற வர்ணிப்பதே அகத்துறைப் பாடல்களின் நோக்கம். தெய்வச் செயலே காதலர் இருவர்களையும் சேர்க்கின்றது. அவர்கள் ஒருவரையொருவர் முதன் முதலிலே காணும்போது “பண்டு இவரைக் கண்டது எவ்விடத்தே?” என்ற சந்தேகம் இருவருக்கும் எழும்; இதற்குக் காரணம் முற்பிறப்பிலே இவர்கள் கணவனும் மனைவியுமாக வாழ்ந்து பிரிந்தவர்கள் என்றே கொள்ளவேண்டும். இக்கொள்கையைக் கம்பர் மிக அழகாக அமைத்துப் பாடியுள்ளார். “மிதிலை நகர்ப்புறத்திலுள்ள பூம்பொழிலிலே தோழிகளுடன் விளையாடிக்கொண்டிருந்த சீதையை, கௌசிக முனிவரின் பின்னே தம்பியோடு செல்கின்ற இராமன் நோக்கினான்; அவளும் நோக்கினாள். இருவருக்கும் உயிர் ஒன்றாகிவிட்டது” என்று கூறியபின், கம்பர்,

> “கருங்கடற்பள்ளியிற் கலவி நீங்கிப் போய்ப்
> பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ?”

என்று முடிவு கூறுகிறார்.

இவ்வாறு முற்பிறப்பின் தொடர்பினால் ஒருவரையொருவர் காதலிக்கும் காதலர் பிரிய நேரிட்டால் மறுபடியும் மறு பிறப்புக்களிலும் தாம் இருவருமே காதலர்களாக இருக்கவேண்டும் என்று விரும்புவது இயல்பு; இக்கருத்தையும் கவிகள் நன்றாகக் கையாண்டிருக்கிறார்கள். அம்மூவனார் பாட்டாகக் குறுந்தொகையிலே வரும் பாடல் ஒன்றிலே,

> “இம்மை மாறி மறுமை யாயினும்
> நீயாகியர் என் கணவனை
> யானாகியர் நின் நெஞ்சுநேர் பவளே”

என்கிறாள் தலைவி.

அதாவது, தலைவனும் தலைவியும் யதிருச்சையாய் ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டபின் பிரிகிறார்கள்; பிரிவாற்றாமையால், தலைவி காமத்தின் கடைசி அவஸ்தையான மரணாவஸ்தையை அடைகிறாள். அப்பொழுது தலைவன் அவளை வந்து காக்கவில்லை. ஆயினும், தலைவிக்குத் தலைவன்மீதுள்ள காதல் குன்றவில்லை. சாகுந்தறுவாயிலும், அவள் இந்தப் பிறப்பு மாறி மீண்டும் வேறொரு பிறப்பு நான் எடுக்க நேர்ந்தாலும், நான் மறுபடியும் பெண்ணாகப் பிறந்து உன்னைக் கணவனாகப் பெற விரும்புகிறேன்” என்று தன் தோழியிடம் கூறி அவனிடம் அறிவிக்கும்படி வேண்டுகிறாள். “இப்பொழுது நீ என்னை விரும்பாமல் என்னைக் காப்பாற்ற முன்வராமல் இருந்தாலும், அடுத்த பிறவியிலாவது என்மீது காதலுடையவனாய் என்னை மணந்து கொள்ள முன்வரவேண்டும்” என்று உருக்கமாக வேண்டினால், காதலனுக்குச் சுறுக்கென்றிருக்கும் அன்றோ?

இது போலவே, ஸ்ரீ ராமனைப் பிரிந்து இலங்கையிலே உயிர் வாடிய சீதைப் பிராட்டியும், தன்னைக் கண்டு தேற்றிய அனுமானை நோக்கி,

> “ஈண்டு நான் இருந்தின்னுயிர் மாயினும்
> மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத்
> தீண்டலாவதோர் தீவினை தீர்வரம்
> வேண்டினாள் தொழுதென்று விளம்புவாய்”

என்று கூறுகிறாள்.

“இராமனைக் காணலாம் என்னும் ஆசையாலேயே நான் இந்தச் சிறைவாசத்தையும் பிரிவையும் பொறுத்துக்கொண்டிருக்கிறேன். அதனாலேயே எனக்கு உயிர் இனிதாகத் தோற்றுகின்றது. இப்படித் தோற்றுகின்ற உயிரும் அதிக நாள் நிற்காது. உயிர் போனாலும், என் ஆசை என்னைவிடாது. மறுபிறப்பினும் உன்னையே கணவனாக நான் பெற வேண்டும். இப்போது அருளாத நீ அப்பொழுதேனும் அருளல் வேண்டும். என்னை மணஞ்செய்துகொண்டபோது, ‘இந்த இப் பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்’ என்று வாக்குக் கொடுத்தாய். நான் மறுபடியும் பெண்ணாகப் பிறந்து உன்னை அடைய விரும்பி வேண்டும்போது இவ் வரத்தை ஒரு சாக்காகக்கொள்ளக்கூடாது. வேறு மாதரையன்றோ தொடமாட்டேன் என்றாய். ஆதலின் அவ்வரம் தடையாகாது” என்று இவ்வாறெல்லாம் தூதனிடம் தேவி சொல்வதாகக் கம்பர் வர்ணித்திருக்கிறார்.

மனம் ஒன்றிய காதலர்களுக்கு, “நாம் இருவரும் முன் பிறவிகளில் எல்லாம் காதலர்களாகப் பிறந்தோம்; இனியும் அவ்வாறே இருக்க வேண்டும் என்று தெய்வத்தைப் பிரார்த்திப்போம்” என்ற நினைவே எப்பொழுதும் இருக்கும் அல்லவா? அதனாலே, காதலன் தன் காதலியிடம் இன்பப் பணிமொழிகள் பேசும்போது, ‘இம்மைப் பிறப்பில் பிரியேன்’ என்று சொன்னான் என்றால், அவன் மறுபிறப்

பிலே தன்னைப் பிரியப்போவதை நினைத்து வருத்தத்தால் அவள் கண்களிலே கண்ணீர் நிரம்பிவிடும் அல்லவா? இக் கருத்தையே திருவள்ளுவர்,

''இம்மைப் பிறப்பிற் பிரியலன் என்றேனுக்
கண்ணிறை நீர் கொண்டனள்''

என்னும் குறளிலே அமைத்திருக்கிறார்.

மணிமேகலை, சிந்தாமணி முதலிய பௌத்த ஜைனக் கதைகள் பலவும், 'காதம்பரி' முதலிய வடமொழிக் கதைகளும் மறுபிறவிகளிலும் தொடர்ந்துவரும் இவ்விதத் தொடர்பினை வற்புறுத்துகின்றன.

காதலர்களைப்போலவே, பக்தர்களும் 'பயிலும் பிறப்பிடைதோறும்' பரமனுக்கேபோல் பரமனைப் .பணிபவர்களுக்கும் ஆட்செய்ய விரும்புகின்றனர். ஆய்ப்பாடிச் சிறுமியர்களும் ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடுற்றோமே ஆவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்கிறார்கள். திருநாவுக்கரசரும்,

''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்
மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டும்''

என்று திருப்பாதிரிப்புலியூர்த் தோன்றாத் துணையான பரமனை வேண்டுகின்றார். இவ்வாறே காரிமாறப்பிரானும்,

''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமைசெய்ய வேண்டும்''

என்று சங்கற்பித்துக்கொள்கிறார்.

இவ்வாறே முகுந்தமாலை என்னும் வடமொழி ஸ்தோத்திரத்தின் ஆசிரியரும் கடவுளை நோக்கி ''இரண்டற்ற நிலையைப் பெறுவதின் பொருட்டு நான் உன்னை வணங்கவில்லை; நரகத்தை அடையாத படி தடை செய்ய வேண்டும் என்றோ சுவர்க்கத்திலே அரம்பையரோடுமகிழ வேண்டும் என்றோ வணங்கவில்லை. எப்பிறப்பாயினும், அப்பிறப்புத்தோறும் என் மனமாகிய கோயிலிலே தங்களைத் தொழுதெழவேண்டும் என்றே வணங்கிப் பிரார்த்திக்கிறேன்'' என்கிறார்.

இவ்வாறு தெய்வத்திற்கும் பக்தனுக்குமுள்ள தான இடையறாத தொடர்பினை, 'கண்ணன் பாட்'டிலே ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாரும் 'நாணிக்கண்புதைத்தல்' என்னும் துறையிலே அமைத்துப் பாடியிருக்கிறார். காதலனுடைய காமச்செயல்களைக் காண்பதற்கு நாணிக் காதலி தன் கண்களை மூடிக்கொள்கிறாள். அப்பொழுது, காதலன் ''என்ன கருத்தில் அடி கண் புதைக்கிறாய்? கண்ணம்மா! நான் தகாத செயல் என்ன செய்துவிட்டேன்'' என்று கேட்கிறான். ''நமக்கு இடையேயுள்ள காதல் புதிதன்றே'' என்கிறான். ''அதெப்படி?'' என்றால் சொல்லுகிறேன், கேள் என்று மேலே சொல்கிறான்.

சாத்திரக் காரரிடம் கேட்டுவந்திட்டேன்—அவர்
சாத்திரஞ் சொல்லியதை நினக்குரைப்பேன்.
நேற்று முன்னாளில்வந்த உறவன்றடி—மிக
நெடும் பண்டைக் காலம்முதல் நேர்ந்து வந்ததாம்.
போற்றுமிராமனென முன்புதித்தனை—அங்கு
பொன் மிதிலைக்கரசன்பெற்ற பூமடந்தை நான்,
ஊற்றமுதென்ன வொருவேய்ங்குழல்
கொண்டோன்—கண்ணன்
உருவம் நினக்கமையப் பார்த்தனங்கு நான்
முன்னை மிகப்பழமை யிரணியனும்—எந்தை
மூர்க்கந் தவிர்க்க வந்த நரசிங்கன் நீ
சொன்னவர் சாத்திரத்தில் மிக வல்லர் காண்
—அவர்
சொல்லிற் பழுதிருக்கக் காரணமில்லை.
இன்னும் கடைசிவரை ஒட்டிருக்குமாம்—இதில்
ஏதுக்கு நாணமுற்றுக் கண்புதைப்பதே.

இவ்வாறு, பாரதியார் ஜீவாத்மாவாகிய காதலனுக்கும் பரமாத்மாவாகிய காதலிக்கும் உள்ள நித்தியமான ஸம்பந்தத்தை நயம்பெற எடுத்துரைத்துள்ளார் பக்திரஸம் ததும்புகின்ற 'கண்ணன் பாட'லிலே. நாயக நாயகீ பாவமும் மித்திரபாவமும் தாஸ்ய பாவமும் இந்தநித்திய ஸம்பந்தத்தையே ஒருங்கே உணர்த்துகின்றன என்பதும் இப்பாடலாலே நன்கு விளங்குகின்றது.



# உள்ளும் புறமும்

"வாணி"

"அம்மணி! உங்களுக்கு என்னவேண்டும்?"

"கலெக்டரைப் பார்க்கவேண்டும். இந்தப் பெயர்ச் சீட்டை அவசியம் கொடுத்துவிட்டு வா".

சீட்டை வாங்கிச் சென்றவன் திரும்பிவந்து, "ஆபீஸுக்குப் புறப்படும் சமயம். ஆபீஸ் அறையிலேயே பார்க்கலாம். வாருங்கள்".

"நமஸ்காரம்" என்று கமலாவும் விமலாவும் கை குவித்தார்கள்.

"வாருங்கள் அம்மணி. உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று எதிரிலிருந்த நாற்காலிகளைச் சுட்டிக் காண்பித்துவிட்டு, தாமும் உட்கார்ந்து கொண்டார். பிறகு "என்ன விசேஷம்?" என்று கேள்வியுடன் மௌனத்தைக் கலைத்தார்.

"எங்கள் பள்ளிக்கூடத்தில் வருஷாந்தரக் கொண்டாட்டம். அதற்குத் தலைமை வஹிக்க உங்களுடைய..........." என்று முடிக்குமுன்.

"அதற்கென்ன என் சம்சாரம் அதை ஏற்று நடத்துவாள்; எனக்கு வெளியூர் போகவேண்டியிருப்பதால், நான்வர இயலாது" என்று சொல்லிவிட்டு, "மதால்சிங்!" என்று கூப்பிட்டார்.

"ஸார்!" என்று வெகு வினயமாக வந்து எதிரில் நின்றான்.

"இவர்களை அம்மாவிடம் அழைத்துச் செல்லு" என்று சொல்லிவிட்டு, எனக்கு நேரமாகிறது. மன்னியுங்கள், அவள் உங்களுக்கு வேண்டியதைச் செய்வாள்".

"இருவரும் வேலையாளைப் பின்தொடர்ந்தார்கள். விசாலமாக எடுத்துக் கட்டப்பட்ட கூடம். நடுவில் ஓர் ஊஞ்சல் தொங்கிக்கொண்டிருந்தது, சுற்றிலுமுள்ள நாலாபக்கத்துச் சுவர்களிலும், பெரிய மஹான்கள், தேசபக்தர்கள், சுவாமி, அம்பாள் முதலிய படங்கள் மாட்டப்பட்டிருந்தன. தற்கால நாகரிக அமைப்புடன் இல்லாவிட்டாலும், அந்த இடத்தின் தோற்றம் மனதிற்கு ரம்யத்தை அளித்தது. வேலையாளின் உபசரிப்பிற்கிணங்கி இருவரும் ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டார்கள்.

"பகவதி!" என அழைத்தான் மதால்சிங்.

"வெள்ளைக்கலை" உடுத்த மலையாள பகவதி எதிரில் வந்துநின்றாள்.

"அம்மாவிடம் இவர்கள் வந்திருப்பதைத் தெரிவித்து வா" என்று சொல்லிவிட்டு அவன் பாராவுக்குச் சென்றுவிட்டான்.

"கமலா! கலெக்டருக்குப் பெருமை, கர்வம் கொஞ்சங்கூட இல்லை. எவ்வளவு மரியாதையாகவும் பணிவாகவும் பேசினார். திருநெல்வேலி வேளாளர் மிகவும் நல்ல குணம் என்று கேள்விப்பட்டேன், ஆஹா! என்ன பெருந்தன்மை!" என்றாள் விமலா.

"இவர் சம்சாரம் எப்படியோ?" என்றாள் கமலா. அதற்குள் பக்கத்து அறையில் பூஜை மணிச்சப்தம் கேட்கவே, இருவரும் எழுந்து சென்று ஜன்னலின் வழியாக எட்டிப்பார்த்தார்கள். சுமார் நாற்பது வயது மதிக்கலாம். தாழம்பூ நிறம் என்று சொல்லுவார்களே அந்தநிறம். கறுத்து அடர்ந்த கேசத்தைக் கோடாலி முடிச்சுப் பிடரியில் படியப்போட்டு, அதைச்சுற்றிச்சிறிது மல்லிகைப்புஷ்பம் வைத்திருந்தாள். கறுப்புக்கலரில், சிகப்பும் ஜரிகையும் கலந்த பார்டர்போட்ட புடவையும், ரோஜாநிற ரவிக்கையும் அணிந்திருந்தாள். புடவைவேளாளர்பாணியில்உடுத்தியிருந்தாள். வளர்த்த காதில் திருநெல்வேலிப் பாம்படம், இட்டடுக்கி, தண்டட்டி, முடுகு, நாகபடம் ஆகிய ஐந்து நகைகளும், வைரம், சிகப்புக்கற்கள்டால்வீச, கழுத்தின் அரைப்பாகம் வரை தொங்கிக்கொண்டிருந்தன. கையில் ஏழெட்டுத் தங்கவளையல்களும், வைரம், சிகப்பு, பச்சை முதலிய வளையல்களும் அணிந்துகொண்டிருந்தாள். கழுத்தில் ஐந்து கொத்துச்சங்கிலி, பவுன்மாலை, கல்அட்டிகை முதலியவை மின்னின. நெற்றி முழுவதும் விபூதி பூசி, நடுவில் குங்குமப்பொட்டு வைத்திருந்தாள். கையில் தீபாராதனைத் தட்டுடன் நிற்கும் அவளின் தோற்றம், இவர்களின் மனதில் ஓர்வித பக்தியுணர்ச்சியை உண்டாக்கியது. கையெடுத்துக் கும்பிட்டார்கள். பிறகு மறுபடியும் ஊஞ்சலில்வந்து உட்கார்ந்துகொண்டார்கள்.

"அவருடைய தங்கைபோலிருக்கிறது. கர்நாடகம். கட்டுப்பெட்டி. அவர் சம்சாரம் எங்கே போயிருக்கிறாள்?" என்றாள் விமலா மெதுவாக.

"ஒரு வேளை நமக்குப் பேட்டியளிக்க டிரஸ் செய்துகொண்டிருப்பாள்".

சற்றுநேரமானதும், பூஜையறையிலிருந்த அம்மையார், இவர்களிருக்குமிடம் வந்து, வாருங்கள் அம்மணி" என்றாள்.

எழுந்து நின்றுகொண்டு மரியாதையாகக் கை குவித்தனர் இருவரும்.

"உட்காருங்கள்" என்று சொல்லிவிட்டு, அங்கே கிடந்த விசிப்பலகையில் தானும் உட்கார்ந்துகொண்டாள். பிறகு உங்களைக் காக்க வைத்துவிட்டேன் மன்னியுங்கள். அவர்கள் இப்போதுதான் போனில் கூப்பிட்டு நீங்கள் வந்திருக்கும் விஷயத்தைப்பற்றிச் சொன்னார்கள். சந்தோஷம் இப்படிப்பட்ட விஷயங்களில், எனக்கு மிக விருப்பம். தெலுங்கு ஜில்லாவில் கூட, என்னை வற்புறுத்துகிறவர்கள் பேச்சை நான் தட்டவில்லை. அவர்களும் இது விஷயங்களில் எனக்குப் பூரண சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள். ஆபீஸ் நேரமாகிவிட்டதால் அவசரமாகச் சென்றுவிட்டார்கள். இல்லையேல் அவர்களும் கூட இருந்து பேசுவார்கள்".

கமலாவும் விமலாவும் ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணம் திருதிருவென விழித்தார்கள். "ஸோபா நாற்காலியில், வர்ணப்படுதாக்கள் முதலிய அலங்காரங்களுடன்கூடிய ட்ராயிங்ரூமில் நாற்பதுவயதைக் கடந்தாலும், பிச்சோடாவில் அர்த்தசந்திர வளைவில் புஷ்பம் சூடி, இடது மணிக்கட்டில் ரிஸ்ட்வாச், வலது கையில் வைரம், சிகப்பு, தங்கம், கண்ணாடி வளையல்களும், முன்கொசுவப் புடவையும், லாங்செயின், மூக்குக்கண்ணாடி இந்த அலங்காரத்துடன் தங்களுக்குப் பேட்டியளிப்பாள் கலெக்டரின் மனைவி" என்று தங்கள் கற்பனை உலகில் கண்டுகொண்டிருந்தார்கள். நேர்மாறாகவே, ஏமாற்றத்தினால் வந்த விஷயத்தைக் கூட சொல்லச் சக்தியற்றுப்போனார்கள். சற்றுத் தைரியசாலியான விமலா, கமலாவின் துடையில் ரகசியமாகக் கிள்ளிவிட்டு "நீங்கள் ஒப்புக்கொண்டதைப்பற்றி மிகவும் சந்தோஷம்; உங்களைப்பற்றி யாவரும் மிகமிகச் சொன்னார்கள். இப்பொழுது அதுகூட அதிகமல்ல" என்று நினைக்கிறேன். வெள்ளிக்கிழமை சாயங்காலம் நான்கு மணிக்குத் தாங்கள் வரவேண்டும். ஏதோ ஓரிரண்டு வார்த்தைகளைப் பேசிவிட்டுப் பரிசுகளை வழங்கவேண்டும், அவ்வளவுதான்" என்று சாதுர்யமாகப் பேசுவதாக நினைத்துச் சொன்னாள்.

"தனது தோற்றத்தால் அவர்கள் ஏமாற்றமடைந்துவிட்டார்கள்" என்பதை அவர்களின் முகத்தோற்றத்தால் அறிந்துகொண்டு, நான் வெள்ளிக்கிழமை சாயங்காலம் அவசியம் வந்துவிடுகிறேன். நீங்கள் மறுபடியும் அழைக்க வரவேண்டும்" என்ற அவசியமில்லை என்றாள் ருக்மணியம்மையார் அந்தச் சமயத்தில்.

ஒரு தட்டுநிறையப் பழவகைகளைக்கொண்டு வந்து வைத்தாள் பார்வதி. அதை மரியாதையாக அவர்களிடம் கொடுத்தாள் அம்மையார்.

"இதெல்லாம் என்னத்திற்கு, வேண்டாம், நாங்கள் தூக்கிச்செல்லுவது சிரமமாயிருக்குமே" என்றாள் விமலா.

"மதால்ஸிங்! இதை இவர்களுடன் சென்று வீட்டில் கொடுத்துவிட்டு வா" என்று கூப்பிட்டுச் சொல்லிவிட்டாள் அம்மையார்.

ஃ ஃ ஃ

"என்னடீ! பெண்டுகளா! இவ்வளவு நாழிகையாக எங்குச் சுற்றினீர்கள். நல்ல கொண்டாட்டம். அதன் தலையில் சாக்கைப் போட்டுவிட்டு வீட்டில் தங்காமல் சுற்றுகிறீர்களே. கேள்வி கேட்பார் இல்லையென்ற தைரியமா?" என்று கேட்டுக்கொண்டே முன்பக்கம் வந்தாள் கமலாவின் சித்தியும் விமலாவின் அத்தையுமான பார்வதியம்மாள். தட்டுநிறையப் பழங்களைப் பார்த்ததும் இது ஏது? எதற்காக வாங்கினீர்கள்? என்று கேட்டாள்.

நாங்கள் வாங்கவில்லை சித்தி; கலெக்டரின் சம்சாரம் ஆள்மூலமாகக் கொடுத்தனுப்பினாள்" என்றாள் கமலா.

"எதற்காக அனுப்பினாள்? அவளை உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அதையேன் கேட்கிறாய் அத்தை! நாங்கள் இன்று முழுமுட்டாள்தனமான காரியம் செய்துவிட்டோம். தலைவி முழுநம்பிக்கையுடன் இவ்வேலையை எங்களிடம் ஒப்புவித்தாள். அது என்னவாயிற்றென்றால் பிள்ளையார் பிடிக்கப்போகய் குரங்காய் முடிந்தது" என்றாள் விமலா.

"என்னடீ! இதற்கு என்ன செய்வது? எனக்கு ஒன்றுமே ஓடவில்லையே! என்னடீ புதிர் போடுகிறீர்கள், என்ன விஷயம்? உங்களுக்குக் காவலாக என்னை இவ்விடம் ஸ்தாபனம் செய்திருக்கிறார்கள். நீங்கள் என்னவென்றால் என்னைச் சட்டைபண்ணாமல் இஷ்டம்போல் நடக்கிறீர்கள். நீங்கள் இருக்கும் நிலைமையைச் சிந்திக்கவில்லை. ஏதோ விதிக்குறைவு நேர்ந்துவிட்டது. அடிமைப்பட்டு, எங்களைப்போல் வீணுக்கு யாவருக்கும் உழைத்து, கெட்ட பெயரும் வாங்கவேண்டாமென்று, உங்கள் பெற்றோருடன் சண்டையிட்டுப் படிக்க வைத்து, முயற்சிசெய்து வேலையும் பண்ணி வைத்து, உங்கள் பாதுகாப்பிற்கு நான் ஜவாப்தாரி யென்று நான் உங்கள் பெற்றோருக்கு வாக்குறுதியும் கொடுத்து உங்களுடன் பொழுது கழித்துவந்தால் உங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு மாதிரியாக வருகிறதுபோல் இருக்கிறது" என்றாள் கடுமையாக.

"என்ன அத்தை, ரொம்ப கோபிக்கிறீர்களே? உங்களுடைய நல் முயற்சியால்தான் அடிமை வாழ்வில் அகப்படாமல் நிம்மதியுடனிருக்கிறோம். இது விஷயம் நீங்கள் சொல்லிக் காட்டுவது இது நூறாவது தடவை. உங்கள் புண்ணியம்தான் யாவும். நாங்கள் உங்களை அலக்ஷியம் பண்ணவில்லை. முக்யமான காரியமாகத்தான் சென்றோம். விஷயத்தை முழுவதும் கேட்டுவிட்டுப் பிறகு கண்டியுங்கள்"

என்று தாங்கள் கலெக்டர் வீடு சென்ற விபரத்தைச் சொன்னார்கள்.

"இதிலென்ன அதிசயம்? முட்டாள்தனம்? அவள்தான் ஒத்துக்கொண்டுவிட்டாளே?" என்றாள் பார்வதி.

"ஐயோ சித்தி! முழுக்கட்டுப்பெட்டி. அவளுடைய அலங்காரத்துடன் சபையில் வந்துவிட்டால் அவ்வளவுதான். தோளில் இடிக்கும்படியான காது நகைகள், தொள்ளைக்காது, ரோலில் அடுக்கினாற்போல் கைவளையல்கள் முழங்கை வரை: இதுதான் போகட்டுமென்றாலும், பரிசு கொடுப்பது என்பதுகூடத் தெரியுமோ என்னமோ? ஐயோ லக்ஷணமே, இந்த நாற்பத்து நாலாம் ஆண்டில்கூட கலெக்டரின் மனைவி இந்நிலையில் இருக்கிறாளே" என்றாள் கமலா.

"ரொம்பச் சொல்லாதேடி; முகத்தில் ஸ்ரீ விலாஸம் பொங்குகிறது, என்ன சாந்தம்? நல்ல குணம். கர்நாடக சம்பரதாயத்தைக் கடைப்பிடிக்கிறாள். அவ்வளவுதான். ஆனால் தலைமை வகிக்க ஒத்துக்கொண்டிருக்கவேண்டாம். இனிமேல் என்ன செய்வது? அவள் பெரிய உத்யோகஸ்தரின் மனைவி. அவளை அழைத்துவிட்டு வேறொருவரை நியமிப்பது அக்கிரமம். நடக்கிறபடி நடக்கட்டுமென்று ஈசன்மேல் பாரத்தைப் போடவேண்டியதுதான்" என்றாள் விமலா.

"ஒன்று வேணுமானால் செய்யலாம். அன்றைக்கு உடம்பு சரியில்லையென்று வீட்டில் தங்கிவிடுவோம். அங்கு இந்தக் கட்டுப்பெட்டி ஏதாவது உளறினால் நாம் தலைவி முகத்தில் எப்படி விழிப்பது?

"சே, அது கோழைத்தனம். தைரியத்துடன் முன்னேக்கிச் செல்லவேண்டும். நல்லதோ கெட்டதோ, நாம் செய்ததை ஒப்பும்படி செய்துவிடவேண்டும். ஒன்று செய்வோம், அன்று பேசவேண்டிய விஷயத்தை எழுதித் தயாரித்து வைத்திருப்போம், அவளுடைய உத்தரவுப்படி நாம் படிப்பதாகச் சொல்லிவிடுவோம். அவளுக்கும் கௌரவம் கொடுத்ததாகும். நமது மதிப்பும் குலைந்துபோகாது" என்றாள் விமலா.

நாம் சொல்லிவிட்டோம் சுலபமாக. ஆனால் அவள் அதற்குச் சம்மதிக்கவேண்டாமா? சபையில்வைத்து வாதாடமுடியுமா? ஏதோ வகையாய் மாட்டிக்கொண்டுவிட்டோம். இதுவரையில் தலைவியினிடத்தில் பெற்றிருந்த நன்மதிப்பை, இந்த விஷயத்தினால் அடியுடன் இழக்கப்போகிறோம்" என்று சொல்லும் பொழுதே இருவருக்கும் துக்கம் நெஞ்சை அடைத்தது.

இதுவரை இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த பார்வதி "ஏதுக்கடி மூக்காலழுகிறீர்கள்? ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும்? தறிதலைகள். தலைவியினிடமே பொறுப்பை விட்டுவிடுவதற்கென்ன? இப்பொழுதே போய் விஷயத்தை அவளிடம் சொல்லி வாருங்கள்"

"அதுதானே தொல்லை. இப்பொழுது தலைவி ஊரிலில்லை. திடீரென்று அவள் தங்கை இறந்ததாகத் தந்தி வந்து புறப்படும்பொழுது எங்களிடம் இப்பொறுப்பு முழுவதையும் ஒப்புவித்தாள். நிகழ்ச்சியன்று காலையில்தான் அவள் வருவாள்" என்றாள் விமலா.

"சரி. இப்பொழுது உங்கள் பயமெல்லாம் அவளுக்குஒன்றும் தெரியாது" என்பதுதானே. அவளது தோற்றத்தைக் கண்டு இவ்வித அபிப்பிராயங் கொள்ளுகிறீர்கள். ஏன் அவள் படித்தவளாக இருக்கக்கூடாது? உங்களைப் போல் பள்ளிக்கூடம் போய்ப் படிக்காவிட்டாலும் நல்ல தமிழ்க் காவியங்களை வீட்டிலிருந்தே கற்றிருப்பாள். அதனால் வாக்கு வன்மையும் பெற்றிருக்கலாம். பார்வைக்கு விஹாரமுள்ள முள்ளைப்படைத்த பலாப்பழத்தின் உள்ளேதான் மிக்க ருசியுள்ள, சுளைகள் கிடைக்கின்றன. உள்ளும் புறமும் ஒன்றுபோலிருக்குமா? எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? அசடுகளா! எதற்காக வீணாக அலட்டிக் கொள்ளுகிறீர்கள். எல்லாம் மேன்மையாகவே நடக்கும். இனி நடக்கவேண்டியதைப் பாருங்கள். இப்பொழுது சாப்பிட வாருங்கள்" என்றாள் பார்வதி.

"விமலா! சித்தி ஒரு போடு போட்டாள். ஒரு சமயம் அவள் வாக்கு யக்ஷிணியாகப் பலித்துவிடுமோ என்னவோ? சித்தி இதுதான் பெரியவர்களின் துணை வேண்டுமென்பது. உன் சொல்லால் மனதில் தைரியம் ஏற்பட்டுவிட்டது. கவலையில்லாமல் வேலை செய்யலாம்" என்றாள் கமலா.

"அத்தை! வாஸ்தவம். எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? நாங்கள் வேண்டுவது ரத்னம் படைத்த நாகப்பாம்பே. என்ன பயம்? நன்மைதான் நடக்கும். எந்த விஷயத்திலும் உங்கள் துணையும், சொல்லுமே எங்களைப் பாதுகாக்கின்றன" என்றாள் விமலா.

ஃ ஃ ஃ

அன்று மாலா மந்திரவித்யாலயம், மரங்கள், செடி கொடிகள் முதலிய யாவும் ஜகஜ்ஜோதியான கலர் பல்புகளுடன், தீபாலங்காரமாக விளங்கின. தேவேந்திர சபைபோல் என்பார்களே அதைப்போல் அலங்கரிக்கப்பட்டிருந்தது, அம்மண்டபம். கற்றறிந்த பெரியார்கள் முன்வரிசையை அலங்கரித்தனர். சரியாக ஐந்தரைமணிக்கு ருக்மணி அம்மையார் வந்துவிட்டார். அவளைக் கண்டதும் தலைவியின் முகம் ஏமாற்றத்தைக் காட்டியது. கமலாவையும், விமலாவையும், கடுமையான பார்வையால் தண்டித்தாள். அம்மையார் ஆசனத்திலமர்ந்ததும், யாவரும் கரகோஷம் செய்தனர். சிலர் கசுமுசுவென்று அவளது தோற்றத்திற்காக இகழ்ந்து பேசிக்கொண்டார்கள்.

மாலை மரியாதைகள் நடந்தன. வருஷாந்தர ரிப்போர்ட் படிக்கப்பட்டது. பிறகு, பரத நாட்டியம், நாடகம், கோலாட்டம், கும்மி, மாணவிகள் பேச்சு முதலிய கொண்டாட்டங்கள் வரிசைப்பிரகாரம் நடந்தேறின. பரிசு வழங்கும் சமயம்.

"இதில் எழுதியிருக்கும்படி வழங்கவேண்டுமா? அல்லது நான் பார்த்த வெற்றிக்கு என் இஷ்டப்படி வழங்கலாமா?" என்றாள் அம்மையார்.

"பக்கத்திலிருந்த பெரியோர் ஒருவர், ஏன் உங்கள் இஷ்டப்படி வழங்கலாமே" என்றார். தலைவியும் வழியின்றி ஆமோதித்தாள். அவர்கள் எழுதியிருந்ததற்கு நேர்மாறாக, யாரார் அன்று வெற்றியுடன் நடந்தார்களோ, சபையின் கவனத்தைக் கவர்ந்தார்களோ, அவர்களுக்குப் பரிசு கிட்டியது. இதுபற்றிப் பெரியோர்களும், மாணவிகளும் திருப்தியடைந்தனர். அம்மணி உங்கள் செய்கை மெச்சத்தக்கதே" என்றார் ஓர் அறிஞர்,

பேசுவதற்காக எழுந்து நின்று சகோதர, சகோதரிகளே என்றாள் அம்மையார். யாவரும் ஒரு முகமாக அவளையே பார்த்தனர். அவளது அசம்பாவிதமான பேச்சிற்குக் கை தட்டச் சிலர் காத்திருந்தனர். விமலாவும், கமலாவும் காகித மடிப்பு ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு, எந்தச் சமயமும் படிப்பதற்கு ஆயத்தமாக நின்றார்கள்.

"பெண்களின் கல்வி விஷயத்தில் நான் எந்த விதமான முறைகளை என் கற்பனையில் எதிர்பார்த்தேனோ, அந்த முறைகள், இந்தக் கலாசாலையில் நடந்துவருவதைப் பார்க்க என் மனம் அளவற்ற பூரிப்பை அடைகிறது. ஆங்கிலம், சரித்திரம், கணக்கு, பூகோளம் என்ற இவைகளுக்கு முக்ய ஸ்தானம் கொடுப்பதை விட, சித்திரம், சங்கீதம், தையல், பொது நோக்கம் இவைகளைக் கவனிப்பது நம் பெண்கள் சமூகத்திற்கு மிகத்தேவை. 'பள்ளிப் படிப்பு புள்ளிக்குதவாது' என்ற பழமொழியைப் பொய்யாக்கிப், பழக்க வழக்கங்களையும், குடும்ப நிர்வாகங்களையும்பற்றிப் போதிப்பது அவசியமானது. முன்னெல்லாம், பத்து வயதுடன் பள்ளிப் படிப்பு முடிந்து விடும். அதனால், பெண்கள், குடும்ப விவகாரங்களில் தேர்ச்சிபெறுவது தாய்மார்களின் பொறுப்பாக இருந்தது. தற்காலங்களில், பதினாறுவது வயதில், பள்ளிப் படிப்பு முடிவடைவதே மிகக் குறுகிய காலம் எனப்படுகிறது. இதனால், தாயின் பொறுப்பையும் உபாத்தியாயினிமார் ஏற்கவேண்டுவது அவசியமாகிறது. கடமையை நிறைவேற்ற வேண்டும். பழக்க வழக்கங்களில், ஒழுக்கம், பழகும் தன்மை, இவை முக்யம். சில பெண்களுக்கு இயற்கையாக இக்குணம் அமைந்திருக்கும். சில பெண்களுக்கு எடுத்துக் காட்டிச் சொன்னால்தான் தெரியும். முன்னவர்களுக்குப் போதனை அவசியமில்லை. பின்னவர்களுக்கு முக்யமாகிறது. அதனால் பொதுவாகச் சொன்னால் யாவருக்கும் நல்ல படிப்பினையாகும். மன உறுதியுடன் சிறந்த பழக்கங்களை, நமது நிர்ப்பந்தத்திற்காகச் செய்து வந்தால், பின்னால் அப்படிச்செய்வதே பழக்கமாகிறது. எதிர்காலத்தில் இவ்விஷயங்கள் அவர்களுக்கு நன்மையளிக்கும்.

"இது விஷயங்களில் தாய்மார்களும் கவனம் செலுத்தவேண்டும். 'என் பெண்ணிற்குப் பள்ளிக்கூடம் போகவும், படிக்கவும் நேரமில்லை. அவளுக்கு என்ன தெரியும்? வயிறு நிறையச் சாப்பிடக்கூட தெரியாது' என்று சிலர் பெருமையாகச் சொல்லிக்கொள்ளுவதைக் கேட்டிருக்கிறோம். அது மிகவும் அறிவற்ற செய்கை. வீட்டுவேலை செய்ய அவர்களுக்கு நேரமில்லாவிட்டாலும், நாலு விஷயங்களும் அவர்கள் கவனத்திற்கு வர வசதியளிக்கவேண்டும். வரவு செலவுகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் விஷயத்திலும், பெரியோர், விருந்தாளி, இவர்களிடம் பழகும் விஷயத்திலும், அவர்களுடைய உதவிகொண்டே செய்து வரவேண்டும். சோம்பலில்லாமல் நாலா பக்கமும் கவனிக்கும் தன்மை இளவயதில் ஊன்றி விட்டால் அது மாறவே மாறாது என்பது போன்ற விஷயங்களைப்பற்றி, தங்குதடங்கலின்றி, 'சரமாரி' என்பார்களே அதுபோல, வெகு அமைதியாகப் பேசினாள். இரண்டு கைகளையும் கட்டிக்கொண்டு அவள் மேடை மீது நிற்கும் தோற்றமும், சொற்களும், யாவரையும், சித்திரப் பாவையைப்போல் செய்து விட்டன. மேலும், மேற்கோளாக, திருக்குறள், நாலடியார், சிந்தாமணி, கம்பராமாயணம், இவைகளிலிருந்து செய்யுட்களை, ராகத்துடன் எடுத்துச் சொல்லி, அர்த்தத்தை விளக்கியும், சாகுந்தலம் போன்ற, ஸம்ஸ்கிருத காவியத்தின் சுலோகங்களை வெகு ஸ்பஷ்டமாக எடுத்துச் சொல்லியும் பேசியபொழுது சபையில் கரகோஷம் மிக எழுந்தது.

பேச்சு முடிந்ததும், அங்கு வந்திருந்த பெரியோர்கள், தமிழ் மணிகள் யாவரும் அம்மையாரின் கல்வியறிவைப்பற்றி பிகக்கொண்டாடினார்கள். "இவ்வம்மையாரைத் தலைமை வகிக்கத் தேர்ந்தெடுத்த உங்கள் முன் யோசனை மிகப் பாராட்டத்தக்கதே. இன்று ஓர் அரிய சந்தர்ப்பத்தை எங்களுக்கு அளித்தீர்கள்" என்று தலைவியினிடம் கூறினார்கள்.

"பெரியீர்! இப்பொறுப்பின் பெருமை முழுவதும் என்னைச் சேர்ந்ததல்ல. அப்பணியை ஏற்று நடத்தியவர்கள் விமலாவும் கமலாவுமே. அதன் பெருமை அவர்களுக்கே உரியது. அம்மையாரைப் பார்த்ததும் நான்கூட சற்றே தயங்கினேன். "நத்தையில் முத்து" என்பதைப் பிறகு உணர்ந்தேன் என்றாள் தலைவி.

யாவற்றிற்கும், ஓர் புன்னகையினால் பதிலளித்தாள் அம்மையார்.

"அத்தை சித்தி!" என்று ஏககாலத்தில் கூப்பிட்டுக்கொண்டே குழந்தைகள் போல ஓடிவந்தார்கள் விமலாவும் கமலாவும்.

"என்னடீது, என்ன அமர்க்களம்?" என்றாள் பார்வதி.

"நீங்கள் எப்பொழுது விட்டிற்கு வந்தீர்கள் முன்னாடியே வந்துவிட்டீர்களாக்கும்."

"அவள் பேச்சு முடிந்ததும் வந்துவிட்டேன். எவ்வளவு அரிய விஷயங்களைப்பற்றிப் பேசினாள்? கட்டுப்பெட்டியில்தான் மட்டற்ற மாணிக்கம் இருந்தது, இந்தக்காலத்தில் வெளிப் படாடோபமே முக்யம்!" என்றாள் பார்வதி.

"உன் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும். சித்தி! உள்ளும் புறமும் ஒன்றுபோலிருக்கவில்லையம்மா. உன்னால் இன்று எங்கள் மதிப்பு ஒருபடி உயர்ந்தது" என்றாள் கமலா.

"மண் புற்றில், நாகரத்தினத்தைக் கண்டெடுத்தோம். அத்தை உங்கள் தைரிய மொழியே எங்களை முன்னேறச் செய்தது. 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.' எங்கள் தலைவியின் பாராட்டுதலையும் நாங்கள் எட்டிக்கூட பார்க்கமுடியாத, அரிய தமிழ்ப் புலவர்கள் பெருமானுடைய பாராட்டுதலையும் பெற்றோம்; கமலா, அன்று உறக்கம்; இன்று உற்சாகம், என்று இருவரும் குதூகலத்துடன் மத்திமூத்தார்கள்.


மேதாஸ்

"சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

K. S. மேதா & கோ., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு:—

ஸென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,

ஸெகண்ட்ராபாத்.

# காலம் மாறிவிட்டது

கி. பி. முதல் நூற்றுண்டு

கடியாரங்கள்








பீஜோ ஸெமி தின் - 11" சைஸ்

பேடன்ட் எவர்பிரைட் ஸ்டீல் ரூ. 150/-
18 காரட் முழுத் தங்கம் ... ரூ. 365/-



பிஜோ ஸெலக்ட்

பேடன்ட் எவர் பிரைட் ஸ்டீல் ரூ. 175/-
18 காரட் முழுத் தங்கம் ... ரூ. 475/-

சாமான்கள் சரிவர வராததினுல் விளம்பரப் படுத்திய மாடல்களை சப்ளை செய்ய இயலாது. ஸ்டாக் உள்ளவரை சப்ளை செய்வோம்.

## 20வது நூற்றுண்டு

நீர்காலமானிகளை விட மணி அல்லது ஸாண்ட் கிளாஸ்கள் சரியான மணியைக் காட்டியதால் அவை ரோமர்கள் காலத்திலும் அதற்கு முன்னுலும் உபயோகிக்கப்பட்டு வந்தன. 20ஆம் நூற்றுண்டிலோ சாஸ்திரீயமான, அடக்கமான, நம்பத்தகுந்த, வசீகரமான ஒரு கடிகாரம் அவசியம். இந்த அவசியத்தை பல ரகங்களில் விற்கப்படும் வெஸ்ட் எண்ட் கடிகாரங்கள் சரிவர பூர்த்தி செய்கின்றன. இலவச காட்லாக்கிற்கு எழுதவும்.

# வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.

பம்பாய் – கல்கத்தா

# WEST END WATCH Co.

*Bombay - Calcutta*

# மந்திரிசபை நினைவுகள்

தி. சே. சௌ. ராஜன்

III

"குண்டூரில் காலரா நோயின் கடுமையைப் பம்பாயிலிருந்து திரும்பும் காலையில் நானே நேரில் போய்ப் பார்த்துவரலாமென நினைத்தேன். அதற்குள்ளாக நீயே பார்த்துவிட்டு வந்தது நல்லது" என்றார் ராஜாஜி. தமது இலாகாக்களின் வேலை அவருக்கு அளவிடமுடியாமலிருந்து கொண்டிருந்தது. அவருக்கு அனுப்பப்படும் பொருள் இலாகா, உயர்தரப்பட்ட ஊழியர்கள் இலாகா, மற்ற மாகாண, இந்திய கவர்ன்மெண்டார்கள் சம்பந்தப்பட்ட சகல கட்டுக்கள், எல்லாவற்றையும் ஒன்று விடாமல் ஊன்றிப் படித்து, அததற்கேற்ற குறிப்புக்கள், கேள்விகள் முடிவுகள் எழுதுவதில் அவருக்கு இணை ஒருவருமில்லையென்றே சொல்லலாம். அவருடைய குறிப்புக்கள் சர்க்கார் இலாகாக்களுக்கு ஒரு பெரும் வியப்பாக இருந்தது. வக்கீல் தொழில் செய்து, அரசியல் உலகத்தில் புரண்டு உழைத்துவந்த அவருக்குச் சர்க்கார் கார்ய நடவடிக்கைகள் எவ்விதம் வேலைக்கு வந்த முதல்நாளே ஏற்பட்டதென்பதுதான் இந்தவியப்பிற்குக்காரணம். மந்திரி வேலைக்குப் பகுத்தறிவு, நியாய உணர்ச்சி, தேசியக் கட்சிப் பற்றுக்களிலிருந்து விலகி நிற்கும் மனத்துடன் சீர் தூக்கிப் பரிசிலனை செய்யும் முறை இவைகளல்லாம் தேவை. தமது உணர்ச்சிகளை இயன்றமட்டில் உள்ளடக்கும் தன்மை வாய்ந்த ராஜாஜி முதன் மந்திரியாக வேலை செய்யும்பொழுது எவ்வளவு தூரம் இப்பெருந் தகைமையைக் கைப்பற்றினார் என்பது அவருடன் ஒத்துழைத்த சிலருக்குத்தான் தெரியும். ரூபாய் ஐந்நூறு சம்பளம் வாங்கிய பிரதம மந்திரியாய் வேலையில் உழைத்த ஊக்கத்தையும், விடாமுயற்சியையும், மற்ற எந்தத் தொழிலிலும் அவர் செலவிட்டிருப்பாரேயாகில் அவருக்குக் கிடைத்திருக்கக்கூடும் புகழிற்கும், செல்வத்திற்கும் அளவுகூறமுடியாது. அவர் செய்த வேலைத்திறன் அவர் இலாகாக்கள்மட்டில் நின்றுவிடவில்லை. மற்ற ஒன்பது மந்திரிகளின் பொறுப்பையும், மந்திரிசபையின் ஒருமித்த நடவடிக்கைகளின்மூலம் ஆட்சி நடத்தவேண்டிய முறையில், தாமே வகித்து வந்தார். மந்திரிசபை ஒருபுறம், கவர்னரும் அவரது காரியதரிசிகளும் மற்றொருபுறம், பொது மக்கள் சேவையும், அவர்களுக்குச் சேவைபுரிவதற்கென ஏற்படுத்தப்பட்ட அதிகாரிகளின் போக்கும், சட்டசபைகளுக்கான வேலைகளும் இவைகளையெல்லாம் சரிவர நடத்தவேண்டிய முறைகளும் எல்லாம் அவரைச் சார்ந்தன. இருப்பினும் நோய்வாய்ப்பட்ட மக்களிடத்து அவர் செலுத்திய கருணையும், கவலையும் எனக்கு ஓர் தூண்டுகோல்போலாயிற்று.

"நம் கீழ் வேலை செய்யும் உத்யோகஸ்தர்களுக்கு நம்மிடத்து அன்பும் ஆதரவும் வேண்டும். நமது வேலை அவர்களுடைய நன்மதிப்பின்றி நல்ல பயனளிக்காது. அவர்கள் செய்யவேண்டிய வேலையில் நாம் கண்டிப்பாக இருந்தாலும், அவர்கள் பல வருஷங்களாக ஓர் முறையில் வேலைசெய்து வந்தவர்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆகையால் அவர்களை நடத்தும் முறையில் முன்பின் நடவடிக்கைகளையும் கவனித்துச் சீர் தூக்கிப் பார்க்கவேண்டும்" என்பது ராஜாஜியின் கொள்கை. இதை அடிக்கடி என்னிடம் வற்புறுத்துவார். "குண்டூரில் இருந்துவந்த சுகாதார அதிகாரிக்கு வேலை தெரியவில்லை. அவருடைய திறனின்மையால் நூற்றுக்கணக்கான மக்களை நாம் இழந்துவிட்டோம். இப்படிப்பட்ட அதிகாரி பொதுஜன விரோதி" என்பது எனது முடிவு. ஆனால், அவர் பதினெட்டு வருஷங்கள் வேலை செய்திருக்கிறாரே, அவர் பேரில் இதுவரை தவறு ஏற்பட்டதாக ரிகார்டுகள் ஒன்றையும் காணோம், இந்த விஷயத்தில் தவறு எப்படி ஏற்பட்டதென்பதை விசாரித்துப் பிறகு என்ன செய்யலாமென்று தீர்மானிக்கவேண்டு

மென்பது ராஜாஜி முடிவு. வைத்தியத்தில் நல்ல அனுபவம் ராஜாஜிக்கு உண்டு. வைத்தியர்களிடத்தில் ஒரு காலத்தில் அவருக்கு அபார நம்பிக்கையுமுண்டு. தீராத ஒரு நோயால் பல வைத்தியர்களிடம் பல வருஷங்கள் அவதிப்பட்டிருக்கிறார், கடைசியாகத் தமது யுக்தியினால் அதினின்றும் விடுபட்டார். சுகாதார முறைகளை நன்குணர்ந்தவர். நோய் வந்து அவதிப்படுவதைக் காட்டிலும் அவை வராமல் தடுப்பது நல்ல முறையென்பதும் அவருக்கு நன்கு தெரியும். மந்திரிகளும், சட்டசபைகளும் பொது மக்களின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டன. ஆட்சியென்பது ஒரு வண்டியை ஒத்தது. அந்த வண்டியை ஓட்டுபவர்கள் மந்திரிகள். அதில் கட்டப்படும் மாடுகள் அதிகார வர்க்கத்தார்கள். வண்டியில் ஏறிப் பிரயாணம் செய்பவர்கள் பொதுமக்கள். வண்டியைச் சரிவர ஓட்டிப் பிரயாணிகளை ஒழுங்காகப் போகுமிடத்திற்குக் கொண்டு போகவேண்டியது மந்திரிகள் சட்டசபைகள் இவர்களின் பொறுப்பு. மாட்டின் தன்மையை அறிந்து, அதை நடத்துபவன் நல்ல கெட்டிக்கார வண்டியோட்டி ஆகிறான். மாட்டைக் கொண்டி மாடாக ஆக்கி, வண்டியையும் பிரயாணிகளையும் கவிழ்த்து விடுபவன் நல்ல வண்டியோட்டி ஆகமாட்டான். நல்ல பாதை செய்து,பாலங்கள்போட்டுப் பிரயாணத்தைப் பயமில்லாமல் செய்பவை சட்டசபைகள். இந்த முறையில் நாம் வேலை செய்ய வேண்டுமெனப் பலமுறை ராஜாஜி, மந்திரிசபையிலும் சட்டசபையிலும் சொல்லியிருக்கிறார். பத்து வண்டி ஓட்டிகள் சேர்ந்து நடத்தியதுதான் சென்னை அரசாங்க ஆட்சி. இதேமுறையில் நாங்கள் வேலை செய்தோம். ஆட்சியாகிய பிரயாணத்தில் வண்டியோட்டிகளில் சிற்சில சமயங்களில் அபிப்பிராய பேதம் இருந்ததுண்டு. ஆனால் அவை வண்டியைக் கவிழ்த்து விடக்கூடிய முறையில் நடைபெறவில்லை. இந்த விபத்துக்கள் ஏற்படாவண்ணம் பாதுகாத்து வந்தபெருமை ராஜாஜியினுடையது.

அரசாங்க முறைக்கு அடிப்படையான தத்துவம் வரவு செலவு கணக்கு. பல துறைகளில் வரக்கூடிய வருமானம், பல இனங்களின் செலவு, செலவிற்குத்தகுந்தாற்போல வருமானம் அதிகரிப்பது, புதிய செலவுகளைப் பரிசீலனை செய்வது இவையெல்லாம் மந்திரி சபையின் வேலை. அதற்காக டிபார்ட்டுமெண்டு தயாரித்திருக்கும் வரவு செலவு இவைகளை நன்கு பரிசோதிப்பது அந்தந்த மந்திரிகள் செய்யவேண்டிய வேலை.பொக்கிஷ மந்திரியான ராஜாஜியிடம் செலவிற்குப் பணம் பெறவேண்டுமானால் தகுந்த காரணங்களை எடுத்துக் காட்டி வாதாடினால்தான் பணம் கிடைக்கும். சர்க்கார்பணத்தைக் கொடிய கருமிபோலப் பாதுகாத்து வந்தார். யாதொரு வகையிலும் பணம் வருவாயில்லாத இலாகா என்னுடையதுதான். ஆனால் செலவிடவேண்டிய இனங்களோ ஏராளம். சுமார் பத்துப் பதினைந்து நாட்களுக்கு ராஜாஜி வீட்டில் மந்திரிசபை இரவிலும், காலை நேரங்களிலும் கூடும். பகல் நேரத்தில் மந்திரிகளுக்குச் செய்யவேண்டிய வேலைகளிருக்குமாதலால் இரவு சாப்பாட்டிற்கு மேலாகக்கூடும். வரவு செலவு திட்டம் போட்டு முடியும் வரையில் கூடவேண்டும். அவருடைய வீட்டில் நாற்காலி, மேஜை முதலிய சாமான்கள் கிடையா. எல்லோரும் பாயில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொள்ளவேண்டும். தங்கள் இலாகா சம்பந்தப்பட்ட செலவு விபரம் வரும்வரையில் காத்திருக்கும் மந்திரிகள் ஓரிருவர் குறட்டைவிட்டுத் தூங்கிவிடுவதுமுண்டு. பிறகு அவர்களைத் தட்டிஎழுப்பி அவர்கள் கணக்கைப் பரிசீலனை செய்வதுண்டு. ஆனால் ராஜாஜிமட்டிலும் தூங்கமுடியாது. கணக்கு முடியும்வரை அவர் தூங்கவும் மாட்டார். அண்ணன் தம்பிகள் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய தாய பாகத்திற்குக் கட்சியாடி, சண்டை போடுவதுபோலவே எங்கள் எங்கள் இலாகாவிற்கு வேண்டிய தொகைக்கு நாங்கள் ஒவ்வொருவரும் சண்டைபோடுவோம். நிதி மெம்பரிடத்தில் தனம் இருந்தபோதிலும், அதைச் செலவிடாதிருப்பதற்கான முறையில்தான் அந்த இலாகா காரியதரிசி குறிப்புக்கள் எழுதியிருப்பார். அக்குறிப்புக்களைச் சற்றும் விட்டுக்கொடுக்க முடியாமல் ராஜாஜி வாதாடுவார். ஆஸ்பத்திரி கட்டிடங்கள் வேண்டுமென எல்லா ஜில்லாக்களிலிருந்தும் மதிப்பிட்டு லக்ஷக்கணக்காக தொகை ஒதுக்க வேண்டுமென எனது கார்யதரிசி பலமாகச் சிபார்சு செய்திருப்பார். நானும் அவை வேண்டுமென வாதாடுவேன். "என்ன ராஜன்! வியாதிக்கு வைத்தியம், வைத்தியர்கள், மருந்துகள் தேவையா, கல்லும் சுண்ணாம்பும் தேவையா? ஏன் பணத்தை அரண்மனை போன்ற பெரும் கட்டிடங்களில் கொட்ட வேண்டும்? நமது நாட்டினர்கள் மிக்க ஏழை; பெரிய சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள் எல்லாம் அவர்களுக்குப்புதியவை; அனுபவித்தவழக்கம் கிடையாது. பணத்தை நோய்க்குத் தகுந்த சிகிச்சை செய்வதற்கும், அவை வாராதிருக்கும் காப்பு முறைகளிலும் செலவிட்டால் ஏழைகளுக்கு லாபமுண்டு. நமக்கும் பெருமை

உண்டு" என்று உபதேசம் செய்வார். ஆனால் அவர் வெறும் உபதேசத்துடன் நின்றுவிட வில்லை. முதல்வருஷச் செலவுதிட்டத்தில் அரிய சமூகத்தொண்டு ஆற்றும் முறையில் பணச் செலவைக் கவனியாது பணத்தை ஒதுக்கிவைத்தார். "கட்டிடத்தில் செலவிடு வதைக் குறைக்க வேண்டும். ஏழைகளுக்கு ஆஸ்பத்திரி கட்டுகிறேனென்று அரண் மனைகள் கட்டவேண்டாம். நமது மக்கள் உயிர்வாழ்வதற்கு, நோயற்ற வாழ்வு எய்து வதற்கு அத்யாவசியமானது நல்ல குடி தண்ணீர். நமது ஏழைகள் வசிக்கும் கிரா மங்களில் அநேக இடங்களில் குடிதண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டம். அதிலும் சுத்த மான தண்ணீர் கிடைப்பது அதைக்காட்டி லும் அரிது. அதற்காக வருஷந்தோறும் எவ்விதக் கஷ்டத்திலும்கூட பதினைந்து லக்ஷ ரூபாய் போட்டு ஒரு நிதி உண்டுபண்ணு வோம், நமது மாகாணம் முற்றிலும் நல்ல குடிதண்ணீர் கிடைக்கும்படியான திட்டம் நீ ஏற்பாடு செய்யவேண்டும். இந்த ஒரு தொண்டு நீ செய்தால் உனது மந்திரிவேலையை என்றென்றைக்கும் மறக்கமுடியாது" என்று சொல்லிவிட்டு, திட்டம் வகுக்கப்படாத ஒரு புதிய இனத்தைச் சேர்த்து நிதியை உண்டாக் கியவர் ராஜாஜி.

பணம் கிடைத்தவுடன் அதைச் சம்பாதிப் பதற்குப் பட்ட கஷ்டமெல்லாம் மறந்துவிட் டது. தொகை கிடைத்த ஆனந்தம் ஓர் புறம்; அதை ஒழுங்காகச் செலவிட்டுப் பலன் கிடைக்கும்படியான ஓர் திட்டத்தை நிறுவி, மக்களைக் காப்பாற்றும் பொறுப்பும் அதன் கவலையும் மற்றோர்புறம். இவ்விருவித அவஸ்தைகளுடன் முதல்வருஷ வரவு செலவு திட்டம் என் வசமுள்ள இலாகாவிற்குப் போடப்பட்டுச் சட்டசபையால் அங்கீகரிக்கப் பட்டது. நல்ல குடிதண்ணீர் இவ்விதமிருக்க வேண்டும், இம்மாதிரி சுத்தம் செய்து குடிக்கவேண்டும், தண்ணீர் கெடாமல் பாது காக்கவேண்டிய முறை இன்னது என்பது எனக்குத் தெரியும். ஆனால் நமது மாகாணத் திலுள்ள கிராமங்களில் எங்கெங்கு எவ்வித மான தண்ணீர் கிடைக்கும், கிடைக்கக் கூடிய தண்ணீரைக் குடிப்பதற்காகக் காப் பாற்றும் முறையை மக்கள் அறிந்துகொள்வ தெப்படி, குடிப்பதற்கென வைக்கப்பட் டிருக்கும் தண்ணீர் கெட்டுவிட்டால் அத னின்று உண்டாகும் விபத்துக்களை நினைக்கும் பொழுதே எனது மனம் திகிலடைந்தது. சுகாதார இலாகாவை எனக்கு விவரங்கள் தெரிவிக்கும்படி கேட்டேன். எனது அவ சரத்திற்கும் அதிகாரிகளின் வேலைப்போக் கின் நிதானத்திற்கும் அளவேயில்லை. அவர் களுக்கு இவ்விஷயங்களில் போதுமான பயிற்சியில்லை. விசாரணை இவ்விதம் நடத்த வேண்டும், தண்ணீர் இவ்விதமிருக்கவேண் டும், யாரைக்கொண்டு வேலையை நடத்துவது, யார் அவைகளைக் காப்பாற்றுவது என்பதற் கெல்லாம் கவர்மெண்டாரின் அபிப்பிராயம், உத்தரவு எப்படி என்றெல்லாம் டிபார்டு மெண்டார்கள் எனக்குப் பதில்கேள்வி விடுத் தார்கள். முடிவில் எல்லாவற்றையும் கவனிக்கவேண்டிய பொறுப்பு என்னையே சார்ந்துவிட்டது. துள்ளிக்குதிக்கும் மாட்டி ற்குச் சரியான தொழுவம் ஏற்படுத்தி விட் டார் ராஜாஜி. கண்டபொழுதெல்லாம் தண் ணீர்த் திட்டம் எம்மட்டிலிருக்கிறதென விசா ரிக்கவும் தொடங்கிவிட்டார். கிராமங்களில் எவ்விதமான குடிதண்ணீர் எவ்விதம் கிடை த்து மக்கள் உயிர்வாழ்ந்து வருகிறார்கள் என் பதான விஷயம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியதாயிற்று. அதன் பேரில் தான் திட்டம் வகுக்க முடியுமென நிச்சயித்தேன்.

உலகத்தைச் சிருஷ்டித்த இறைவன் மக்களை யும் அவர்கள் உயிர்வாழ வேண்டிய சாதனங் களையும் உண்டாக்கியிருக்கிறான். ஆனால் அவைகளைத் தேடிப்பிடித்து, நன்முயற்சியால் மனிதன் அடையவேண்டிய முறையில் உல கம் நடக்கிறது. தண்ணீர் இல்லாத பாலை வனத்தில் புல், பூண்டு மற்றுமுள்ள ஜீவ ராசிகள் கிடையாது. இயற்கை நீர்த்துறை களை அண்டி மனித வர்க்கம் குடிகொண்டு உயிர் வாழ்கிறது. சில இடங்களில் நீர் சுலபமாகக் கிடைக்கிறது. சில இடங் களில் கஷ்டப்பட்டுத் தண்ணீர் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது. தண்ணீர் கிடைக்குமிடத்தில், குடிதண்ணீரைச் சுத்த மாக வைக்க வேண்டியிருக்கிறது. கிடைக்கக் கஷ்டமாக இருக்கும் இடங்களில் சுலபமாகக் கிடைக்கும்வழியைஉண்டாக்குவதும்அரசாங் கத்தின் பொறுப்பு. இவ்வளவிற்கும் பொது மக்களுக்குச் சுகவழிகளில் நல்லுணர்ச்சியும், ஞானமும் வேண்டும். ஞானத்திற்குப் படிப்பு, பயிற்சி இரண்டும் தேவை. நல்லுணர்ச்சிக்கு பழக்கம் தேவை. பாமர மக்களுக்குத் தத்து வத்தின் நியாயம் புலப்படாது. இது செய்ய லாம் செய்யக்கூடாது என்பதான ஒரு வரை அறுக்க வேண்டியதும் அப்படியே வரம்பு தவறாமல் நடக்கும் முறையை வகுக்கவேண்டி யதும் அதிகாரிகள் சட்டபூர்வமாகச் செய்ய வேண்டியவை.

மக்களுக்குப் பயிற்சி எவ்விதம் உண்டாக்கு வது என்பதைப்பற்றி யோசனைசெய்து ஆரம்

பப்பள்ளிக்கூடங்கள் மூலம் சிறுவர்களுக்குச் சுகவழிகளை கற்பிக்கலாமென எண்ணினேன். இதற்கு இரண்டு தடைகள். முதலாவது நம் நாட்டில் எல்லாப்பிள்ளைகளும் ஆரம்பக்கல்வி கற்பதில்லை. கற்பிக்கப்போதிய ஏற்பாடுகளும் நமது நாட்டில் கிடையாது. இரண்டாவதாக, இப்பொழுதிருக்கும் பள்ளிக்கூடங்களில் பயிற்சி துவக்கலாமென்றாலோ, உபாத்தியார்களுக்குச் சுகாதார அறிவு கிடையாது. முதலாக ஆசிரியர்களைப்பழக்கிய பிறகுதான் மாணாக்கர்களைப் பயிலுவிக்க முடியும். இதற்காகப் படிப்பு இலாகா அதிகாரியுடன் கலந்து யோசனை செய்ததில், இப்பொழுது இருக்கும் கல்வி நிலையில் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கே கஷ்டமாகவிருப்பதால் மேற்கொண்டு அதிகப் பொறுப்பை ஏற்கமுடியாதென மறுத்துவிட்டார்கள். ஆனால் அவர்கள்மீது பழிசொல்லி என்ன பலன்! நூற்றைம்பது வருஷமாக ஆட்சிபுரிந்த அதிகார வர்க்கம், நம்மில் நூற்றுக்குப் பத்துப்பெயர் விகிதம்கூட படிக்கும் திறமையை உண்டுபண்ணவில்லை. அவர்களால் கையாண்டு வரப்பட்ட அதிகாரிகளும் நூற்றுக்குப் பத்துப் பங்குதான் உருப்படியான வேலையை உண்டுபண்ணக்கூடும். நமது மக்கள் கடைத்தேறும் வகையில் ஆட்சிபுரியவேண்டுமானால், வருவாயை அதிகரிக்கவும், அதைப் பலனுள்ள முறைகளில் செலவழிக்கவும் நமது பிரதிநிதிகளுக்குச் சக்தி உண்டாகும் வரையில் இந்தத் திண்டாட்டம் முடிவடையாது. எனினும் பொறுப்பைச் சக்திக்கு ஏற்றவாறாகிலும் நிறைவேற்றுவது கடமையென, சட்ட பூர்வமான அதிகாரத்தை சுகாதார அதிகாரிகளுக்கும், ஒழுக்கத்தை மக்களுக்கும் சட்ட சபை மூலமாக அளிப்பதென எண்ணியே சுகாதாரச் சட்டம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது,

மந்திரிகளுள் ஒருவருடைய இலாகாவின் கட்டுக்களை மற்றொருவர் தருவித்துப் பார்ப்பதற்கு அதிகாரமுண்டு. பார்ப்பதோடுமட்டுமல்லாமல் அதில் தங்களுக்குத் தோன்றிய குறிப்புக்களை எழுதுவதற்கும் உரிமையுண்டு. ஆனால் கட்டுக்களை வரவழைப்பது அந்தந்த இலாகாவின் மந்திரியினுடைய சம்மதத்தைப் பெற்றபிறகுதான். பின்பு பரிசீலனை செய்ய முடியும். இப்படிக் குறிப்புக்கள் எழுதுவதில் அபிப்பிராய பேதம் ஏற்படுமானால் அதைப் பற்றி மந்திரிசபைக் கூட்டத்தில் கவர்னர் முன்னிலையில் விவாதித்து, வாக்கு எடுப்பது வழக்கம். அதில் கணக்குப்படி அதிகப்படி வாக்குக்கள் எதற்குக் கொடுக்கப்படுகிறதோ அதன்படி முடிவு செய்யப்படும். இதினின்று ஒருமுறை நன்கு புலப்படும். அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு மந்திரிசபையாருடையது. எல்லாம் மாகாண கவர்னர் உத்தரவின்பேரில் நடப்பதாகச் சட்டமானாலும், நடைமுறையில் மந்திரிகளுடைய முடிவான அபிப்பிராயம்தான் கவர்னர் உத்தரவும். இருந்தபோதிலும் அவரவர்களுடைய இலாகாவிற்கு அவரவர்தாம் பொறுப்பாளி. ஒருவர் விஷயத்தில் மற்றொருவர் தலையிடுவதில்லை. கவர்னரும் எல்லாருடைய இலாகாவிலும் இஷ்டப்பட்டால் தலையிடலாம். ஆனால் அநேகமாக அப்படிச் செய்வதில்லை. அதிகார வர்க்கத்தாருக்கும் மந்திரிகளுக்கும் அபிப்பிராய பேதமேற்பட்டால், இந்தக் கட்டு பிரதம மந்திரிக்குப் போகும். சம்பந்தப்பட்ட இலாகா மந்திரிக்கும், பிரதம மந்திரிக்கும், அல்லது ஒரு இலாகா மந்திரிக்கும், மற்றொரு இலாகா மந்திரிக்கும் அபிப்பிராய பேதமுண்டானால் இவை கவர்னர், மந்திரிகளடங்கிய ஆலோசனைச் சபையில் வாக்கு எடுப்பதின் மூலம் தீர்மானிக்கப்படும். இதினின்று மந்திரிசபையின் வேலை எவ்வளவு கட்டுப்பாட்டுடன் நடைபெற வேண்டும், அப்படி நடைபெறாவிட்டால் அதிகாரம் எவ்வளவு சீர்குலைந்து மக்களுக்குத் துன்பம் உண்டாகக்கூடுமென்பது எளிதில் விளங்கும். பிரதம மந்திரியைத் தகுந்தவராகச் சட்டசபையார்கள் பொறுக்கி எடுத்துவிட்டால் பிறகு மற்றவர்களைப் பிரதமர் பொறுக்கவேண்டுமென்கிற முறையில் எவ்வளவு கவலையும், எவ்வளவு ஒற்றுமை உணர்ச்சியும், தேசபக்தியும், பொறுக்கப்பட்டவர்களிடம் இருக்கவேண்டுமென்கிற பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறதென்பதும் நன்குவிளங்கும்.



# அழகிய கூந்தல்—இதன் இரகசியம் என்ன?

வேறெந்தக் காலத்தையும்விட குப்தர்கள் அரசாண்ட காலந்தான் மிக நேர்த்தியான பலவித கூந்தல் சிங்கார ஜோடிப்புகளுக்குப் பிரசித்தி பெற்றதாய் இருந்தது. ஏனெனில் கறுத்த மேனிவாய்ந்த கூந்தல் வனப்பிற்கு இன்றியமையாதெென அந்நாளில் கருதி வந்தார்கள்

இந்நாகரிகத்திற்கும் அழகிற்கும் அஜந்தாவிலும் பாகிலுமுள்ள சிற்பங்கள், களிமண் வேலைப்பாடுகள், சித்திர எழுத்துக்கள் இவைகளே போதுமான அத்தாட்சி.

ஏன், இந்நாளிலும் அழகிய மேனியும் பளபளப்பும் வாய்ந்த கூந்தல் தேகவனப்பையும் வசிகரத்தையும் அதிகப்படுத்தத் தான்செய்கிறது. ஆக்ஷேபணையில்லை.



**டாம்கோ கூந்தல் தேங்காயெண்ணெயும் ஷாம்பூவும்**

A TATA PRODUCT

**தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்**

# தோல் வாத்தியங்கள்

ஆர். கே. விசுவநாதன்

சங்கீதத்திற்குத் தாளம் இன்றியமையாதது. ஒலிகளின் சுருதியைத் தொடர்ச்சியாக மாற்றுவதினால் உண்டாகும் இன்ப உணர்ச்சியுடன் அவ்வொலிகளினிடையே உள்ள கால ப்ரமாணத்தினால் ஏற்படும் சுகத்தையும் நாம் அனுபவிக்கின்றோம். ஒரு பாட்டு விறுவிறுப்பாகவோ அல்லது தாமதமாகவோ இருப்பதன் காரணம் அது அமையப்பட்டுள்ள தாளமேயாகும். உதாரணமாக, தியாகராஜாவின் கீர்த்தனைகளுக்கும் தீக்ஷிதரின் கீர்த்தனைகளுக்கும் காலப்ராமணத்தினால் ஏற்பட்டுள்ள வித்தியாசத்தை அனைவரும் கவனித்து இருக்கலாம். இதன் பொருட்டு ஒலிகளினால் ஏற்படும் இன்ப உணர்ச்சியும் வேறுபடுவதைப் பார்க்கலாம். எல்லா நாட்டினரது சங்கீதத்தில் இருக்கும் தாள வகைகளைக் காட்டிலும் நமது சங்கீதத்தில் அனேகவகை இருக்கின்றன. அதிலும் கர்நாடக சங்கீதத்தில் உள்ளவை எல்லாவிதத்திலும் சிறந்ததெனக் கூறுகிறார்கள். வாய்ப்பாட்டுக் கச்சேரிகள் சில சமயம் தாளக்கச்சேரிகளாய் விடுகின்றன என்று சிலர் குறை கூறுவதை நாம் அறிவோம். பாட்டு நன்றாய் இருப்பதற்கு வேண்டிய அம்சங்களில் தாளம் முக்கியமானது என்பதை இவர்கள் மறந்து விடுவதால் இவ்வாறு குறை கூறுகிறார்கள். நம்முன்னோர்கள் தாளத்தின் தனிச்சிறப்பை உணர்ந்து பல்லவி பாடும் சம்பிரதாயத்தை வைத்திருக்கின்றார்கள். சங்கீதத்தில் ஒருவர் அடைந்திருக்கும் பயிற்சி அவர் பல்லவி பாடுவதிலிருந்துதான் வெளிப்படும். தாள வகைகளைப் பயின்று வாசிப்பதற்குப் பிரத்யேகமாகச் சில வாத்தியங்களை நம்முன்னோர்கள் அமைத்திருக்கின்றார்கள். அவற்றில் முக்கியமாக மிருதங்கம், தவில், தபேலா, கஞ்சிரா என்பவற்றைக் கூறவேண்டும். இவை எல்லாம் தோல் வாத்தியங்களே ஆகும். இவற்றின் அமைப்பு, இவற்றின் ஒலி முதலியவற்றின் விவரங்களை இக்கட்டுரையில் கவனிப்போம்.

சங்கீத வாத்தியங்களில் அனேக வகை உண்டு. அவற்றில் எல்லாம் ஒலிகளை எழுப்பி அவை முழக்கத்துடன் வெளிவருவதற்குத்தக்க சாதனங்கள் உள்ளன. தோல் வாத்தியங்கள் எல்லாவற்றிலும் தோல்களின் அசைவு ஒலிகளுக்கு முக்கிய காரணமாய் இருக்கின்றது. தோல் துடிப்பதற்கு அதன் பரப்பு முழுவதும் பிகுவாய் இருக்கவேண்டும். இதற்கு அதன் விளிம்பின் பல பாகங்கள் இழுத்துக் கட்டப்படவேண்டும். மேலும் மிருதங்க வாத்தியத்தில் இருப்பதைப்போல் காலியான மரப்பிப்பாயின் இரு பக்கங்களிலும் தோல் இழுத்துக் கட்டப்பட்டிருந்தால் அதன் துடிப்புக்கள் பின்னும் எளிதாய் உண்டாகும். இவ்வாறு இழுத்துக் கட்டப்பட்ட தோல் ஒன்றை விரல்களினாலோ அல்லது ஒரு குச்சியினாலோ தட்டினால் ஒலி எழும்புவதைக் கவனிக்கலாம். இத்துடிப்புக்களை நன்றாய்அறியுமுன் கம்பித்துடிப்புக்களைப்பற்றிச்சிறிதுவிசாரிப்போம். இரண்டு முனைகளிலும் இழுத்துக் கட்டப்பட்ட ஒரு கம்பி துடிக்கும்போது அதன் இரண்டு முனைகளும் அசையாமல் இருந்து அதன் மையம் அதிகம் அசைவுடன் துடிப்பதைக் கவனிக்கலாம். அசைவு இல்லாமல் இருக்கும் இடங்களை முடிகள் (Nodes) என்றும் அதிக அசைவு உள்ள இடங்களை எதிர்முடிகள் (Anti-Nodes) என்றும் கூறுவார்கள். எனவே கம்பி துடிக்கும்போது கம்பியின் இரு முனைகளும் முடிகளாகவும், அதன் மையம் எதிர் முடியாகவும் ஆகிறது என்று சொல்லலாம். தோல் துடிக்கும்பொழுது அதன் பரப்பில் ஏற்படும் முடிகளும் எதிர் முடிகளும் கோடுகளில் அமைந்திருப்பதைக் கண்டார்கள். முடிகளைக் கொண்டுள்ள கோடுகளுக்கு Nodal lines என்று பெயர். இக்கோடுகள் தோலின் துடிப்புக்குத் தகுந்தவாறு அமைவதையும் அவை சில சமயம் வட்டங்களாகவும், பின்னர் நேர் கோடுகளாகவும் காணுவதைக் கண்டார்கள். இதை விளக்கக் கீழ்க்கண்ட சோதனையைச் செய்யலாம். மிருதங்க வாத்தியத்தின் இடதுபக்கம் கீழே இருக்குமாறு அதைநிமிர்வையாக வைத்துக்கொள்வோம். இப்பொழுது அதன் மேல் பக்கத்தில் சன்னமான மணலைத் தூவி இலேசாகத்தோலின் விளிம்பைத்தட்டவும். உடனே தோலின்மீதுள்ள மணலும் துடித்துச் சில இடங்களில் சென்று குவிவதைக் காணலாம். இம்மணல் படிந்துநிற்கும் கோடுகளே Nodal lines-கள் ஆகும். இன்னொரு விஷயத்தைக் கவனிப்போம். முற்கூறிய கம்பித் துடிப்பிலிருந்து வெளிப்படும் ஒலியும், தோல் துடிப்பிலிருந்து வெளிப்படும் ஒலியும் தூயனவாக இருப்பதில்லை. இவை இரண்டிலும் ஓர் ஆதார சுருதியுடன் பல்வேறு பரிவார சுருதிகளும் (overtones) கலந்துவருவதைக் கண்டார்கள். இத்தகைய பரிவார சுருதிகள் கலந்திருப்பதே ஒலிகளின் பண்பு வேறுபாட்டிற்குக் காரணமாகிறது. கம்பி, காற்று நிரை இவை துடிக்கும்பொழுது அவற்றின் ஒலியில் அடங்கிய பரிவார சுருதிகள் பிரதான சுருதியைவிட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, நான்குமடங்கு இம்மாதிரி வரிசைக் கிரமமாய் அதிகரித்துக்கொண்டே செல்லுகிறது. ஆனால் தோல் துடிப்பினால் உண்டாகும் ஒலியில் ஏற்படும் பரிவார சுருதிகள் இம்மாதிரி

தொடர்ந்து அதிகரிப்பதில்லை. எனவே இப் பரிவார சுருதிகளுக்குள் இசைப் பொருத்தம் இல்லாமல்போய்விடுகிறது. அதனால் அதன் பண்பு விரும்பத்தக்கதாயிருப்பதில்லை. இதன் பொருட்டுத்தோல் துடிப்புக்களை ஆதாரமாய்க் கொண்டுள்ள வாத்தியங்களை மேனாட்டார்கள் சங்கீதவாத்தியங்களாக ஒப்புக்கொள்வதில்லை. இக்குறையை நீக்கி மிருதங்க வாத்தியத்தை நம்முன்னோர்கள் இயற்றியிருக்கிறார்கள். இதன் ஒலியை நம் நாட்டுப் பிரபல விஞ்ஞானிகளான ஸர். சி. வி. ராமன், ஆர். என். கோஷ் என்ற இருவர்களும் பரிசீலனைசெய்து அதன் மேன்மையை மேனாட்டார்களுக்குக் காட்டினார்கள். அவர்களும் நம் முன்னோர்களின் சங்கீத அறிவைக் கண்டு வியந்தார்கள். இக்குறை எவ்வாறு நீக்கப்பட்டது என்று மிருதங்க வாத்தியத்தின் அமைப்பைப் பார்த்த பிறகு காண்போம்.

தோல் வாத்தியங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்து விளங்குவது மிருதங்க வாத்தியமே ஆகும். இது நந்திபகவானின் வாத்தியம் என்று நம்மிடையே வழங்கிவரும் புராண கதையை அனைவரும் கேட்டிருக்கலாம். இதிலிருந்து இவ்வாத்தியம் எவ்வளவு பழமையானது என்று ஊகிக்கலாம். இதன் மரப்பிப்பாய் பலாமரத்தில் செய்யப்படும். இது சுமார் இரண்டு அடி நீளம் கொண்டிருக்கும். இதைவிட நீளம் குறைவான வாத்தியங்களும் உண்டு. மிருதங்க வித்வான்கள் சுருதிக்குத் தகுந்தவாறு வாய்ப்பாட்டுக்கென்று ஒரு வாத்தியத்தையும், கம்பிவாத்தியத்துக்கென்று மற்றொரு வாத்தியத்தையும் உபயோகிப்பார்கள். பிப்பாயின் நீளமுழுவதும் அதன் விட்டம் ஒரே அளவாக இல்லாமலிருப்பதைப் பார்க்கலாம். இடது பக்கத்தின் விட்டம் வலதுபக்கத்தின் விட்டத்தைவிட அதிகமாக இருக்கும். இதன் இரண்டு பக்கங்களையும் தோல்கள் மூடிக்கொண்டிருப்பதைப் பார்க்கவும். இடதுபக்கத்துத் தோலின் அமைப்பைக் காட்டிலும் வலதுபக்கத்துத் தோலின் அமைப்புச் சற்றே சிக்கலானது. வலதுபக்கத்தை மூடிக்கொண்டிருக்கும் தோல் மூன்று அடுக்குகள்கொண்டது. இதில்இரண்டு தோல் வளையங்களாகவும் மற்றொன்று வட்ட வடிவமான வில்லையாகவும் இருக்கும். தோல் வளையங்களுக்கு இடையே வில்லை இருக்கும். தோல் வளையங்களை ஆட்டுத்தோலிலும், வில்லையைப் பசுமாட்டுத் தோலிலும் செய்வார்கள். வாத்தியம் செய்வதற்குமுன் இம்மூன்று தோல்களையும் சில நாட்கள் தண்ணீரில் ஊறப்போடுவார்கள். பிறகு இவற்றை எடுத்து, பிப்பாயின் வலதுபக்கத்தின்மீது வைத்துகொண்டு, இவற்றின் விளிம்பில் சில இடங்களில் துவாரங்களை இட்டு அவற்றில் நீண்ட தோல் வார்களைப் புகுத்திவிடுவார்கள். இடதுபக்கத்துக்குத் தோலை தயார்செய்து அதையும் அதன் இடத்தில் பொருத்திக்கொண்டு முன்சொன்ன நீண்ட தோல் வார்களினால் இடது வலது பக்கங்களை நன்றாக இழுத்து இணைத்துவிடுவார்கள். இடதுபக்கத்துத் தோல் இரண்டு அடுக்குக்கொண்டது. ஒன்று வளையமாகவும், மற்றொன்று முழுவில்லையாகவும் இருக்கும். வளையத்தை ஆட்டுத் தோலிலும், முழுவில்லையை எருமைத் தோலிலும் செய்வார்கள். இவ்வாறு இணைக்கப்பட்ட இரண்டு பக்கத்துத் தோல்களும் பிகுவுடன் இருக்கும். வார்களுக்கு இடையே சிறு மரத்துண்டுகளைப் புகுத்திப் பின்னும் பிகுவை அதிகரித்துக்கொள்ளலாம். மிருதங்க வாத்தியத்தின் வலது தோலின் மையபாகம் கறுப்பாக இருப்பதை அனைவரும் கவனித்திருக்கலாம். இது மற்றப் பாகத்தைக்காட்டிலும் உயர்ந்தும் இருக்கும். இது எவ்வாறு உண்டாயிற்று என்று இப்பொழுது கவனிப்போம். ஒருவித சுக்காங்கல்லை நன்றாகப் பொடிசெய்து அப்பொடியுடன் ரோசனம் சாதம் இவற்றைக் கலந்துகொண்டு இக் கலவையை வலதுபக்கத்தின் நடுவில் இலேசாகத் தடவுவார்கள். காய்ந்தவுடன் ஒரு குழவியை வைத்துக் கொண்டு அதை நன்றாகத்தேய்ப்பார்கள். பின்னர் தோலின் விளிம்பிலும், நடுமத்தியிலும் தட்டி இரண்டு ஒலிகளின் சுருதியும் ஒன்றாய் இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ளுவார்கள். அவ்வாறில்லாவிடில் மறுபடியும் அக்கலவையைப் பூசி, காயவைத்துக் குழவியினால் பின்னும் தேய்ப்பார்கள். இதனால்தான் வலதுபக்கத்தின் மத்தியபாகம்பளபளவென்று கறுப்பு நிறமாகத் தோன்றுகிறது. வாசிக்கும் பொழுது இப்பக்கத்தின் ஒலி ஷட்ஜமமாகக் கேட்கும். இதன்கீழ் பஞ்சமம் இடதுபக்கத்துத் தோலின் ஒலியினால் உண்டாகும். இதற்காக வாசிப்பதற்கு முன் ரவைமாவை நீருடன் கலந்து அதை இடதுபக்கத்துத் தோலின் மத்தியில் தடவிக்கொள்வார்கள். கச்சேரி முடிந்தவுடன் இம்மாவை எடுத்து எறிந்துவிடுவார்கள். முற்சொன்ன விஞ்ஞானிகள் தோலின் துடிப்புக்களைப் பரிசீலனைசெய்து பார்த்தபொழுது, அதன் கனம் விளிம்பிலிருந்து மையத்துக்கு வரவரச் சீராக அதிகரித்துக்கொண்டே வருமானால், அதன் ஒலியில் அடங்கிய பரிவார சுருதிகளுக்குள் இசைப் பொருத்தம் உண்டாகி நாதம் இனிமை அடைந்துவிடுவதைக் கண்டார்கள். மிருதங்க வாத்தியத்தின் நாதம் பெரும்பாலும் அதன் வலது பக்கத்துத் தோலைப்பொறுத்தது. இத்தோலின் கனம் சீராக விளிம்பிலிருந்து மையம்வரை அதிகரித்துக்கொண்டு வருவதினால்தான் மிருதங்கத்தின் நாதம் இனிமையாய் இருக்கின்றது என்று இவர்கள் கூறுகின்றார்கள். மேலும் தோல்துடிக்கும் பொழுது பிப்பாயினுள்ளிருக்கும் காற்று, பிப்பாயின் புறங்கள் இவையும் துடித்து நாதத்தின் இனிமையைப் பின்னும் அதிகரிக்கின்றது என்று இவர்கள் கூறுகின்றார்கள். பிப்பாயில் ஏதாவது விரிசல் உண்டானால்

நாதம் கெட்டுவிடுவதைக் கவனிக்கலாம். வாய்ப்பாட்டுக் கச்சேரிகளோ அல்லது கம்பி வாத்தியக் கச்சேரிகளோ மிருதங்கம் இல்லாமல் சோபிப்பதில்லை. ஏனெனில் மிருதங்கத்தின் மீட்டு சாபுக்களினால் உண்டாகும் ஒலிகளும் கலந்து வரும்பொழுதுதான் வாய்ப்பாட்டுக் கச்சேரிகளும், கம்பிவாத்தியக் கச்சேரிகளும் முழு இனிமை தருகின்றன. வாய்ப்பாட்டுக்காரர்கள் கீர்த்தனைகளில் ஸ்வரம் பாடும்போது மிருதங்கத்தின் நாதத்தினால் உண்டாகும் இன்ப உணர்ச்சியை நன்றாக அறியலாம். எவ்வாறு வாய்ப்பாட்டுப் பாடுபவர் ராக ஆலாபனை செய்யும்பொழுது அவரது மனோதர்மத்தை வெளிப்படுத்துகிறாரோ அதைப் போலவே மிருதங்கம் வாசிப்பவரும் ஒரு குறிப்பிட்ட தாளத்தில் தனி ஆவர்த்தனம் வாசிக்கும்பொழுது அவரது மனோதர்மத்தை வெளியிடுவார். எனவே மிருதங்க வாத்தியத்தின் பெருமையை நன்கு உணரலாம்.

தவில் வாத்தியத்தின் அமைப்பு ஏறக்குறைய மிருதங்க வாத்தியத்தின் அமைப்பை ஒத்திருக்கும். ஆனால் இதன் பிப்பாய் பெரிதாக இருக்கும். மேலும் இதன் விட்டம் எல்லா இடங்களிலும் ஒன்றாக இருக்கும். இதன் ஒலியில் அடங்கியுள்ள பரிவார சுருதிகளுக்குள் இசைப் பொருத்தம் இல்லாததினால் இதன் நாதம் விரும்பத்தக்கதாக இல்லை. இது நாகசுர வாத்தியத்தின் முழக்கத்திற்குச் சமமான தாள வாத்தியம் என்பதைத் தவிர இதற்கு வேறு பெருமை இல்லை. வட இந்தியாவில் தபேலா வாத்தியத்தைத் தாள வாத்தியமாக உபயோகப்படுத்துகிறார்கள். அரைக்கோளவடிவமுள்ள இரண்டு மரப்பிப்பாய்களை இவர்கள் உபயோகிக்கின்றார்கள். ஒன்றை இடது கையினாலும் மற்றொன்றை வலது கையினாலும் வாசிப்பது வழக்கம். வலது கையினால் வாசிக்கப்படுவதை மிருதங்கத்தின் வலதுபக்கத்திற்கும், இடது கையினால் வாசிக்கப்படுவதை மிருதங்கத்தின் இடது பக்கத்திற்கும் ஒப்பிடலாம். மேலும் வலது கையினால் வாசிக்கப்படும் பிப்பாயின்தோலில் உள்ள கறுப்பு வட்டம் தோலின் மையத்தில் இல்லாமல் சற்றுவிலகி இருப்பதைக் கவனிக்கலாம். இதன் நாதம் பெரும்பாலும் மிருதங்கத்தின் நாதத்தைப்போலவே இருக்கும். கடைசியாகக் கஞ்சிரா வாத்தியத்தை எடுத்துக்கொள்ளுவோம். இதற்கு மிருதங்கத்தைப்போலப் பிரத்யேகமானதொரு சுருதி இல்லை. இதைச் சங்கீதவாத்தியமாக அனேகர் ஒப்புக்கொள்ளுவதில்லை. இதில் நிரவல் செய்யும்போது ஏற்படும் ஒலிகள்தான் சற்று இனிமையாகத் தோன்றும்.


Pure as the Waters of *Cauveri* is our Name in India !

Truthful
READY MADE CLOTHES

காவேரி ஜல பிரவாஹம்போல்

ட்ரூத்புல் புகழ் மாசற்றது !

நாணயத்திற்கும், உழைப்பிற்கும், நாகரிகத்திற்கும்

எங்கள் ரெடிமேட் ஆடைகள் புகழ்பெற்றவை

**TRUTHFUL MFG. Co., MADURA.**

# பணம் பேசுகிறது

**ரா. விழிநாதன்**

●

**ப**ணம்! வெள்ளிப்பணம்!!

வட்டமான அழகிய உருவம் படைத்த வெள்ளிப் பணம்!!!

மிஷினிலிருந்து மினுக்கிக்கொண்டு வெளி வரும் பணத்தின் ஒலி 'கண்கண்கணீர்' என்று நாணயச்சாலையின் உடைத்தற்கரிய சுவர்களி னின்றும் எதிரொலித்துக்கொண்டிருந்தது. பளபளவென்று பிரகாசிக்கும் பணக் குவியல்! அவைகளை வாரி ஒன்று சேர்க்கும் மாந்தர் களின் கறுத்த கரங்கள்! குழந்தைகளின் தளிர்க்கரங்கள்! மாதர்களின் அளவிலா ஆசை கொண்ட கோமள கரங்கள்!

அத்துடன் பணம் ஆடிக்கொண்டிருந்தது; பாடிக்கொண்டிருந்தது; சிரித்துக்கொண்டி ருந்தது; பேசிக்கொண்டிருந்தது.

மாதந்தோறும், ஒரு சில வெள்ளையப்பன் களைக் கூலியாகப் பெறும் ஆட்களின் விழிகள் நாணயக் குவியல்களின் ஒளியில் மயங்கி இருந்தன; லயித்திருந்தன; புதைந்திருந்தன; ஆச்சரிய மிகுதியினால் மோனப்பாஷையில் "ஏனப்பா, எங்கே போகிறாய்? ஆக்கியோர்கள் நாங்கள் அல்லவா? ஆக்கியோர்களாகிய எங்களைக்கவனியாமல், ஆடிப்பாடிக்கொண்டு கர்வம் நிறைந்த போக்கில் எங்கேயப்பா கிளம்பிவிட்டாய்?" என்று வினவிக்கொண் டிருந்தன.

ஃ ஃ ஃ

பாங்கியின் கௌண்டரில்.........

பணம் ஆடிப்பாடிக் கொண்டிருந்தது— 'கண் கணீர்'........, கேஷியரின் கைவிரற் சொடுக்கில் 'டணன் டணன்' என்று கும் மாளத்துடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தது.

மறு நிமிஷம்-செல்வந்தர்களின் பைகளிலும் அழகிகளின் ஹேண்ட் பாக்களிலும்' சேவகர் களின் மேல் துண்டின் ஒரு மூலையிலும் அமர்ந்து, வண்டிகளிலும், சைகிள்களிலும், ரிக்ஷாக்களிலும், மோட்டார்களிலும், வாயு வேக மனோவேகத்தில் சென்று கொண்டி ருந்தது பாங்கியிலிருந்து கிளம்பி.

கேஷியரது கண்களில் வீசும்ஒளி ஒவ்வொரு வரையும், மின்சாரத்தைப்போல், பற்றி யிழுத்துக்கொண்டிருந்தது.

கௌண்டரில் மிக அழகு வாய்ந்த, சிவந்த தளிர்க்கரமொன்று. அதன் மெலிந்து மிருது வான விரல்களின் மத்தியில் நீலநிறமுள்ள 'செக்'ஒன்று. கேஷியர் பணத்தை யெடுத்து எண்ணி,அழகியின் உள்ளங்கைகளில் வைத்துக் கொண்டே, ஆசை ததும்ப யுவதியை நோக்கினான். யுவதியின் கண்களும் அவன் கண்களை நோக்கின. அவள் புன்முறுவல் உற்றாள். கேஷியரது கண்களில் புன்முறுவல் தவழ்ந்தது. பணத்துள்ளும் காதல் தேவதை மறைந்துள்ளாளோ என்னவோ. அடுத்த நிமிஷம் அக்காதல் தேவதை 'கண கண' வென்று ஒலித்துக்கொண்டு யுவதியின் 'மணி பேகில் போய் மறைந்தாள்— சிரித்தமுகம் வாய்ந்த காதல்தேவதை!

மற்றுமொரு கை கௌண்டரில்—லக்ஷாதிப் பிரபு, மில்முதலாளி கையில் தங்கக்கெடி யாரம்; ஐந்து விரல்களும் வைரமோதிரத்தைச் சுமந்து நின்றன. கேஷியர் முன்பே பரிச்சய முள்ளவன் போல் பணத்தை யெண்ணிக் கை யில் வைத்தான்! பணம் வைரமோதிரத்தைப் 'படார்' என்று ஒருஅடி அடித்துத்தன் பாஷையில் ஏசிக்கூறியது—'உன்னை விலைக்கு வாங்கியவன் நான் அல்லவா!'

அலக்ஷியப்போக்கில் பணத்தைவாரிப் பையில் போட்டுக்கொண்டான் ஸேட். பணுவைஎண்ணி அவனதுமுகத்தில் கர்வக்குறி தோன்றியது. பையினுள்ளிருந்த பணம்— 'பாவி, லோபி, போக்கிரி'—என்று உறுமியது.

ஷேட்டின் கண்களும் கேஷியரின் கண் களும் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன. 'ஸேட்'டின் வாயினின்றும் 'நமஸ்தே' என்ற சொல் எழுந்தது. கேஷ்யரின் வதனத்தில் புன் சிரிப்பு அரும்பியது.

பணத்தின் ஆதிக்யமல்லவா இது...?

இன்னுமொரு கை கௌண்டரை எட்டிப் பார்த்தது—சேவகனின் கறுத்துச் சுருங்கிப் போன கிழடு வாய்ந்த கை, அது.

கேஷியர் முகத்தைச் சுளித்தவண்ணம் ஒரு பார்வை பார்த்தான். அவனது பார்வை 'சம்பளத்துக்காகவா' என்று கேட்பது போல் இருந்தது.

ஆனால்...............

அவனது கிழக்கண்கள் கேஷியரின் அருகில் பரந்துகிடந்த பணக்குவியலைப்பார்ப்பதில் ஈடுபட்டிருந்தன, பசித்தவன் சோற்றுப்பானையைப் பார்ப்பது போல.

அலட்சியமாகப் பத்து ரூபாயை எடுத்துக் கேஷியர் வெறுப்புடன் விட்டெறிந்தான். கிழவனது கையில் சென்று பணம் சம்பாஷித்துக்கொண்டது 'கண் கணீர்' என்று. ஒளிமங்கிக் கறுத்திருந்த ரூபாய் ஒன்றைப்புரட்டிக் கிரட்டிப்பார்த்து விட்டு, 'இதற்குப்பதிலாக வேறு கொடுங்களேன்' என்ருன் கிழவன்.

"கிடையாது. நல்ல ரூபாய்தான். நீ பொட்டையா என்ன, இப்பவே உன் கண்ணும் கிழடு பட்டுவிட்டதா என்ன" என்ற கோபச் சொற்கள் கேஷியரதுவாயினின்றும்எழுந்தன. பாவம்! கிழவன் கொபத்தைப் பொருட்படுத்தாமல் பூனைபோல பதுங்கிமறைந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் பத்து ரூபாயும் தலைப்பா கையில் மறைந்தது.

கேஷியர் தனக்குள் சிரித்துக்கொண்டான். ஏன்?

'பணத்தின் ஆட்சியை எண்ணி'.

கௌண்டரிலும், இரும்புப் பெட்டியிலும், 'மணிபேகி'லும் பணம் "கண்கண் கணீர், டண் டண் டணர்" என்று பேசிக்கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

*கடைத்தெருவில்.........*

பெரிய கடைகளிலெல்லாம் 'ரௌப்ய வர்ஷம்!' வட்டம் வட்டமான வெள்ளிப்பணம், பணக்காரன், ஏழை, கூலி, பிச்சைக்காரன் என்று பாராமல் மாறிக்கொண்டேயிருந்தது, ரூபாயாகவும், சில்லறையாகவும்.

ஆனல்...........

நொண்டிப் பிச்சைக்காரன் ஒருவன் கையில் தடியூன்றிய வண்ணம் கதறிக்கொண்டிருந்தான்—'ஐயா, காலணுக் கொடுங்க, சாமி!' என்று.

தகரக் குவளையில் அரையணு ஒன்றை வைத்துத் தட்டிக்கொண்டே நின்ருன் மற்ருருவன். 'டண்-டண்' பிச்சைக்காரனது அரையணுவும் பிச்சை கேட்கிறது—'ஐயா நான் நொண்டி, நடக்க முடியாதுங்க. ஒரு காலணு வாச்சும் கொடுங்களேன் சாமி, உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு—'

'பசி கண்ணையிருட்டதய்யா—ஒரு காலணு'- தகரக்குவளையின் உள்ளேயிருந்து காலணுக் கதறுகிறது பசியுடன்.

ஆனல் பணம், பையிலும், மணிபேகிலும், மாதர்களின் இடுப்புமுடிச்சுக்களிலும், பிச்சைக்காரர்களின் வார்த்தைகளைப் பரிகசித்துக் கொண்டே போய்க்கொண்டிருந்தது—பணத்திற்கும் ஸ்வஜாதியபிமானம் இல்லைபோலும்.

'ஐயா' காலணு' என்று அரையணுவைத் தட்டியவண்ணம், நடுத்தர வயதுள்ள 'ஸேட்' ஒருவர் முன்னிலையில் போய் நின்ருன் ஒரு பிச்சைக்காரன்.

—"காலிப்பயலே—கண்ணில்லை—முட்டாள், பைத்தியம், உனக்குக் கண்ணில்லை. எப்போ பார்த்தாலும் காசா?"—பணம் பேசுகிறது.

நாகரிக உடையணிந்த வாலிபன்முன் தகரக் குவளையும் காலணுவும் தவங்கிடக்கின்றன காலணுப்பெற.

'காசில்லைன்னு சொல்றேன். நிக்கறயே. போடா' என்று சொல்லி வாலிபன் அவ்விடத்தைவிட்டு நகருகிருன்.

"இருக்குமய்யா, பாருங்க உங்களுக்குப் புண்ணியமுண்டு".

"இப்பத்தானே இல்லைன்னு சொன்னேன். புத்தியில்லை உனக்கு? போடா—பஸ் வந்தது. வாலிபன் குரங்குபோல் தொத்திக்கொண்டு ஒரு 'ஸீட்'டில் அமர்கிருன். பிச்சைக்காரன் அங்கும் கைநீட்டிக் கெஞ்சுகிருன்—'ஐயா, நீ நல்லா இருப்பே. ஒரு காலணுக் கொடு ஐயா'-

"உனக்கு எவ்வளவுதரம் இல்லைன்னு சொல்றது? ஆளை விடமாட்டேங்கறயே—போடா" என்று கூறிக்கொண்டே ஓரணுவை எடுத்துக் கண்டக்டரிடம் கொடுத்தான் வாலிபன். பிச்சைக்காரன் அதைக்கண்டு பிரமித்து நின்ருன். 'மணிபர்ஸி'லிருந்த பணம் 'கலகல'வென நகைக்கிறது. கையோடு கையாகத் திருட்டைக் கண்டுபிடித்தானே பிச்சைக்காரன்! அவனுக்கு ஏதாவது பிரயோஜனமுண்டா?

அதுதானே இல்லை.

பணம்தான் பொய் பேசுகிறதே! அவன் என்ன செய்வான்?

ஃ ஃ ஃ

அதே ரோட்டில்—— —— ——

கந்தல் துணியொன்றை இடுப்பில் சுற்றிக் கொண்டும், கிழிந்த பனியன் ஒன்றைமாட்டிக் கொண்டும், ரிக்ஷாக்காரன் ஒருவன், கிட்டத்தட்ட 250 பவுண்ட் நிறையை எட்டிப்பார்க்கும் 'ஸேட்ஜீ' யொருவரை உட்கார்த்தி இழுத்துவந்து திடீரென்று ரிக்ஷாவை நிறுத்தினன். கால்தவறிக் கீழே விழுந்தான். முழங்காலில் நல்ல காயம் பட்டுவிட்டது. நின்ற வேகத்தில் 'ஸேட்ஜீ', நல்லவேளை கீழே விழவில்லை. தட்டுத் தடுமாறியவண்ணம் கீழே இறங்கினர். இறங்கியதும் 'உதவாக்கரை! முட்டாள் பயல்' என்று கடிந்தார்.

# மூளை மனிதனுக்கு முக்யமானது




அதை
எப்பொழுதும்
குளிர்ச்சியாக
வைத்துக்கொள்ள
அவசியமானது

# ஜப்கோ லைம்கிளிஸ்

(லைம்ஸ் & கிளிஸரின் க்ரீம்)

கோடைகாலத்தில்
புருஷர்களுக்கும்
ஸ்திரீகளுக்கும்
இன்றியமையாதது

ஜய பாரதம் கம்பனி, மல்லேச்வரம், பங்களூர்


ரத்தம் ஒழுகுவதைக் கண்ட 'ஸேட்ஜீ'யின் கண்களிலும் கருணையொழுகியது. உடனே இரண்டணாவை ரிக்ஷாக்காரன் கையில் விட்டெறிந்தார். 'டண்டணார்' என்று ஒன்றையொன்று மோதிக்கொண்டு, ரிக்ஷாவாலாவின் கையை அடைந்தது பணம்.

'ஏண்டா, காயம் அதிகமில்லையேடா' என்று வினவியவண்ணம் இன்னுமொரு அணாவை அவனது கையில் விட்டெறிந்தார்.

'இல்லை' என்ற சொல் ரிக்ஷாக்காரனின் வாயினின்றும், இன்னுமொரு அணாவைக் கண்ட சந்தோஷத்தில் வெளிவந்தது. ஆனால் அவர் கண்மறைவுற்றதும் கால் காயத்தைப் பிடித்து அமுக்கியவண்ணம் பெருமூச்செறிந்தான்.

'இனி ரிக்ஷா இழுப்பது எப்படி' என்று மனத்துள் வினவியவண்ணம் கண்ணீர் சொரிந்தான், அவனல்ல—கையிலிருக்கும் ஓரணா கண்ணீர்விட்டது...

அடுத்த நிமிஷம், வேஷ்டியின் ஒரு முலையைக் கிழித்து முழங்காலில் நன்றாக ஒரு கட்டுக் கட்டிக்கொண்டான்; உடனே ரிக்ஷாவின் கைப்பிடியைக் கையிலெடுத்துக்கொண்டான். ஏன்?

'பணமல்லவா வேண்டும்?' மூன்றணாவைத் தலைப்பில் முடிந்துகொண்டு கடைத்தெருவை நோக்கி ஓடினான். சூரியன் அனலைக் கக்கிக்கொண்டிருந்தான். இருந்தாலும் பணம் அல்லவா இப்படி ஓடச்செய்கிறது அவனை. நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட உழைத்தான். ஒவ்வொரு தடவையும் சவாரியிறங்கியதும் பணத்தைக் கணக்குப் பார்ப்பான். அடுத்த நிமிஷம் இரட்டிப்பு உத்ஸாகத்துடன் தன் காரியத்தைத் துவக்குவான். முழங்கால் காயம் "வரவர"வென்று இழுத்தது. சிறிது நேரத்திற்கு ஒருதடவை அதைப் பிடித்து விட்டுக்கொள்வான். சந்துகளிலும், ரஸ்தாக்களிலும், கடைத்தெருக்களிலும் "சிரமத்தைப் பாராட்டாதே" என்று எச்சரித்தவண்ணம் பணம் அவனை இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. பணத்தின் எச்சரிப்பைக் கேளாமல் இருப்பது என்பது சாத்தியமா?

கடைசியாகச் சவாரியை இறக்கிச் சில்லறையாக இருந்த அணா பதினைந்தையும் 'பளபள' வென்று மின்னும் ரூபாயாக மாற்றினான். பிரகாசிக்கும் பணத்தைக்கண்ட அவனது கண்கள் மலர்ந்தன. உடனே பணம், கையிலும், பூமியிலும், கல்லிலும் 'டண்டண் டணார்' என்று சந்தோஷ ஆரவாரம் செய்யவாரம்பித்தது. பணத்தின் ஆரவாரத்தைக்கண்ட ரிக்ஷாக்காரனின் உள்ளத்தாமரையிலும் மலர்ச்சி ஏற்பட்டது.

வண்டி நிறுத்துமிடத்துக் கொண்டுபோய் ரிக்ஷாவை நிறுத்திவிட்டுக் கிளம்பினான்

ரிக்ஷாக்காரன். "எங்கேயப்பா நாலுநாள் வாடகை?" என்ற கண்டிராக்டரின் குரல் கணீரென்று எழும்பியது.

"இல்லீங்க. பொங்கல் கழிஞ்சதும் தந்துடறேனுங்க" என்று சொல்லி நழுவவாரம்பித்தான் ரிக்ஷாவாலா.

'எலே, பொங்கலுக்கப்புறமா' என்ற வினவிய கண்டிராக்டரது கண்கள் ரிக்ஷாக்காரனின் துணிமுடிச்சைக் கவனித்துவிட்டன. உடனே ஒரே பாய்ச்சல்! அடுத்த க்ஷணம் பணம் கையில்! தட்டிப்பார்த்தான். "சம்பாதிச்சுட்டுப் புளுகறயா காலிப்பயலே" என்று கடுகடுத்துக்கொண்டது, சிறிது நேரத்திற்குமுன் ரிக்ஷாக்காரனின் கையிலிருந்த அதே பணம்.

அடுத்த நிமிஷம் 'கணீர்' என்றொலித்த வண்ணம் கண்டராக்டரது பெட்டிக்குள் சென்றுவிட்டது ரிக்ஷாக்காரனைப் பாராமலே. ரிக்ஷாக்காரன் களைப்புற்ற, பணப்பசி நிறைந்துள்ள கண்களால் பார்த்தவண்ணம் நின்றான். பணத்தின் 'கணகண'வென்னும் ஒலி அவனைப் பரிகசித்து நின்றது. அதைக் கண்ணுற்ற ரிக்ஷாவாலாவின் விழிகளினின்றும் நீர் வெடித்துக்கொண்டு வெளிவந்தது. அவனது ஒவ்வொரு மூச்சும் 'பணம்-பணம்' என்று புலம்பியது.

'இது பணத்தின் புலம்பல்...........' என்று பணம் பேசிக்கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

*தீபாவளியன்று மாலை நேரம்,*

மின்சார ஒளியின் மத்தியில் 'தகதக'வென்று பிரகாசித்துக்கொண்டிருந்தது பணம்.

'ஸேட்' தனது இரும்புப்பெட்டியைத் திறந்தான். பணம் ரத்தின வைடூரியங்களின் மத்தியில் அலாதியான சோபையுடன் வீற்றிருந்தது. லக்ஷ்மீ பூஜை! அர்ச்சனை புஷ்பத்தால் அல்ல—பணத்தால்! மின்னொளியில் பணம் புன்முறுவல் பூத்தது—'ஸேட்'டின் பைத்தியக்காரத்தனத்தை, பணவாசையை, குருட்டு நம்பிக்கையைக் கண்டு.

தீபாவளிப் பண்டிகையல்லவா! ஒரே குதூகலம்! மின்சாரத்தின் வெட்டொளியில், கண்ணைக்கவரும் கடைகளில், வாண வேடிக்கைகளில், பட்டாசுக்களின் 'பட பட' என்ற ஒலியில், நாகரிக உடையின் படாடோபத்தில், பணம் அட்டகாசம் புரிந்துகொண்டிருந்தது. அது தன்னொலியில் ஈடுபட்டிருந்தது. அதன் ஒலியைக்கேட்டு உலகமே அதில் லயித்திருந்தது.

பணமே ஒரு சங்கீதக் களஞ்சியம்போலும். தானறிந்த சங்கீத ஞானத்தை வெளியிட்டுக்கொண்டிருந்தது பணம். தானறிந்ததைப் பிறருக்கு அறிவிக்கும் பரமார்த்தி அது! சாராயக்கடைகளிலும் சூதாட்டக் கும்பலிலும் தன் கைச்சரக்கை விட்டுவிளாசிக்கொண்டிருந்தது பணம்.

தூய்மையான உடைதரித்த பாரசீக வாலிபன் அவன்! தனது குறும்பு நிறைந்த இருவிழிகளாலும் ஜனங்களை மயக்கிப் 'பாட்டிலை'த் திறந்துகொண்டேயிருந்தான் அவன்! 'கேஸ்' (Gas) நிறைந்த சாராயப்பாட்டில்களாதலால், அதனின்றும் "மூடி" கிளம்பி எட்டின உயரம் வரை சென்று கீழே விழுந்து பரவிக்கிடந்தது. பணம் அதன் சப்தத்தைக்கேட்டு "நீ என்னை மிஞ்சவா? கனவிலும் நினைக்காதே!" என்று சொல்வதுபோல் கௌண்டரில் சரமாரியாகப் பொழிந்துகொண்டிருந்தது. அதைக் கண்ணுற்ற பாரசீக யுவனது முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

'ஜானி வாகர்' 'ஹ்வைட் ஹார்ஸ்' இச்சொற்கள் சாராய நாற்றம்—இல்லை—சாராய வாஸனை வீசும் வாயிலிருந்து எழும்பும்! 'நான்தான் முன்னணியில் நிற்பேன்' என்று சொல்வதுபோல் 'கண் கணீர்' என்று ஒலித்த வண்ணம் பணம் பாரசீகயுவனின் 'கௌண்டரை'த் தாவியடையும். என் சொல்வது போங்கள், பாரசீகயுவனின் கௌண்டரில் பண மழைதான் பொழியும்!

ஜனங்களைப் பித்தராக்கும் தன் சக்தியை எண்ணிப் பணம் 'கல கல'வென நகைக்கும்!

கடையின் மற்றோர் புறம். பெரிய வட்ட மேஜை போடப்பட்டிருக்கிறது. அதைச்சுற்றி ஜனங்கள் உட்கார்ந்திருக்கின்றனர். பணம் சுழலுகிறது அங்கே. ஆம், உண்மைதான்-பணம் சுழன்றுதான் கொண்டிருக்கிறது, வேகமாகச் சீட்டின் உதவியைக்கொண்டு. மேஜையின்மேல் பணம் ஏராளமாகக் குதிக்கும்—நாலைந்து நிமிஷத்தில் இருகைகள் ஒன்று சேர்ந்து அதைக் குவிக்கும்-அதைக்கண்டு நண்பர்கள் ஆனந்தக்கூத்தாடுவார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் பணம் விரிப்பில் விரிந்து கிடக்கும். மூன்றாவது கையொன்று அதைத் திரட்டும்— அடுத்தக்ஷணம் 'டால்' அடிக்கும் அப்பணக்குவியல் மற்றொரு கையை அலங்கரிக்க நகர்ந்துவிடும். அச்சமயம் காண வேண்டுமே, முகத்தில் சந்தோஷ, வருத்த பாவம் பிரதி பலிப்பதை! பணத்தின் தோல்வியையும் வெற்றியையும் முக பாவம் பிரதி பலிக்கச் செய்யும், 'டபிள் கலர்' புடவையைப் போல. "மகான்களுக்கேது சுகமும் துக்கமும்" என்றுரைப்பதுபோலப் பணம் அங்கும் சதா காலமும் கண் கண்கணீர்! என்று ஒரேவிதமான ஒலியில்ஒலித்துக்கொண்டு தானிருக்கும்.

ஃ ஃ ஃ

“நான் உனக்காக உயிரையும் அர்ப்பணம் செய்யத்தயார்; ரமா” என்று ‘இஸ்திரி’ கலையாமல் மகமல் ஆடை உடுத்தி மிகவும் ஜோராக அமர்ந்திருக்கும். நவநாகரிக வாலிபன், நாட்டியமாடும் யுவதியின் கண்களுடன் சம்பாஷித்துக் கொண்டு, கூறினான்.

“ஏன் ரமா! என்னநான்மட்டும் மாட்டேனா—!” கண்ணடித்த வண்ணம் மற்றொரு வாலிபன் வினவலானான்.

முதலாமவன் ‘அவளை விழுங்கி விடுவது போல’ வெறித்தான். பொருமைக்குப்பாத்திரமாகிய நடனமாது சிறிது தலையைக்குனிந்தாள். அவளது சிவந்த உதடுகளில்— மேனியில்— புன்முறுவல் தவழ்ந்தது.

அவளது அன்னநடை, குறுகிய இடை, சிவந்த கன்னம், அழகிய மேனி, பணக்கார யுவனின், மணிபேகை, வெளியே வரவழைத்தது. ஏன்? அன்பை—காதலை—விலைக்கு வாங்கும்பொருட்டு ‘மணி பேக்’கையை அடைந்ததுதான் தாமதம். பணம் குலுங்க நகைத்தது, அந்த நடனமாதின் ஜோடித்த அறையில்.

அதன் அட்டகாசச் சிரிப்பைக் கேட்டு நடனமாதும் களுக்கெனச் சிரித்தாள். காம வெறியில் ஈடுபட்டிருந்த அநேகந் தலைகள் எழும்பி எழும்பிப்பார்த்தன, அவளது மோகன-கள்ளச் சிரிப்பை. உடனே மணிபர்ஸிலுள்ள பணம் ‘காதலின் மூல்யத்தை’ அளிக்க எண்ணிக் குலுங்கியது—அவசரப்பட்டது.

இதுதான் சமயமென்று பக்கவாத்தியங்கள் முழங்கவாரம்பித்தன. நடனமாதின் கால் சிலம்புகளும் குலுங்கி அதை ஆமோதித்தன. அடுத்த நொடியில்.........

“கண்டதுண்டோ, கண்ணன்போல்!”

‘சபாஷ்! பலே பேஷ்!’ என்ற எதிரொலி! ‘கண்கண்கணீர்’ என்று ‘மணிபேக்’கிலுள்ள பணத்தின் துடிப்பு! ஒரு கையில் இரண்டு ரூபாய் மற்றொன்றில் பத்து இன்னுமொன்றில் இருபது, முப்பது, நாற்பது. அந்தப் பணக்கார வாலிபன் கையில் இருநூறு ‘கரகர’வென்று த்வனித்துக்கொண்டிருந்தது.

நடனமாது நாட்டிய வெறிகொண்டாள். ஆனால் கண்மட்டும் பணத்தில் குறி! நூறு ரூபாய் நோட்டை ‘அலாக்’காக, நடன தோரணையில் ‘ஜாக்கெட்’ பை ஒன்றில் திணித்துக்கொண்டாள். “மூடர்களே! எதற்கும் முதலில் எனக்குத்தான் அப்பா, பாக்கியம்! இதோ பார்! எனக்குத்தானே முதலில் அவளை மார்புறத் தழுவும் பாக்கியம் கிட்டிற்று” என்று கூறிக்கொண்டே, அவளது மார்பைச் சரணடைந்தது பணம் — நூறு ரூபாய் நோட்டு.

ஒவ்வொரு ரூபாயும் போட்டி போட்ட வண்ணம் அவளது ‘ஜாக்கெட் ஜேபியை நிரப்பின. பிறகு ஜேபிக்குள்ளிருந்தவண்ணம் ‘பாதசர’த்தின் ஒலிக்கிணங்க நடனமாட ஆரம்பித்தது பணம். “சங்கீதத் துறையில் மட்டுமல்ல. நடனத்துறையிலும் நாங்கள் தேர்ச்சிபெற்றுள்ளோம்” என்று உரைத்த வண்ணம் ‘கலகல’வெனக் குலுங்கின.

பை நிறைய நிறைய அவளும் மிக மிடுக்காக ஆடினாள். ஆட்டத்திற்குத் தகுந்த பாட்டுப் பாடிக்கொண்டிருந்தது பணம். மோன நிலையில் தன்னை மறந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கி, சங்கீதம், நடனம் இரண்டிலும் உள்ள தனது பாண்டியத்தை ‘கண்கணீர்’ என்ற த்வனிமூலம் தெரிவித்துக்கொண்டிருந்தது பணம்.

ஃ ஃ ஃ

நடன மாதர்களின் யௌவன வலையில் சிக்குண்டு, அவர்களை மார்புறத் தழுவியும், குடிகாரர்களின் கைவிளையாட்டுப் பொம்மையாக ஆகியும், சூதாடிகளின் மாறும் முகபாவத்தைக் கண்ணுற்றும், பணக்காரர்களின் முட்டாள்தனத்தை எண்ணியும், பிச்சைக்காரர்களின்—கூலிகளின்—அல்பத்தனத்தை—பிசுனாரித்தனத்தை—நிந்தித்துக்கொண்டு, கேஷியரின் கர்வம் நிறைந்த கண்களைப் பார்த்தும், தன்னையாக்கியோர்களாகிய கூலிகளின் ஆச்சரியம் நிறைந்த கண்களைச் சிந்தித்துக் கொண்டும், பணம் ஆடிக்கொண்டிருந்தது; பாடிக்கொண்டிருந்தது; அட்டகாசம் செய்து கொண்டிருந்தது.

தனது ஆட்சி, தனது ஆதிக்கியம், தனது கௌரவம், தனது சாம்ராஜ்யம், தனது காதல் இவைகளைப்பற்றிப் பணம் தனக்குள் பேசிக்கொண்டிருந்தது.

வட்டம் வட்டமான அழகிய உருவம் படைத்த வெள்ளிப் பணம்! கடைத்தெருக்களிலும், சந்து பொந்துகளிலும், சாலைகளிலும், மோட்டார்களிலும், பாங்கியின் கௌண்டரிலும், மாதர்களின் ‘ஹேண்ட்பாக்’களிலும், ஏழைகளின் இடுப்பு முடிச்சுக்களிலும், செல்வந்தர்களின் இரும்புப்பெட்டிகளிலும் பணம் தனது சங்கீத அனுபவத்தையும் தனது ஆட்சியையும் “கண்கணீர்” என்று கூறிக்கொண்டிருந்தது.

வட்டம் வட்டமான அழகிய உருவம் படைத்த வெள்ளிப் பணம் பேசிக்கொண்டிருந்தது.

(‘விசுவமித்திரன்’ என்ற ஹிந்தி பத்திரிகையில் வெளியாகிய கட்டுரையொன்றைத் தழுவி எழுதியது)

# வாஜபேயரின் வைராக்கியம்

"மாரார்"

●

விருபாக்ஷ வாஜபேயர் வாழ்க்கையை வெறுக்கும்படி அவர் பாரியை பலவிதமாகத் தூஷித்துக் கண்டித்து அண்டைஅயல் வீடுகளிலுள்ளவர்களுக்குக் காது கேட்கும்படி அவரை அலட்சியமாக வாயில் வந்தவாறெல்லாம் பழித்துப் பேசினாள். ஸம்ஸாரத்தினிடம் பயம் சிறிதுகொண்டுள்ள வாஜபேயர் திண்ணையில் வந்து சார்மணையில் சாய்ந்துகொண்டார். "இப்படித் தினந்தோறும் அவமானப்படுவதைப்பார்க்கிலும் பிராணனை விடுவது மேன்மையாகும். ஈசுவரா, அனாயாஸமாக என்னை இப்பொழுதே அழைத்துப்போகக் கூடாதா?" என்று மனச்சோர்வுடன் நொந்துகொண்டார். அப்பொழுது இரவு ஒன்பது மணி. இருள் எங்கும் மூடியிருந்தது. வாஜபேயர் மேற்கண்ட வார்த்தைகளை முடித்தாரோ இல்லையோ, திடீரென்று அவர் கண்முன் அந்த இருளில் மனிதரூபம் தரித்த ஒரு பெரிய வடிவம் தோன்றிற்று. வாஜபேயர் திடுக்கிட்டுப்போனார். மெய் மயிர்க்கூச்சல் அடைந்தது. உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரை தேகம் வியர்த்தது. நாக்குக் குழற "யார் தாங்கள்?" என்று மெதுவாக வினவினார். அதற்கு அந்த மகாபுருஷன், "நான் தருமராஜாவின் தூதன். ஒரு நிமிஷத்திற்கு முன் நீர் உயிர் நீத்து இவ்வுலகை விடவேண்டுமென்று வேண்டிக்கொண்டீர். உம்மேல் இரங்கி, தருமராஜா உம் ஆத்மாவைக் கொண்டுவரும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். உமக்கு ஒருவிதமான மரணவேதனையும் இல்லாமல் அனாயாஸமாக மாரடைப்பு என்கிற ஒரு வியாஜத்தின்மூலம் உம் ஆத்மாவைத் தேகத்தினின்றும் பிரித்துக் கொண்டுபோகிறேன்" என்று பதில் கூறவும் வாஜபேயருக்குப் பயம் பன்மடங்கு அதிகரித்தது. ஒன்றும் பேசமுடியாமல் நெஞ்சடைத்தது. தலை கிறுகிறுத்தது. என்றாலும் சற்றுத் தைரியம்கொண்டு யமதூதருக்கு அஞ்சலி செய்து வணங்கி, வெகு விநயத்துடன் பின்வருமாறு பேசலாயினர்.

வாஜபேயர்: என் ஸம்ஸாரம் ஒரு வெகுளி. முன்கோபம் ஜாஸ்தி. அதனால் படபடவென்று வசைமொழிகளைக் கொட்டிவிடுவாள். வழக்கம்போல் இன்று கோபத்தில் ஏதோ தத்துப்பித்து என்று என்னைத் திட்டினாள். நான் அவள் கோபத்தையும் அவ்தூறாகப் பேசும் வார்த்தைகளையும் ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. ஆனால் இன்று எனக்கு வழக்கமாய் உள்ள பொறுமை கொஞ்சம் குறைந்துபோயிற்று. அந்த ஸமயத்தில் பைத்தியம் பிடித்தவன்போல் இங்கு வந்து படுத்துக்கொண்டு பகவான் எப்போது அனாயாஸமான மரணம் எனக்கு அளிப்பார் என்று சொல்லிவிட்டேன். அந்த வார்த்தை க்ஷணிக வைராக்கியத்தினால் பிதற்றினதேயொழிய நிஜமான உறுதிவைராக்கியம் அன்று. ஆகையால் தாங்கள் அவ்வேண்டுகோளை நிறைவேற்றாதருளவேண்டும். தங்களுக்கும் தருமராஜாவுக்கும் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை. மயான வைராக்கியம், பிரஸவ வைராக்கியம் என்று சொல்வதுபோல் இதுவும். தருமராஜா அவர்கள் இதை உண்மையான விரக்தி என்று நினைத்தது என் துரதிருஷ்டம். தாங்கள் தீனனான எனக்கு இரங்கித் தருமராஜாவிடம் திரும்பிச் சென்று எனக்கு இன்னும் சிறிது காலம் உயிர்ப்பிச்சையளிக்கும்படி தயவு செய்யவேண்டும்.

தூதன்: நீர் ஸாயங்காலம் ஒவ்வொரு நாளும் புராணம் வாசிக்கும்போது கேட்போர்கள் மனம் நையும்படி "இவ்வாழ்க்கை நீர்க்குமிழிபோன்றது. இதைச் சாசுவதம் என்று நம்புவது மூடத்தனம். நித்தியமாயும் சாசுவதமாயுமுள்ள முக்தியையே புத்திமான் நாடவேண்டும். யமன் இன்றே வரலாம் என்றெண்ணிச் சித்தமாய் இருக்கவேண்டும்" என்றெல்லாம் உபதேசித்து வருகிறீரே. அப்படியிருக்க நீரே இப்படிப் பயப்படலாமா? வாழ்க்கையில் என்ன சுகத்தை அனுபவிக்கலாம் என்றிருக்கிறீர்? பத்தினியும் அப்படி அனுகூலதாம்பத்தியத்துக்குத் தகுந்தவள் அல்லவென்று தோன்றுகிறதே. ஆசை எதன்மேலோ வைத்திருப்பதாகத் தெரிகிறதே அது என்ன?

வாஜபேயர்: அப்படி வித்தியாஸமாக நினைக்கக்கூடாது. கோபம் வந்தபோது தலைகால் தெரியாமல் குதிக்கிறாளே தவிர அவள் சுபாவமாக நல்லவள்தான். ராமாயணம் முதலிய புராணம் வாசிக்கும்பொழுது சரீரம் நித்தியம் அல்ல என்று சொன்னால் ரஸமான உபதேசம் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆனால் இவ்வுலகத்துப் பொருள்களிலுள்ள ஆசை எனக்கு இன்னும் தீரவில்லை. தாங்கள் பரிகாசம் செய்தாலும் செய்யலாம். ஒரு சிறிய விஷயத்திலிருந்தே என் மனம் இன்னும் முக்தியைத் தேடத் தகுந்த பரிபக்குவமடையவில்லை என்று புலப்படும். கொல்லையில் ஒரு பலா மரம் இருக்கிறது. நல்ல ஜாதிக் கன்றைக் கொண்டுவந்து என் கையினாலேயே வைத்துப் பயிராக்கிவந்திருக்கிறேன். இப்பொழுது ஆறு வருஷமானதும் அது மரமாகி மூசுவிட்டிருக்கிறது. இன்னும் இரண்டு மாதத்தில் நல்ல பழமாகிவிடும். அந்த மரத்துச் சுளை

சாப்பிடாமல் இறந்தேனுனல் என் நெஞ்சு வேகாது,

தூதர்: அற்ப சுகம். பேரானந்தம் என்று விளக்கி, வகுத்துக்காட்டி, ஸபையில் எல்லோரையும் ஆச்சரியப்படும்படி செய்த வாஜபேயர் கேவலம் இந்தப் பலாச்சுளையிலுள்ள மோகத்தை வெல்லமுடியாதா? நீர் பாலியம் முதல் சாஸ்திரங்கள் கேட்பது, வேதாத்தியனம் செய்வது, கருமானுஷ்டங்களைச் செவ்வனே செய்வது, பிறருக்கு ராமாயணம், பாகவதம் முதலிய நூல்களைப் படித்துச் சொல்வது, இப்படிப்பட்ட ஸத்காலக்ஷேபம் பண்ணிவந்திருக்க, மரணமென்ருல் ஏன் பயப்படுகிறீர்? "மரணம் என்பது நித்திரைக்குச் சமானம், நித்திரைக்குப் பிறகு விழித்துக்கொள்வதுபோல் மறுலோகத்தில் விழித்துக்கொள்வான் மரணமடைந்தவன்" என்று நீர் எத்தனை தடவை பிறருக்குச் சொல்லியிருக்கிறீர். "பரோபதேச பாண்டித்யம்" என்பது உமக்கும் பொருந்தும்போலிருக்கிறதே!

வாஜ: தாங்கள் பரிகாசம் செய்வதில் ஒன்றும் தவறு இல்லை. சாபல்யம் எனக்கு இன்னும் நீங்கவில்லை. கருடபுராணத்தைப் படித்ததுமுதல் மரணம் என்ருல் எனக்குப் பீதி அதிகமாயிற்று. இருபது வருஷத்துக்கு முன் யௌவன மதத்தினுல் இரண்டொரு துஷ்கிருத்தியம் செய்துவிட்டேன். வேறு ஒருவருக்கும் அது தெரியாவிட்டாலும் என் மனத்தில் அவைகள் உறுத்திக்கொண்டிருக்கின்றன. அவ்வகையான பாவஞ் செய்தவர்களுக்கு யமலோகத்தில் விதிக்கப்படும் தண்டனையைப் பற்றிக் கருடபுராணத்தில் சொல்லியிருப்பது பயங்கரமாய் இருக்கிறது.

தூதர்: சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து வருகிறீர். உமக்குத் தெரியாதா, என்ன? ஏதோ பாபம் செய்திருந்தால் அதற்கு விதித்திருக்கும் பிராயச்சித்தங்களை அனுஷ்டித்தால் அது தீர்ந்துவிடுமே. நீர் அப்படிப்பட்ட பிராயச்சித்தம் செய்திருப்பீர் என்று நினைக்கிறேன். பின் ஏன் யமதண்டனைக்குப் பயப்படவேண்டும்?

வாஜ: அதை அவ்வளவு சுலபமாகச் சொல்லுகிறீர்களே. திடகாத்திரனுய் இருக்கும் நான் திடீரென்று ஒரு நாள் நாலு வைதிகர்களைக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு பிராயச்சித்தம் செய்வதென்ருல் அவர்கள் எதற்காக என்று கேட்பார்கள். ஸகல பாபங்களுக்குமென்று கூறினுல் எளிதில் நம்பமாட்டார்கள். படுத்த படுக்கையாய்ப் படுத்துப் பிழைப்பது சந்தேகம் என்று வைத்தியர்கள் கைவிட்ட பிறகுதான் அப்பேர்ப்பட்ட பிராயச்சித்தம் பண்ணுவது உலகத்தில் வழக்கமாயிருக்கிறது. இப்பொழுது செய்தால், வைதிகர்கள் ஒன்றுக்குப்பத்தாகக் கதைகட்டி நான் சுத்த அயோக்கியன் என்று எங்கும் பிரசாரம் செய்வார்கள். வைதிகர்களுள் பரஸ்பரம் பொருமை கூத்தாடுவது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ருத்திராக்ஷம் அணிந்து விபூதி பளபளவென்று இட்டுக்கொண்டு நான் விவாகங்கள் நடக்கும் கிருகஸ்தர் வீடுகளுக்குப்போனுல் எஜமானன் வரவேற்று வெகு மரியாதையாய், "வாஜபேயர்வாள் வரவேணும் வரவேணும்" என்று உபசரித்து, அக்கிரதாம்பூலம் கொடுக்கிருர்கள். மற்ற வைதிகர்களுக்குக்கொடுக்கும் தக்ஷிணையைவிட இரண்டுபங்கு அதிகமாய் எனக்குக் கொடுக்கிருர்கள். சுகமாய் இருக்கும்போது பிராயச்சித்தம் செய்தேனுனல் உடனே என்னை அதோகதியில் தள்ளிவிடுவார்கள். வரும்படியின் வாயில் மண் விழுந்துவிடும்.

தூதர்: அதெல்லாம் இருக்கட்டும் என்னுடன் கூட வருவதற்கு என்ன சொல்கிறீர்? தருமராஜாவின் உத்தரவு என்னவென்று தெரிந்துகொண்டீரல்லவா?

வாஜ: உங்களை நமஸ்காரம் பண்ணிக் கேட்டுக்கொள்கிறேன். பெரிய மனதுபண்ணி, தாங்கள் தருமராஜாவிடம் எனக்காகச்சிபார்சு செய்து எனக்கு இன்னும் கொஞ்சகாலம் இங்கேயே இருக்கும்படி வரன் வாங்கித்தர வேண்டும். இப்பொழுது பாகவத புராணம் பெரிய ஸதஸ்ஸில் தினம் வாசித்துக்கொண்டு வருகிறேன்—தசமஸ்கந்தம் ஆரம்பித்து மூன்று மாதமாகிறது. சீக்கிரம் ருக்மிணி கல்யாணம் சொல்லும் கட்டம் வரும், அநேகம் தனிகர்கள் ஆதரித்துச் சிரத்தையாய்க் கேட்டு வருகிருர்கள். கலியாணத்தில் சுமார் அறுநூறு எழுநூறு ரூபாய் சேகரித்து ஸம்பாவனை செய்வார்கள் என்று நினைக்கிறேன். என் ஸம்ஸாரம் வெகுநாளாக வைரத்தோடு வாங்கிக்கொடுக்க உங்களுக்கு நாதி இல்லையே என்று இகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிருள். ஸம்பாவனைப் பணத்தைக்கொண்டு இன்னும் ஒரு நூறு சேர்த்து ஒரு ஜதை வைரத்தோடு வாங்கி அவளாசையைத் தீர்த்துவைக்கலாம் என்றிருக்கிறேன். அப்படியே ஆகட்டும் என்று தாங்கள் அனுமதி கொடுக்கவேண்டும்.

தூதர்: ருக்மிணி கல்யாண கட்டம் இன்னும் எத்தனை நாளைக்கெல்லாம் வரும்?

வாஜ: சுமார் இரண்டுமாத காலம். ஒரு நல்ல நாள் பார்த்து அன்று அதை உத்ஸவமாகக் கொண்டாடுவது வழக்கம்.

தூதர்: நீர் என்ன சொல்லுகிறீரென்ருல் இன்னும் இரண்டுமாதம் ஜீவித்திருக்கவேண்டுமென்று. சரிதானே?

வாஜ: அப்படிக் கச்சேரிக்காலத் தீர்ப்பு மாதிரி கண்டிப்பாய் இரண்டுமாதமென்று குறிப்பிடலாகாது. நல்ல வைரமாகப் பார்த்து வாங்கவேண்டும், அதற்கு வைரப் பரீக்ஷை தெரிந்த நாலைந்து பெயரிடம் காண்பித்துப் பொறுக்கி எடுக்கவேணும். பிறகு தோடு கட்டவேண்டியிருக்கும். இந்த மகா பாபி தட்டார்கள் இலேசில் வழிக்கு வரமாட்

டார்கள், இன்றைக்கு நாளைக்கு என்றெல்லாம் இழுக்கப்போடுவார்கள்.

தூதர்: ஆகட்டும் நீர் சொல்லுகிறபடி இன்னொரு இரண்டுமாதம் ஆகலாம். சரி நாலு மாஸம் ஆனதும் நான் மறுபடியும் வரலாமல்லவா? தருமராஜாவிடம் அப்படிக்கு உத்தரவை மாற்றித்தரும்படி கேட்கலாமல்லவா?

வாஜ: சரியாய் யோசிக்காமல் சொல்லிவிட்டேன். தாங்களும் ஆலோசித்துப் பார்க்கவில்லைபோலும். தோடு கட்டி என் பாரியை அவைகளை யணிந்த மறுநாள் தாங்கள் மறுபடியும் வந்து என் ஆத்மாவை அழைத்துச் சென்றுவிட்டால், அவளுக்குத் தோடுசெய்து கொடுத்துப் பிரயோஜனமென்ன? கழற்றிவைக்கவேண்டியதுதானே. பிறகு அவைகளை விற்பதுகூடக் கஷ்டமாகிவிடும். "இந்த வைரத்தோடு வாங்கினவுடன் வாஜபேயர் ஸம்ஸாரத்துக்கு வைதவ்யம் வந்துவிட்டது. வைரங்களில் ஏதோ கெட்ட தோஷம் இருக்கிறாப்போலிருக்கிறது. வைரம் நன்றாகப் பார்த்து வாங்கியிருக்கமாட்டார்" என்று சொல்லி விலைபோவது பிரும்மப்பிரயத்தினமாய்விடும்.

தூதர்: வாஜபேயரே, உம்மனதில் இருப்பதை வெளிப்படையாகச் சொல்லுமேன்? நீர் எப்பொழுதுதான் இவ்வுலகத்தைவிடத் தயாராயிருப்பீர்?

வாஜ: க்ஷமிக்கவேண்டும். என் தாயார் எண்பத்திரண்டு வயது வரையில் ஜீவித்திருந்தாள். என் தகப்பனார் எண்பத்தைந்தாவது பிராயத்தில் காலகதியடைந்தார். தாங்களும் எமதருமராஜாவும் ஏழையின் மீதிரங்கி நானும் அவர்களைப்போன்ற பிராயத்தை யடையுமட்டுமாவது உயிரோடிருக்கும்படி தயவுபண்ணவேண்டும்.

தூதர்: அப்படிச்சொல்லும். ஒளிமறைவாய்ப் பேசுவதில் என்ன பிரயோஜனம்? உம்மை ஒரு விஷயம் கேட்க விரும்புகிறேன். நீர் உபநிஷத்துக்கள், ஸூத்திர பாஷ்யம் முதலிய சாஸ்திர நூல்கள் காலக்ஷேபம் செய்திருக்கிறீர். சிஷ்யர்களுக்கும் அந்தக் கிரந்தங்களைப் படிப்பித்திருக்கிறீர். அவைகளில் கூறியுள்ள முக்தி என்னும் அகண்டப் பிரமானந்தத்தில் உமக்கு நம்பிக்கையில்லையா? அப்படி விசுவாஸம் இருந்தால் அந்தப் பிரமானந்தத்தை நீர் இச்சிக்கவில்லையா? அதில் விருப்பம் இருந்தால் இவ்வுலகம் அற்பமாகவும் நீரஸமாகவும் தோன்றுமே.

வாஜ: சங்கர பகவத்பாதாள் விளக்கிக் காண்பித்துள்ள ஸச்சிதாநந்த ஸ்வரூப பிரமானுபவம் ஒன்று உண்டென்று நம்பிக்கை மற்றவர்களைக் காட்டிலும் எனக்கு அதிகம். ஆனால் பக்த சிகாமணி ஒருவர் சுலோகத்தில் சொல்லியபடி இவ்வுலகத்தில் விபூதி, ருத்திராக்ஷம் அணிந்து, சிவாலயம் தினந்தோறும் சென்று, பிரதக்ஷிணம் செய்து, அம்பாளையும் ஈசனையும் தரிசனஞ்செய்து சம்போ, சங்கரா என்று வாய்விட்டுக் கூவியனுபவிக்கும் ஆநந்தத்துக்குப் பிரமானந்தமும் நிகராகாது. அதனால் இங்கேயே சிவபக்தி செய்துகொண்டு என் தாய் தந்தைமார்கள் அடைந்த வயது வரையில் ஜீவித்திருக்கும்படி உத்தரவு செய்யவேண்டும். அப்படிக் கிருபை செய்தால் அந்நன்றியை ஒருநாளும் மறவேன். எனக்கு ஸம்ஸ்கிருதத்தில் கவனம் செய்யும் சக்தி உண்டென்று பிறர் சொல்வார்கள். எனக்குக் கிருபை காண்பித்த தருமராஜாவை ஸ்தோத்திரம்பண்ணி ஒரு நூறு சுலோகங்கள் செய்து தர்மராஜ சதகம் என்று அதற்குப் பெயரிட்டு, என் ஜீவகாலம் முடியும் வரையில் ஒவ்வொரு நாளும் அந்தச் சதகத்தை ஜபிப்பேன்.

தூதர்: இதைக் கேட்டதும் மேகம் இடித்தாற்போல் சிரிப்பையடக்கமுடியாமல் நகைத்தார். வாஜபேயர் நடுநடுங்கித் திண்ணையில் எழுந்துநின்றார். முன்னால் தோன்றின உருவம் திடீரென மறைந்தது. வாஜபேயர் சரேலென்று உள்ளே போய்ப் பத்தினியிடம் தான் எமதூதனை நேரில்கண்டு பேசினதையும் அவன் மறைந்ததையும் வர்ணித்தார்.

அம்மாள் நன்றாயிருக்கு. இதுவரையில் பூதஞ்சையும் பிடிவாதமும் மாத்திரம் இருந்தன. இப்போ பைத்தியமும் பிடித்துவிட்டாற்போல் இருக்கிறது. எமனாவது, தூதனாவது, பார்க்காவது, பேசவாவது, போதும், நிறுத்துங்கோள். வெளியில் சொல்ல வெட்கமில்லையா என்று மறுமொழி பகர்ந்தாள்.



டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின்
டானிக்

# தேர்ப் புளியமரம்

"கௌசி"

●

ஆண்டிவரதப்பட்டி பஞ்சாலைத்தொழிலுக்குப் பேர்போன ஒரு சிறு கிராமம். ஆயினும், அங்கு நான்கு தொழிற்சாலைகள் உண்டு. தொழிற்சாலையென்றால் குறைந்தது இரண்டாயிரம் தொழிலாளிகளாவது இருப்பர். தொழிலாளிகள் பக்கத்துக் கிராமங்களில் இருந்து கால் நடையாக ஆண்டிவரதப்பட்டிக்கு வந்துபோவது வழக்கம். காலை ஐந்தேமுக்காலுக்குத் தொழிற்சாலைச் சங்கு காண்டாமிருகம் அடிபட்டுக் கதறுவதுபோன்று அலறும். தொழிலாளியர், ஆண்களும் பெண்களும், உடை உடுத்திச் சிறு சோற்று மூட்டைகளுடன், ஆதவன் உதிக்கு முன்னே, ஆண்டிவரதப்பட்டி நோக்கிக் கூட்டம் கூட்டமாய் வரும் காட்சியே ஒரு தனிக் காட்சி. இதற்கு உவமானம் கூறுவது எளிதல்ல. கூட்டம் கூட்டமாய் இந்திய சத்யாக்ரஹிகள் சிறைச்சாலை நாடும் காட்சிதான் உவமை. சத்யாக்ரஹிகளுக்கோ விடுதலையுண்டு! ஆனால் இத்தொழிலாளியருக்கோ!—இயந்திரங்களின் கணகணப்பு ஓசையும், பஞ்சுத்தூசியைச்சுவாசிப்பதால் வரும்நோயும் உண்டு! சங்கு ஊதினவுடன் எழுந்திருப்பதும் ஓட்டமும் நடையுமாய் ஆலைக்கு வருவதும், நரகத்தின் ஒலிகளின் நடுவே தொழில்செய்து மாலை சூரியனுடன் வீடு செல்வதும் வாழ்க்கையின் விதி. இயந்திரங்களின் ஆயுட் பலத்தை உத்தேசித்து (தொழிலாளியரின் அவசியத்தை நோக்கி அல்ல) ஞாயிற்றுக்கிழமை பூரண விடுதலையுண்டு. அந்த ஒரு நாளில்தான் அவர்களுடைய கவிதையுணர்ச்சியும் கலாரஸமும் பீரிட்டுக்கொண்டு செல்லவேண்டும். அன்று பக்கத்துப் பட்டணத்துத் தமிழ் டாக்கிக் கொட்டகைகள் இன்று ஆறு காட்சிகள் என்று ஏன் போடமாட்டார்கள். இந்தப் பஞ்சாலைகளை நடத்தும் அதே புண்ணியவான், சினிமாக் கொட்டகைகளையும் நடத்துகிறான். தொழிலாளியர்கள் ஆன்மவளர்ச்சிக்கு இன்றியமையாதனவான நவரஸப் பயிற்சியையும் அவர்களுக்கு ஊட்டுகின்றேன் என்று அந்தப் பஞ்சாலை டாக்கி முதலாளி ஏன் இறுமாப்புடன் மார்தட்டிக்கொள்ளமாட்டான். தொழிலாளியரின் தேவைகளான உப்பு, புளி, துணி, பீடி முதலியவை வாங்க ஒரு பெரிய ஸ்டோர், ஆண்டிவரதப்பட்டியில் உண்டு. அதுவும் பஞ்சாலை முதலாளியாலேயே நடத்தப்படுவது. சனிக்கிழமை அன்று பட்டுவாடா செய்யப்பட்ட சம்பளப் பணம் மறு சனிக்கிழமைக்குள் சினிமாக் கொட்டகை, ப்ரொவிஷன் ஸ்டோர்வாயிலாக, முக்காலும் திரும்பி முதலாளிக்கே சென்றுவிடுகின்றது. கல்லில் இருந்து தேங்காய் நார் உரிக்கும் வித்தை புரிகின்றதா? பக்கத்தூர் கவுண்டன் ஒருவன் சற்றுத் துணிச்சலான பேர்வழி. அவனும் போட்டிக்காக ஒரு ஸ்டோர் வைத்துப்பார்த்தான். சரஸமான விலையை உத்தேசித்துத் தொழிலாளிகளும் அவனிடம் வாங்க ஆரம்பித்தனர். ஒருநாள் இரவு கவுண்டன் வீடு திரும்புகையில், நையப்புடைக்கப்பட்டுஎறியப்பட்டான். ஆட்கள் ஆலை முதலாளியினுடையவர் என்று கேஸ் கொடுத்தான். ஜட்ஜ் முதலியவர் என்ன காரணம் கண்டோ கேஸைத் தள்ளிவிட்டனர். அதற்கப்புறம் கவுண்டன் ஏன் ஆண்டிவரதப்பட்டியை அண்டுகிறான்? பஞ்சாலை முதலாளி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் முழுப் பக்கபலத்துடன் தன் சொந்த ஆட்சியை அந்த ஆண்டிவரதப்பட்டியில் நடத்திவந்தான். தொழிலாளியரோ என்றால், அவர்கள் குறுகிய வாழ்க்கையின் எந்த முகப்பிலும் முதலாளியின் தாண்டவத்தையே கண்டனர். அவனைக் கடவுளுக்கு அடுத்தபடியாகக் கொள்வதில் என்ன அதிசயம்! ஆலை முதலாளி, குப்பண்ண கவுண்டன், பஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்டு, டிஸ்ட்ரிக்ட் போர்டு மெம்பர், ஆண்டிவரதப்பட்டி ஹைஸ்கூல் மானேஜர், இன்னும் கவர்னர் துரைக்கு வேண்டியவன், என்ற காரணங்கள் எல்லாம் சேர்ந்து, தொழிலாளியரைப் பிரமிக்கச்செய்தன. குப்பண்ண கவுண்டன் என்னமோ நிரக்ஷரகுக்ஷி. திருமகளுக்கும் கலைவாணிக்கும் உள்ள சாசுவதப் பகைமைக்குச் சான்றுபோல விளங்கினான் குப்பண்ண கவுண்டன். எல்லாச் செல்வத்தையும் கவர்ந்த கவுண்டனுக்கு, கலைச் செல்வத்தைத் தான் அடையாவிடினும் தன்குடும்பமாயினும் அடைதல்வேண்டும் என்ற அவா இருந்தது. தன் மகன் ராமஸாமியைச் சீமைக்கு அனுப்புவித்தான். கலைவாணியைக் கட்டிப்பிடித்துக் கொண்டுவரும் கயிறு சீமையில் விற்கிறது என்று எண்ணினானோ! அல்லது அவன் அடிக்கடி போய்ப்பார்த்து அர்ச்சித்துவரும் கவர்னர் துரையின் திருவுள விருப்பமோ! என்னவோ!

ஃ ஃ ஃ

கிராமத்தின் வடக்கோரத்தில் ஓர் பெரிய மைதானம். அதில் ஒரு பெரிய புளியமரம். ரொம்ப பெரியதாய்க் கிளைகளுடன் தேர் போல விளங்கியதால் அதற்குத் தேர்ப் புளியமரம் என்று பேர் வந்துவிட்டது. மைதானத்தை ஒட்டினாற்போல் ஐந்தாறு தொழிலாளியர்

குடிசைகள் தென்பட்டன. அந்தக் குடிசைகளில் ஒன்றுள் ஒரு கிழவனும் இளம் பெண்ணுமே வசித்துவந்தனர். இருவரும் ஆலையில் வேலைசெய்துவந்தனர். அந்தக் கிழவன்தான் அந்தப் பெண்ணின் தாத்தா. தாயில்லாக் குழந்தையைத் தானே எடுத்து வளர்த்து வந்தான். இந்த வயதுக் காலத்தில் அவள் அவனுக்கு மிகவும் உதவியாகவிருந்தாள். மனித தேகத்தில், இயற்கையின் ஒளி அவளிடம் கொழுந்துவிட்டெரிந்ததைப்போல், வேறு தேகத்தில் எரிந்ததில்லை. அவள் நடந்து பார்த்தவர்கள் இல்லை. குதித்துக்கொண்டே போவாள். வயது பதினாறுக்குமேல் ஆகியும் அவள்நடையைவிட்டு அந்தக் குதித்துகுதித்துப் போகும் குணம் போகவில்லை. அவள் கண்களில் தோன்றிய சோகம் கனவுலகத்தில் காணும் காட்சிகளை நினைப்பூட்டியது. அவள் பாட்டன் பேசும்போது அவள் இடி இடி என்று சிரிப்பது பாரதியார் ஊழிக்கூத்தில் கண்ட பராசக்தியின் நகைப்பை ஒக்கும். கபடு என்பதே சிறிதும் அறியாமல் இருந்தும் அவள் செயல்கள் சிற்சில சமயங்களில் பயத்தை உண்டுபண்ணும். குழந்தையாயிருந்ததிலிருந்து அவள் மற்றக் குழந்தைகளுடன் விளையாடும் வழக்கம் கிடையாது. தனியே போய்த் தேர்ப்புளியமரத்தடியில் உட்கார்ந்திருப்பாள். அவள் குழந்தையாயிருக்கும்போதுகூட இருட்டு என்றால் பயப்படாமல் எங்குவேண்டுமென்றாலும் போய்வரும் குணம் கிழவனுக்கு ஆச்சர்யத்தை விளைவித்தது. இன்னொரு விஷயமும் அவனுக்கு ஆச்சர்யம் கலந்த பயத்தைத் தந்தது—அவன் பேத்திக்கும் தேர்ப்புளியமரத்துக்கும் உள்ள நட்பு. பக்கத்துவீட்டுப் பையன் புளியம் பழம் சாப்பிடக் கல்லெறிந்தால் உடனே, முத்தம்மாளுக்குக் கோபம் வந்துவிடும். "ஏண்டா பொறுக்கிப் பயலுகளா, புளிய மரத்தைக் கல்லால் அடிக்கிறீக" என்று திட்டுவாள். முத்தம்மா பகல்வேளையில் புளியமரத்தடியிலே வெகுநேரம் உட்கார்ந்துவிடுவாள். நல்ல காற்று அடிக்கையில் இலைகளின் சலசலப்பு ஏற்படுகையில் முத்தம்மாவுக்குப் புளியமரம், எப்போதோ புரிந்து இப்போது மறந்துவிட்ட பாஷையில் தன்னுடன் பேசுவதுபோல் தோன்றும். காதுகளைத் தீட்டிவிட்டுக்கொண்டு கூர்ந்து கேட்பாள் குழந்தை முத்தம்மா. அந்தப் புளியமரத்தின் கீதத்தில் மெய்மறந்து நிற்பாள். கிழவன் பத்துத்தரம் கத்திய பிற்பாடுதான் தன் உணர்வுக்கு வருவாள்.

முத்தம்மாவுக்குப் பதினான்கு வயது வந்தது. ஆலைவேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் விறகு வீட்டில் இல்லாமையால் மரத்தடியில் கிடக்கும் சருகு செத்தைகளைப் பொறுக்கிவரலாம் என்று புளியமரத்தடிக்குச் சென்றாள். அப்போது நன்றாய் இருட்டிவிட்டது! எங்கிருந்தோ திடீரென்று ஒரு சுழல்காற்று மைதானத்தில் ஓலமிட்டுக்கொண்டு புளியமரத்துக்கு வந்து அதன் கிளைகளை யலைத்துச் சலசலக்கச் செய்தது. குனிந்து சருகுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த முத்தம்மா சலங்கைக்கீதம் கேட்டு நிமிர்ந்தாள். உடம்பில் ஏதோ மின் சாரம் பாய்வது போன்ற உணர்ச்சி! இதே உணர்ச்சி அவள் ஏழுவயதாய் இருக்கும்போது ஏற்பட்டது. அப்புறம் அதை மறந்துவிட்டாள். அப்போது குழந்தை! இப்போது நினைவு வந்த மங்கை! ஆனால் அப்போது வெறும் கீதம்மட்டும்தான்! இப்போது!—முத்தம்மா! என் கண்ணே முத்தம்மா! என்ற வார்த்தைகள் அவள் ஆன்மாவில் கேட்டன. காதில் விழுந்தும் மூளை அறியவில்லை! மரத்தைச் சுற்றிப்பார்த்தாள். ஒருவரும் இல்லை. மரம் பேசிற்றா? அந்தக் காற்றுப் பேசிற்றா? இப்படிச் சர்ச்சை செய்துகொண்டிருக்கும் போதே, "முத்தம்மா! என் கண்ணே முத்தம்மா!" என்று இரண்டாம்தரம் சொன்னாற்போல் இருந்தது. குரலில்தான் என்ன கனிவு! என்ன பயங்கரம்! அதிசயம்! முத்தம்மா பயப்படவில்லை கொஞ்சமேனும்! அவள் முகம் சாந்தியைக்காட்டியது. ஏதோ கண்டெடுத்தவள்போல் காணப்பட்டாள். இறந்த தாயைக் கண்டெடுத்தாளா! கூப்பிட்ட குரல் பெண்குரல் போலல்லவோ இருந்தது! புளியமரத்தில் பைசாசம் இருக்கலாம் என்ற மௌட்டிய எண்ணம் என்னவோ முத்தம்மா மனதில் புகவில்லை! இவ்வளவுக்கும் அவள் நாஸ்திகமத புஸ்தகங்கள் வாசித்தவளும் அல்ல. தேர்ப்புளியமரத்திடம் இருந்த வசீகரம் இன்னும் அதிகமாயிற்று. தினம் தினம் சாயந்திரம் அதனிடம் செல்வாள். ஆனால் மரம் வெறும் மரமாகவே இருந்தது. முத்தம்மா சற்று ஏமாற்றமடைந்தாள். ஆனால் அன்பு குறையவில்லை. இவள் ஜீவனையும் மரத்தின் ஜீவனையும் (அதற்கு ஜீவன் இருந்தால்) ஏதோ அன்புச் சங்கிலி பிணிப்பது உண்மை. இந்த விஷயத்தை அவள் கிழவனுக்குக் கொஞ்சமும் தெரிவிக்கவில்லை. தெரிவிக்கவேண்டுமென்றே (அபூர்வப் பிறவி) முத்தம்மாளுக்குப் படவில்லை. இவ்வுலகத்தில் பிறந்தும் அவள் இதைச் சேர்ந்தவளாயில்லை. அன்பு அதிகரிக்க அதிகரிக்க அவள் தன் இஷ்ட விருக்ஷத்தைப் "புளியம்மா" என்று அழைக்கவும் ஆரம்பித்தாள். மேற்கண்ட சம்பவம் நடந்தபின் இரண்டு வருஷங்களில் அவள் மற்றப் பெண்களுடன் அதிகம் பேசுவதும் கிடையாது. உறவாடுவதும் இல்லை, ஆலை நேரம்போக மற்றப்படி கனவுலகில் நடந்து காலம் கடத்தினாள். பருவப் பெண்கள் ஆலையில் ஆடவரிடம் ஷோக் பேச்சுப் பேசுவதும், ஸினிமாப்பாட்டுப் பாடிக் களிப்பதும் அவளுக்குப் புரியாப் புதிராயிருந்தன. மற்றப் பெண்களும் முத்தம்மாவை அரைப்பைத்தியம் என்று கருதினர்.

ஆனால் முத்தம்மாளும் சதையினால் ஆனவள் தானே? எவ்வளவு விநோதஹிருதயம் படைத்தவளானாலும், சதை அவளையும் விடுமா? சனிக்

கிழமை மாலை சம்பளம் வாங்குகையில் வழக்கமாகக் கூலிகளுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யும் கிழமேஸ்திரி அங்கு இல்லை. அந்த இடத்தில் ஒரு இளம் வாலிபன் உட்கார்ந்திருந்தான். சந்தனப் பொட்டும், கிராப் தலையும், முழுக்கை ஷர்ட்டுமுள்ள புது காஷியர் கந்தஸாமி வாலிபஉத்வேகத்துடன் தன்கடமையில் தன்னை மறந்திருந்தாள், மற்றப்பெண்கள் எல்லாம் அவனைப்பார்த்துச் சிரித்துக் கேலி செய்தபடியே சம்பளம் வாங்கிச் சென்றனர். முத்தம்மாவின் முறை வந்தது. ஒளி மறைவு என்பதே அறியாதவளான முத்தம்மா கையை நீட்டிப் பணம் வாங்கிக் கொள்ளாமல் கந்தஸாமியைப் பார்த்த வண்ணமே மெய் மறந்து நின்றாள். மற்றப்பெண்கள் சிரிப்பது காதில் விழவில்லை. வைத்த கண்ணை எடுக்கவேயில்லை. அவன் சுந்தர உருவத்தைக் குடிப்பவள் போல நின்றாள். குனிந்து பணத்தை எண்ணிக்கொண்டிருந்த கந்தஸாமி நிமிர்ந்து கொடுக்கப் போகையில் தன் எதிரில் மதுரையை எரித்த கண்ணகியின் பார்வையுடன் மிக அழகான பெண் நிற்பதைப் பார்த்தான். முத்தம்மாவுக்கு அடுத்தாற்போல் நின்ற பெண், முத்தம்மாவை இடித்து, "என்னடி முழிச்சுப் பாக்கிறே, சம்பள மேஸ்திரி மிஞ்சட்டும், பூராவும் சாப்பிட்டுடாதே" என்றதும் முத்தம்மாவின் முகம் சிவந்து நாணம் பொங்கியது. "ஐயா மன்னிக்கணும் பைத்தியம் மாதிரி நடந்துக்கிட்டேன்" என்று சொல்லிவிட்டு விடுவிடென்று அப்புறம் நடந்தாள். இந்த உணர்ச்சி முத்தம்மா இது வரையிலும் அறியாதது. அவள் பிறவியில் அன்று தான் நாணம் அவளைத் தாக்கியது. தன்னுடைய முட்டாள் தனத்தை நினைத்தபடியே வீடுவந்து சேர்ந்தாள். கால் முகம் கழுவிவிட்டுப் புளிய மரத்தை நோக்கிச் சென்றாள். இன்று புளிய மரமே வேறு விதமாகத் தோற்றமளித்தது. முந்திய வசீகரம் சற்றுக்குறைந்ததாக உணர்ந்தாள். திரும்பத்திரும்ப அந்தக் கந்தஸாமியின் உருவம் கண் முன் வந்து நின்றது. அவள் வாழ்க்கையில் ஒரு புதிய ஒளி, புதிய ஏக்கம், புதிய உணர்ச்சி புகுந்து கொண்டது.

சப்பென்று இருந்த ஆலைத்தொழிலில், சிறிது சிறிதாக இன்பம் காண ஆரம்பித்தாள். தினமும் ஆலைக்குச்செல்லுமுன் தன்னை அழகு படுத்திக்கொள்வதில் கவனம் செலுத்தினாள். குங்குமப் பொட்டின் பரிமாணம் அதிகமாயிற்று. அவள் முடிந்துவிட்ட கொண்டை முடிப்பு கம்பீரத்துடன் நின்றது. விம்முகின்ற மார்புடனும், குதித்துச்செல்லும் குழந்தை நடையுடனும் முத்தம்மா ஆலைக்கே அழகியாக விளங்கினாள். இருந்தாலும் தன்னுடைய மனத்தில் ஏற்பட்ட மாறுதலின் காரணத்தை அறியாமல் தவித்தாள். தன்னுடைய மனத்தில் வீசும் புதிய காதல் மந்த மாருதத்தின் மணத்தை அறிந்தாளில்லை.

ஆலையில் தான் தொழில் செய்யும் இடத்துக்குப் போகுமுன் கந்தஸாமி வேலை செய்யும் அறையைத்தாண்டித்தான் செல்ல வேண்டும். முத்தம்மா தினமும், அதை ஒரு இன்பம் தரும் கண்டமாகவே கருதினாள். கந்தஸாமி நடையில் நின்றுகொண்டிருந்தாலோ கேட்க வேண்டாம், கூத்தை! முத்தம்மா நாணத்தால் தேகத்தை அஷ்ட கோணல்களாக்கிக் கொண்டு, மருண்ட கடைக்கண் பார்வையைக் கந்தஸாமிமேல் வீசி விட்டு மின்னல் போலப் பாய்ந்து சென்று விடுவாள். சம்பளம் வாங்கும் ஒவ்வொரு சனிக்கிழமையும் இதே மாதிரி நாணத்தின் கூத்துத்தான்! மற்றப்பெண்களைப் போல் சாதாரணமாக நடந்து கொள்ளாமல், முத்தம்மா நாணிக் கோணுவதைப் பார்த்த கந்தஸாமிக்கு ஒன்றுமே புரியவில்லை. அதன் காரணத்தை யோசித்துப்பார்த்தான்! "இவள் ஏன் தினமும் நம் அறையண்டை வரும் போது நூதனமாக நடந்துகொள்கிறாள். சம்பளம் வாங்கும் போது ஏன் ஒரு மாதிரியாகச் சிரிக்கிறாள். நம்மைப் புரளிசெய்கிறாளோ?" என்றெல்லாம் எண்ணமிட்டான். காதல் சேஷ்டைகளாயிருக்கலாம் என்ற எண்ணம் அவனுக்கு உதிக்கவில்லை. ஏன் என்றால் தொழிலாளிப்பெண்கள் எல்லாம் அவ்வளவு சங்கோசப்பிராணிகள் அல்ல என்பதை அறிந்திருந்தான். முத்தம்மாவே ஒரு தனிப்பிரகிருதி என்பதை அவன் எப்படி அறிவான். அவள் எக்கேடு கெட்டாவது போகட்டும் என்று கந்தஸாமியால் விடமுடியவில்லை. நம்மிடம் என்ன குறை இருக்கிறது. சட்டையில் மை சிந்தியிருக்கிறதா? அல்லது நமக்கு மூக்கு இருக்கவேண்டிய இடத்தில் முழங்கை இருக்கிறதா. எதற்காக அந்தப்பெண் அப்படிச் சிரிக்க வேண்டும். இன்று வீடு திரும்பும்போது அவளையே கேட்டு விடுவது என்று தீர்மானித்தான்.

அன்று மாலை மைதானத்தைத்தாண்டி வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் முத்தம்மாவின் பின் புறத்திலிருந்து யாரோ "பெண்ணே! ஒரு வார்த்தை!" என்று கூப்பிடுகிறமாதிரி இருந்தது. திரும்பினாள். என்ன ஆச்சர்யம்! தன் இஷ்ட தெய்வமான கந்தஸாமி நிற்கக்கண்டாள். புன் சிரிப்புடன் தலைகுனிந்து கொண்டாள். அவளை நெருங்கியவுடன்தான் கந்தஸாமி அவள் எவ்வளவு அழகி என்று உணர்ந்தான். அவளைக் காரசாரமாகத் திட்டிக்கட்டி விடுவது என்று வந்தவன் தைரியம், பறந்தது. அவள் கண்களிலிருந்து வீசிய ஒரு தனி ஒளி அவனை அப்படியே திகைக்க வைத்தது. தழுதழுத்த குரலில் கந்தஸாமி "நீ தினமும்என் அறையைத் தாண்டும்போது ஒருவிதமாகநடந்துகொள்வது எனக்குப் புரியவில்லை. நான் மன்மதன் அல்லாவிட்டாலும் அவ்வளவு நகைக்கும்படியான கோணல்கள் உடையவனல்ல. இனிமேலாவது நீ எனக்கு வருத்தம்தரும் முறையில் நடந்துகொள்ள வேண்டாம்" என்றான். முத்தம்மா அப்படியே திணறிவிட்டாள், தான் யாருடைய அன்பை அடையவேண்டு



உங்கள் கூந்தலைக் காப்பாற்ற
மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

## காமினியா ஆயில்
(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணு தபால் தலை அனுப்பினுல் சாம்பிள் அனுப்பப்படும்.

## ஆட்டோ டில்பகார்
(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்த மற்றது.

எங்கும் கிடைக்கும்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணு தபால் தலை அனுப்பினுல் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள் :

**ஆங்கிலோ-இந்தியன்
டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்-2.**

மென்று தவம் கிடந்தாளோ, அந்த மனிதன் மனதில் தன் நடத்தை, இவ்வாறு சந்தேகத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது என்று உணரவும், அவளுக்கு மளமளவென்று அழுகை வந்துவிட்டது.

முத்தம்மாளின் விக்கல் அழுகையின், காரணமோ அர்த்தமோ புரியாமல் கந்தஸாமி திண்டாடினுன். இயற்கையிலேயே கந்தஸாமி கோழைமனத்தன் ஆதலால் முத்தம்மாவைத் தேற்றும் எண்ணத்துடன் "இந்த வார்த்தைக்கா அழுவது. நான் என்ன அப்படிச் சொல்லிவிட்டேன்" என்று தன் முகத்தை மூடிக்கொண்டிருந்த முத்தம்மாவின் கையைத் தொட்டான். அந்த ஸ்பர்சத்தில்தான் என்ன இருதலைக் கவர்ச்சி! முத்தம்மாவின் தேகத்தில் ஒரு மின்சாரம் பாய்ந்து அவள் நாணத்தைச் சில நிமிஷங்களுக்குத் தூக்கி எறிந்தது. கந்தஸாமிக்கோ என்ருல், எல்லையில்லா இன்பந்தரும் புது அனுபவமாயிருந்தது. முத்தம்மா நிமிர்ந்து ஜலம் ததும்பும் கண்களுடன் கந்தஸாமியை நோக்கினுள். "இந்தக் கூத்தெல்லாம் இந்தச் சனியன்பிடித்த வெட்கத்தால் வந்ததுங்க; நான் சத்தியமாச் சொல்றேன். உங்களைப் புரளி செய்யவேணுமென்று ஆசைப்பட்டதே கிடையாது.........உங்களைப் போயா, போயும் போயும், வலிப்புக் காட்டுவாங்க. உங்கமாதிரி......அழகா இருந்தா....." என்று சொல்லிவிட்டுத் தலைகுனிந்தாள். சற்று நேரம் இருவரும் பேசாமலே தரையை நோக்கியவாறே நடந்தனர். மறுபடியும் முத்தம்மா, "எனக்குச் சாதாரண பொம்பளைங்களுக்கு இருக்கும் கபடு கிடையாது. என் மனசிலே இருக்கிறது வெளியிலே வந்துடுது. உங்களை முதல்லே பாத்ததிலிருந்து எதோ மாதிரி இருந்தது. உங்களை மறுபடி மறுபடி பாக்கிற போதெல்லாம், ஒரு கூச்சம், ஒரு பயம் எல்லாம் என் மனஸை வந்து பிடித்து, என்னைப் பைத்தியக்காரி ஆக்கிவிட்டது. இதுதான் உண்மை" என்று கூறி முடித்தாள். முத்தம்மா பேசி முடிந்தவுடன், புதுப் பொம்மையைப் பார்த்த குழந்தையைப்போல் இடிஇடியென்று சிரித்தான். அவன் சிரிப்பதைப் பார்த்து, முத்தம்மாவின் மனதில் இருந்த பாரம் ஒருவாறு நீங்கினுலும் பூராவும் போகவில்லை. "ஏன் அப்படிச் சிரிக்கிறீக?"

"ஒன்றுமில்லே, உனக்கு நோய்வந்திருக்கேன்னுதான்."

"நோயா?"

"அதுதான் 'கந்தன் நோய்' என்று சொல்வார்கள். உங்க வீட்டிலே அப்புா அம்மா கிட்டே சொல்லு" என்ருன் கந்தஸாமி. முத்தம்மா சிரித்தவாறே "எங்க பாட்டன் ஒருத்தர்தான் வீட்டிலே இருக்காரு. நோய்க்கு மருந்தென்னவாம், மருந்தின்பேர் நோயின் பேரிலேயே அடங்கியிருக்கோ?" என்ருள்.

“உன் கூச்சமெல்லாம் எங்கேயோ போய் விட்டதோ. மருந்தைப்பத்திப் பாட்டன் கிட்டேயே வந்து சொல்லிக்கிறேன். எனக்கும் சென்ற அறை மணியாக முத்துமாரி போட்டியிருக்கு............”என்று கூறியவாறே அவள் கன்னத்தைத் தட்டிவிட்டுப் போய் விட்டான்.

இவ்வளவு எளிதில் தான் நினைத்தது கை கூடும் என்று முத்தம்மாவால் நம்பமுடிய வில்லை. என்ன ஆச்சர்யம்! இவ்வளவு சீக்கிரத்தில் கிடைக்கக்கூடியதாயிருந்தால் நாள் நிற்குமா? என்று சந்தேகக் குரல் மனக்கதவோரத்தில் அரற்றிற்று. இப்படிச் சிந்தித்த வண்ணமே தன் இனிய தேர்ப்புளியமரத் தண்டை நெருங்கிவிட்டாள். முன்பொருநாள் வீசிய சுழல் காற்றும் மின்சாரம் தாக்குவது போன்ற ஒரு பழைய உணர்ச்சியும் முத்தம்மாளைப் பின்னியன. அதே சலங்கைக் கீதம்! அதே சலசலப்பு. ஆனால் முத்தம்மாள் இன்று நிற்கவில்லை! நான் உன் பேச்சைக் கேட்க மாட்டேன் புளியம்மா! நான் விரும்புவதை வேண்டாம் என்றுதான் நீ சொல்லுவாய்” என்று கூச்சவிட்டுக்கொண்டே பைசாசம் பிடித்தவள்போல் வீட்டை நோக்கி ஓடினாள். “வேண்டாம் முத்தம்மா வேண்டாம்” என்ற வார்த்தைகள் அவளை நோக்கித் தவழ்ந்து வருவதுபோல் அவளுக்குப் பட்டன! வழக்கமாக முத்தம்மாளுக்குப் புளியமரத்தின்மேல் இருந்த அன்பின் நடுவே அன்று சற்று வெறுப்பும் ஏற்பட்டதெனின் ஆச்சர்யமில்லை!

ஃ ஃ ஃ

முத்தம்மாவுக்கும் கந்தஸாமிக்கும் கலியாணமாய்ப் பலமாதங்கள் கடந்துவிட்டன. முத்தம்மாள் இப்போது ஆலைக்குப் போவதில்லை. முத்தம்மாவுக்குக் காஷியர் கந்தஸாமி கணவனாக வாய்த்ததில் மற்றத் தொழிலாளிப் பெண்களுக்கு சற்றுப் பொறாமை இருக்கத்தான் இருந்தது. கிழவனுக்கோ என்றால் குதூகலம். கையில் நாலு காசும், நல்ல சம்பள வேலையும், அழகும், குணமும் ஒருங்கே கூடப்பெற்ற மருமகப்பிள்ளை கிடைத்ததில், முத்தம்மாவைப்பற்றிய கவலை அவன் மனதை விட்டு முழுதும் அகன்றது. தேர்ப்புளியமரத்துக்கு அருகேயுள்ள கிழவன் வீட்டில் சந்தோஷக்களை தாண்டவமாடிற்று. தன் வாழ்க்கையின் லட்சியமெல்லாம் நிறைவேறி விட்டது என்ற பூரிப்பினால்தானோ என்னவோ, கிழவன், கலியாணம் ஆன அடுத்த மார்கழியில் இரண்டு நாள் காயலாவாய்ப் படுத்துப் பின்பு இறந்துபோனான். முத்தம்மாவுக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. கந்தஸாமியின் அன்பினாலும் காதலினாலும், முத்தம்மா துக்கக்கடலிலிருந்து கரையேறினாள். என்னதான் தேற்றிக் கொண்டாலும், அவள் செய்கை ஒவ்வொன்றிலும் சோகம் தொனித்தது. எல்லா விஷயங்களிலும் ஒருவிதமான விரக்திகாட்ட ஆரம்பித்தாள். கந்தஸாமியின் குழந்தையுள்ளத்துக்கு முத்தம்மாவின் நிலை மிகுந்த கவலையைக் கொடுத்தது.

இந்தச் சமயத்தில்தான் காங்கிரஸ் சத்தியாக்ரஹம் வந்துசேர்ந்தது. தொழிலாளிகள் வேலை நிறுத்தமும் ஆரம்பிக்கப்பட்டது. பாரதியின் பாடல்களைப் படித்திருக்கும் கந்தஸாமி அரசியலில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவன் என்று சொல்லவேண்டியதில்லை. சற்றுப் பேச்சுவன்மையும் உள்ளவனாதலால் தொழிலாளர் கூட்டங்களில் இவனுடைய பேச்சுக்களுக்கு எப்போதும் நல்லமதிப்பு உண்டு. கந்தஸாமியின், அரசியல் ஆவேசம் என்னவோ வாக்கு ஸ்தானத்தைவிட்டு இம்மியளவும் நகரவில்லை. வெறும் பேச்சு என்று ஆலைமுதலாளி கொள்வானா? குப்பண்ண கவுண்டனும், சீமையிலிருந்து திரும்பிய ராமஸாமியும் (குப்பண்ண கவுண்டன் மகன்) கந்தன் மேலேயே கண்ணாக இருந்தனர்.

இச்சமயத்தில் குப்பண்ண கவுண்டன் மகன் ராமஸாமியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லவேண்டும். கலைவாணியைக் கட்டிப்பிடித்துவர அனுப்பப்பட்ட ராமஸாமி சீமையில் சீரழிந்த மாதர்களின் இன்பத்தைத் துய்த்துவிட்டு, அப்பன் பணத்தில, ஐம்பதினாயிரம் ரூபாய் வேட்டு விட்டுவிட்டுத் திரும்பினான். ஊராரிடம் எல்லாம், குப்பண்ண கவுண்டன் தன் மகன் பெரிய பெரிய படிப்பெல்லாம் படித்ததாகச் சொல்லிக்கொண்டான்! படித்தானோ படிக்கவில்லையோ, சீமைச்சாராயம் குடிப்பதிலும், கூசாமல் கற்பழித்தலிலும், கோபம்கொண்டு தொழிலாளியரை ஆண் பெண் என்று பாராமல் உதைப்பதிலும், இலங்கைத் தேயிலைத் தோட்டக்காரத் துரைகளையே தோற்கடித்து விட்டான். பணம், வார்த்தை முதலிய பசப்பினால் பல தொழிலாளிப் பெண்களை, ஸ்வீகரித்து விட்டிருக்கிறான். கந்தஸாமி பிரசங்க மேடைகளில் முதலாளி வர்க்கத்தைப்பற்றி வெளுத்துவாங்குவது கொஞ்சமும் பிடிக்கவில்லை. “நம்முடைய சாயத்தை வெளுக்க இந்த வழுங்கிப் பயல் யார்” என்று எண்ணமிட்டான். இங்கிலாந்து வாழ்வும், ஆங்கிலப் படிப்பும், போட்டிய ஒரு கபட மனப்பான்மை ராமஸாமியைக் கந்தஸாமி விஷயத்தில் பதட்டத்துடன் நடந்துகொள்ளாமல் செய்தது. கந்தஸாமியை ஆலையைவிடுத் தள்ளிவிட்டால், பெரிய வேலை நிறுத்தம் ஆய்விடும். சண்டைக் காலத்தில், காங்கிரஸ் எதிர்ப்பும் இருக்கையில், சர்க்கார் தொழிலாளியரின் பக்கமே பேசுவர், தொழிலாளியரைப் பகைத்துக்கொள்ள விரும்பமாட்டார்கள். இவையெல்லாம் குள்ளநரி ராமஸாமி உணர்ந்து இருந்தான். மேலும் கந்தன் மனைவி மிகவும் அழகானவள் என்றும், பதிவிரதையென்றும், அவனுடைய தொழிலாளி ஒற்றர் மூலம் அறிந்திருந்தான். கந்தஸாமியை ஒழித்துவிட்டு

எப்படியாவது ஒருநாள் பலாத்காரம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்திருந்தான்.

செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் நாட்டில் கலகம் உச்சநிலையை அடைந்தது. செவ்வாய்க்கிழமையன்று ஒரு தொழிலாளர் கூட்டம். அதில் ஆவேசம் வந்தவன்போல் கந்தஸாமி பிரசங்க மாரிபொழிந்து தள்ளிவிட்டான். மறுநாள் இரவு ஆண்டி வரதப்பட்டிக்கு இரண்டு மைல் அப்பாலுள்ள ரயில் தண்டவாளங்கள் பிளக்கப்பட்டதால் ஒரு கூட்ஸ் வண்டி கவிழ்க்கப்பட்டது. போலீஸ் புலிகள் மனதில் கந்தஸாமியின் பிரசங்கத்துக்கும், வண்டி கவிழ்ந்ததுக்கும் உள்ள சம்பந்தம் பெரிதாகத் தாண்டவம் ஆடிற்று. போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆலை மானேஜர் ராமஸாமி கவுண்டனுடைய சாராயப்புட்டி நண்பராதலால் அவர் ராமஸாமியிடம் தம் சந்தேகங்களைத் தெரிவித்தார். நல்ல சந்தர்ப்பம் கிடைக்குமா என்று நினைத்துக் கொண்டிருந்த ராமஸாமி இந்தச் சந்தர்ப்பத்தைக் கவ்வினான். மறுநாள் காலை கந்தஸாமி ஆலை மானேஜர் ஆபீசுக்கு அழைக்கப்பட்டான். போலீஸாரின் சந்தேகங்களைப்பற்றிக் கூறப்பட்டான். தன்னுடைய பிரசங்கம் இவ்வளவு விபரீதமாக முடியும் என்று சிறிதும் கருதவில்லையாதலின் கந்தஸாமி திகைத்துவிட்டான். ராமஸாமியிடம் தான் அஹிம்ஸா தர்மத்தைக் கைக்கொண்டவனென்றும் தனக்கும் பிளக்கப்பட்ட தாண்டவாளங்களுக்கும் ஸ்நானப் பிராப்திகூடக் கிடையாதென்றும் சொல்லிப்பார்த்தான். அதற்கு ராமஸாமி ''அதெல்லாம் சரி அப்பன். நீ சொல்கிற கதையெல்லாம் போலீஸ் நம்புவாங்களா. இதுக்கெல்லாம் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது நீ நம்மவீட்டுக்கு உன் சம்சாரத்தை ஒரு இரவு...........................'' ராமஸாமி முடிக்குமுன்பே சடேரென்று ஒரு அறை கன்னத்தில் வீழ்ந்தது. கந்தஸாமி ரௌத்ராகாரமான கோபத்துடன் ''முதலாளித்துவ மிருகமே! உன்னுடைய தசைகளின் பசியையெல்லாம் வெட்கமில்லாமல் என்னிடமா காட்டுகின்றாய்'' என்று கூறிவிட்டுத் தடதடவென்று ஆலையைவிட்டு வீடுசென்றான். என்றுமில்லாப் பதட்டத்துடனும், வருத்தத்துடனும் வரும் கந்தஸாமியைப் பார்த்து முத்தம்மாளுக்கு ஒன்றுமே புரியவில்லை. கந்தஸாமி அவளுடன் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் கயிற்றுக் கட்டிலில்போய்ப் படுத்துவிட்டான். முத்தம்மாள் ''என்னங்க என்னிக்குமில்லாத படி இன்னிக்கு இவ்வளவு கோபமாயிருக்கிங்க''.

கந்தஸாமி: ''இந்த முதலாளித்வ மிருகங்கள் ஒழிந்தால்தான் இந்தியாவுக்கே விடுதலை.''

''ஆலையிலே ஏதாவது தகராறுங்களா'' என்று கேட்டாள்.

''எங்கோ காலிப்பயலுகள் ரயில் தண்டவாளத்தைப் பெயர்த்து வண்டியைத் தள்ளிவிட்டான்களாம். அது விஷயமா போலீஸுக்கு என்மேலே சம்சயமாம். அந்தப் பேய் ராமஸாமிக் கவுண்டன் என்னைக் காப்பாற்றுவதற்குப் பலிகேட்கிறான்''.

முத்தம்மா: ''பலியா?''

கந்த: ''உன் கற்பை அவன் பலி பீடத்திற்குப் பலியாகக் கேட்கிறான். பண்புழு!''

சுபாவமான குழந்தைத்தனத்துடன் முத்தம்மா ''இப்படியும் உலகத்திலே மனுஷர்கள் இருப்பாங்களா! போலீஸிலே புடிச்சுட்டா உங்க உயிருக்கே ஆபத்து வந்துவிடுமே, இப்ப நாம் என்னங்க செய்வது?'' என்று பதறினாள். கந்தஸாமி ''என் முத்து, நீ அப்படிக் கண்களில் கண்ணீருடன் வெறித்துப்பார்க்காதே. அப்படி நீ பார்ப்பது எனக்குக் கண்ணகியை ஞாபகமூட்டுகிறது'' என்று கனிவுடன் சொன்னான். கந்தஸாமி கண்ணகி என்று சொன்னதும் முத்தம்மாவின் ஆன்மா, சிந்தனைலோகத்துக்கு உந்தித்தள்ளப்பட்டது. அவள் அரை மணி நேரம் வாயை மூடியவண்ணம் சிந்தித்தாள். அவள் என்ன சிந்தித்தாள் என்று அவளுக்குத்தான் தெரியும். கந்தஸாமி மன அசதியினால் கயிற்றுக் கட்டிலிலேயே படுத்துத் தூங்கிவிட்டான்.

இரவு வழக்கத்திற்கு மாறாகச் சீக்கிரமே வந்தது. இரவின் அமைதியைக் காற்றின் ஓலம் துரத்திக்கொண்டிருந்தது. கந்தஸாமி வாய் பேசாமலே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். முத்தம்மாவும் மூடிய வாயுடன் பரிமாறிக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவர் மனதிலும் இரவு படிந்திருந்தது. சாப்பிட்டுக் கையலம்பிய பின்பு, இருவரும் கூடத்திற்கு வந்து உட்கார்ந்தனர். கந்தஸாமி வருத்தத்துடன் ''நீ வேறு யாரையாவது கட்டிக்கிட்டுருந்தா இப்படியெல்லாம் வராதே! நான் சிறைக்குப்போய் விட்டால் அப்புறம் நீ என் சேமிப்புப் பணத்தைப் பாங்கியிலிருந்து வாங்கிக்கொள்.''

''அதெப்பத்தியென்னுங்க, உங்களுக்கு மனைவியாயிருக்கிறதே போதும். நீங்க போலீஸார் புடிக்கிறது முன்னாலெ ஓடிப்புட்டா?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

''அதெப்படி முத்தி? ஓடினா நான் குற்றவாளின்னு ஒப்புக்கிறது போலல்லவா ஆகும். சத்தியத்துக்கு நம்ப குடும்பத்திலிருந்து ஒரு பலி வேண்டும் போலும். உன் கற்பைப் பலியிட்டு என் தோலைக்காப்பாத்திக்க நான் விரும்பவில்லை. அது தர்மம் அல்ல. நான் என்னையே கொடுத்துக் கொள்வேன்.''

''அந்தப் பாவி ராமஸாமியையாவது மன்றாடிக்கேட்டுப்பாருங்களேன்!''

''அவன் மனம் மாறாது. அவன் நினைத்தால் நிஜக்குற்றவாளியையும் காப்பாற்றலாம்.

அந்தப்பெண்டாளும் நாயைப்பற்றி என்ன பேச்சு,"

முத்தம்மா தூக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள். திடீரென்று ஆவேசம் வந்தவள் போல எழுந்தாள். சீலையைக் கோதிவிட்டுக்கொண்டு சத்தமில்லாமல் வீட்டு வாசல் பக்கம் வந்தாள். மைதானத்தைத்தாண்டி நடந்தாள் நிமிர்ந்த தலையுடனும், வெறித்த பார்வையுடனும். நடக்கும் அவளைப்பார்த்துதானோ என்னவோ, வழியில் கிடந்த சாரைப்பாம்பும் நகர்ந்து கொண்டது. சந்திரனும் மேகத்துள் மறைந்து கொண்டான். நடந்துகொண்டே தேர்ப் புளிய மரத்தை நெருங்கினாள். நெருங்கவும், முன்பு அவள் அறிந்திருந்த சுழல் காற்றும், சலங்கை நாதமும் மின்சாரம் தாக்கும் உணர்ச்சியும் எல்லாம் சேர்ந்து முத்தம்மாள் மனதில் பாய்ந்தன. முன்பைவிடத் தெளிவாகவும், பலத்த குரலிலும் பின் வரும் வார்த்தைகள் ஆவேசம் வந்தவள் போல் செல்லும் முத்தம்மாள் காதில் விழுந்தன.

"முத்தம்மா, என் கண்ணே என்னிடம் வா" முத்தம்மா மரத்தை நிமிர்ந்து பார்த்து இடி இடி என்று சிரித்தாள்? "ஏ புளியம்மா! நான் விட்டாலும் நீ என்னை விடமாட்டாய் போலிருக்கிறதே. இரண்டுமணி நேரம் பொறுத்துக் கொள். நான் உன்னைச் சாசுவதமாக வந்தடைகின்றேன்" என்று கூறிவிட்டு, ஆலை முதலாளி ராமஸாமி கவுண்டர் வீட்டை நோக்கி 'விர்' என்று கிளம்பிச்சென்றாள்.

ஃ ஃ ஃ

விடிந்தது! பக்கத்து வீட்டுக்காரர்கள் நான்கு ஐந்து பேர் சேர்ந்துவந்து கந்தஸாமியை எழுப்பினார்கள். அவர்கள் சொல்லும்செய்திகேட்டுக் கந்தஸாமி தேர்ப்புளிய மரம் வந்துசேர்ந்தான். புளிய மரத்தின் கிளையொன்றில், தான் தெய்வமென்று கொண்டாடிக்களித்த இனிய மனைவி முத்தம்மாள் சுருக்கிட்டுக்கொண்டு தொங்கக் கண்டான். தேர்ப்புளியமரத்தில் எப்போதும் ஒரு சாரம் இருக்கக்கண்டவளல்லவா முத்தம்மா! தன் புளியம்மாவின் அஞ்சலியில் கடைசியில் போய்ச்சேர்ந்தாள்.

சித்தப்பிரமை பிடித்தவன்போல் கந்தஸாமி வீடு வந்தடைந்தான். தன் மனைவி தற்கொலை புரிந்துகொண்டதன் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. தன் மேஜையின்மேல் ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"அன்புள்ள கணவருக்கு,

நீங்கள் சிறைக்குச் சென்று இன்னலுறுவதை நினைக்க என்னால் முடியவில்லை. கற்பாவது கத்தரிக்காயாவது! என் கணவனுக்கு உதவாக் கற்பு எனக்கு வேண்டியதில்லை. உங்களைக் கவுண்டர் இனிமேல் தொந்தரவு செய்யமாட்டார். நான் சரிப்படுத்திவிட்டேன். உங்கள் வாழ்க்கையின்பத்துக்காக, என்னைப் பலியிட்டுக்கொண்டேன். நான் விரும்பியது அதுவே. என் வாழ்க்கையின் கடைசி நாள் இரவு நான் ஒழுங்கு தவறியதற்கு மன்னிக்கவும்".

இப்படிக்கு,

தங்கள் அடிமை,

முத்தம்மா.

வாசித்து முடித்ததும் "கந்தஸாமி கற்பாவது கத்தரிக்காயாவது" என்று முணுமுணுத்தான்.


ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★



★

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

# மசக்கை ஆசை

**கமலா பத்மநாபன்**

●

ஸேதுபதி, தான் வாயில் கவ்விக்கொண்டிருந்த ஸிகரெட்டின் புகை சுருள் சுருளாய் மேலே எழும்பிச் செல்வதையே கண் கொட்டாமல் பார்த்தவண்ணம், நாற்காலியில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தான். அவனது மடியின்மேல் ஒரு ஆங்கிலப் பத்திரிகை பிரித்தபடி கிடந்தது. அது சுகாதாரம் மற்றும் தேக ஆரோக்கிய சம்பந்தமான விஷயங்களுடன் வெளியாகும் ஒரு உயர்தரப் பத்திரிகை. "ஸிகரெட்" பிடிப்பதினால் ஏற்படும் தீமைகளைப்பற்றி விவரித்து ஒரு அமெரிக்க டாக்டர் எழுதியிருந்த கட்டுரையை அந்தப் புஸ்தகத்தில் படித்தவுடன் ஸேதுபதிக்கு முதலில் சிரிப்புத்தான் உண்டாயிற்று. "நல்ல வேளை சாந்தாமட்டும் இப்பொழுது இங்கிருந்திருந்து இந்தக் கட்டுரையையும் படிக்க நேரிட்டிருந்தால் எனக்கு முதல்தரமான மண்டகப்படி நடந்தேறியிருக்கும்! அவள் இல்லையோ பிழைத்தேன்" என்று தனக்குள் சிரித்துக் கொண்டே புகன்று கதை ஆரம்பத்தில் கூறியுள்ளபடி வெகு நேரம் ஆழ்ந்த சிந்தனையில் லயித்துவிட்டான்.

ஃ ஃ ஃ

சாந்தா வேறு யாருமில்லை. ஸேதுபதியின் தர்ம பத்தினிதான். அவள் தன் பெற்றோர்களுடன் பிறந்தகத்திற்குப்போய் அப்பொழுதுதான் ஒரு மாதம் ஆகியிருந்தது. தம்பதிகள் இருவரும் ஒரே ஒரு விஷயத்தைத்தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் வெகு அன்னியோன்னியமாயும் ஆனந்தமாயும் இருந்துவந்தனர். அந்த ஒரே ஒரு விஷயம் என்னவென்றால், தன் கணவன் ஸிகரெட் பிடிக்கும் கெட்ட வழக்கத்தை வைத்துக்கொண்டிருப்பது சாந்தாவுக்குக் கட்டோடு பிடிக்காமலிருந்தது தான். ஆனால் ஸேதுபதிக்கோ "ஸ்மோகிங்" (smoking) என்றால் பிராணன். காலேஜில் படிக்கிற நாளில் சகவாச தோஷத்தினால் ஏற்பட்ட இந்தப் பழக்கத்தை அவன் நாளடைவில் மிகுந்த உற்சாகத்துடன் அபிவிருத்தி செய்துகொண்டு விட்டான். ஒரு நாளைக்குக் குறைந்தபக்ஷம் ஒரு டஜன் ஸிகரெட்டுக்களையாவது குடிக்காவிட்டால், தான் ஒரு நடைப்பிணத்திற்குச் சமானம்தான் என்று அவன் அடிக்கடி சாந்தாவிடம் பெருமையாய்க் கூறும்பொழுது அவளுக்கு வேதனை பிடுங்கித்தின்னும். அனேகமாய், இதர எல்லா விஷயங்களிலுமே ஒரு இலட்சிய புருஷனாக விளங்கும் தன் பிராணகாந்தன் மேற்கொண்டிருக்கும் இந்தத் துர்ப்பழக்கத்தை மாற்றிவிட வேண்டுமென்பது சாந்தாவின் பேராவல். ஸேதுபதியிடம் நயமாகவும், பயமாகவும் பேசி,—சாகஸங்கள் பல செய்து தலைகீழாய் நின்றுபார்த்தாள். ஊஹும் அந்தக் கல்குண்டு—அசையாத குண்டு—ஸேது இதற்கெல்லாம் மசிந்தால்தானே! தனது ஸரள சுபாவத்திற்கேற்றபடி சாந்தாவுடன் தமாஷாய்க் கொஞ்சி விளையாடிப் பேசி, தன் இஷ்டம் நிறைவேறவில்லையே என்று ஏங்கி, அடிக்கடி முகத்தை "உர்"ரென்று தூக்கி வைத்துக்கொள்ளும் அவளைச் சமாதானப் படுத்தி, தன் ஹடத்தையும் சாதித்துக்கொள்வான் ஸேதுபதி.

"நான் ஸிகரெட் பிடிப்பதினால் உனக்கு என்ன நஷ்டம், சாந்தா? சொல்லேன்".

"என்ன நஷ்டமா! கிட்ட வரும்பொழுதே நாற்றம் குடலைப் பிடுங்குகிறதே! லொக் லொக் என்று அடிக்கடி கமறி இருமுகிறதும், உங்கள் உதடுகளில் படிந்திருக்கும் அந்தக் கறுப்பு நிறமும் வேண்டியே இல்லை!" என்று அருவருப்புடன் முகத்தைச்சுளிப்பாள் சாந்தா.

"உனக்கு அவ்வளவு அருவருப்பாக இருந்தால் என்கிட்டவே வரவேண்டாம்! தூரவே இரேன்!"

"ஆமாம், கிட்டக்கூட வராமல் தூரவே இருப்பதற்காகத்தான் எல்லோரும்கல்யாணம் செய்துகொள்வார்களாக்கும்! ரொம்ப அழகாயிருக்கிறது நீங்கள் பேசுகிறது!"

"இனிமேல் ஒன்று செய்கிறேன், சாந்தா! நீ என் அருகில் வரும்பொழுதெல்லாம் முன்னதாகவே எச்சரிக்கை கொடு. நான் உடனே பன்னீரைவிட்டு வாயைக் கொப்புளித்துவிட்டுத் தேவியின் அனுக்கிரஹத்திற்குச் சித்தமாகிறேன். சரிதானா?

"போதுமே விளையாட்டு! நான் இந்த விஷயத்தைப்பற்றி "ஸீரியஸாய்" (serious) பேசும்பொழுதெல்லாம் நீங்கள் பாட்டில் ஏதாவது குயுக்தியாய் விகடம்பண்ணி என் வாயை அடைத்துவிட்டுக் கடைசியில் உங்கள் ஹடத்தையே சாதித்துக்கொண்டு வாருங்கள்! நான் உங்களுக்குக் கொஞ்சங்கூட பிடித்தம் இல்லாத ஒரு காரியத்தைச் செய்கிறேனென்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் என் விஷயத்தில் தலையிடாமல் சும்மா இருப்பீர்களா?"

"ஓ எஸ், சந்தேகமில்லாமல்! நீ வேண்டுமானல் பரீக்ஷைசெய்து பார். நான் உன் தண்டாவுக்கு ஒருநாளும் வரமாட்டேன். இந்த மாதிரி சில்லறை விஷயங்களில் எல்லாம் விட்டுக் கொடுத்துக்கொண்டு போவதுதான் ஒற்றுமையான தம்பதிகளின் லக்ஷணம். அப்பொழுதுதான் இல்வாழ்க்கையில் இன்பமும் இனிமையும் நிறைந்திருக்கும்".

"அப்புறம், நாளைக்கு நீங்கள் சாராயம் குடிக்க ஆரம்பித்தால்கூட நான் அதைப் பார்த்துக்கொண்டு, இல்வாழ்க்கையின் இன்பமும் இனிமையும் பாழாகிவிடப்போகிறதே என்றஞ்சி, சும்மாதான் இருக்கவேண்டும் அல்லவா?"

"பார்த்தாயா? நீதானே இப்பொழுது குயுக்தியாய்ப் பேசுகிருய்! எனக்கு அவ்வளவு பகுத்தறிவும் தன்னடக்கமும் இல்லையென்று எண்ணிவிட்டாயா? "ஸிக்ரெட்" குடிக்கும் பழக்கம் வைத்துக்கொண்டிருக்கும் எல்லோருமே குடிப்பழக்கத்திலும் ஈடுபடுவார்களென்பது உன் அபிப்ராயமா?"

"நான் அப்படிச் சொல்லவில்லை. சில்லறை விஷயங்களில் விட்டுக்கொடுத்துக்கொண்டு போவதுதான் அன்னியோன்னிய தம்பதிகளுக்கு அழகு என்றீர்களே, அதற்காகச் சொல்லவந்தேன். இந்தமாதிரி விஷயங்களை எல்லாம் சில்லறை விஷயமாகக் கருதி, விட்டுக் கொடுத்துக்கொண்டே போனுல் நம் வாழ்க்கை உருப்பட்டாற்போலத்தான்!"

தம்பதிகளுக்குள் மேற்சொன்ன வாக்குவாதம் நடந்த சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை ஸேதுபதி வழக்கம்போல் ஆபீஸிலிருந்து வீடு திரும்பினுன். அன்று அவனும் சாந்தாவும் மாலை காக்ஷிக்குப் போவதாக ஏற்கனவே ப்ரோகிராம் போட்டிருந்தபடியால், ஸேதுபதி காரை வாசலிலேயே நிறுத்திவிட்டுக் குதூகலத்துடன் ஒரு தடவைக்கு மூன்று படிகளாய்த் தாவிய வண்ணம் மாடி ஏறினுன்.

"சாந்தா, ரெடியா? சீக்கிரம் புறப்படு. இன்றுதான் இந்தப் புதுப்படத்தின் திறப்பு விழா ஆனபடியால் தியேட்டரில் ரொம்ப "ரஷ்" இருக்கும். நாம் சற்று முன்னதாகவே போய் உட்கார்ந்து கொண்டு விடுவோம்" என்று சொல்லிக்கொண்டே உள்புறம் தாளிடாமல் வெறுமனே சாத்தியிருந்த அறையின் கதவை மெதுவாகத்திறந்து உள்ளே நுழையப் போனுன். இவனுக்கு முதுகைக்காட்டிக் கொண்டு அங்கு வேறு ஒரு அன்னியஸ்த்ரீ நின்று கொண்டிருப்பதைக்கண்டு சட்டென்று தலையை வெளியே இழுத்துக்கொண்டு கதவை முன்போல் சாத்திவிட்டான்.

"ஏன், உள்ளே வரலாமே! இதோ புறப்பட்டு விட்டேன்" என்று பதில் அளித்த வண்ணம் சாத்திய கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் சாந்தா.

ஸேதுபதி திகைத்தான். "இதென்ன வேஷம் சாந்தா? நான் யாரோ ஒரு அன்னிய ஸ்திரீ உன்னுடன் பேச வந்திருப்பதாகவல்லவோ சற்றுமுன் எண்ணி ஏமாந்துபோனேன். அதிருக்கட்டும், இதென்ன இன்றைக்கு இந்தத் திருக்கோலம்! ஸினிமாவுக்கு நேரமாகிறது, முதலில் போய் 'டிரஸ்' மாற்றிக்கொண்டு வா! கோரம்கூத்தாடுகிறது" என்று அருவருப்புடன் புகன்று அவளைப் பார்க்கவே பிடிக்காதவன் போல் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

ஸேதுபதியின் அருவருப்புக்குக் காரணம் என்னவென்பதை அறிய வாசகர்களும் ஆவலாய் இருப்பது நியாயம்தானே. சற்று விவரிக்கிறேன், கேளுங்கள்.

கொட்டாங்கச்சித் தாளிச்சுப்பத்திரி என்றழைக்கப்படும் பழங்காலத்து மாதிரியில், முழக்கரை போட்ட ஒரு புடவையை வடம ஜாதி சம்பிரதாயப்படி இடதுபுறம் கொசுவம் வைத்து மடிசார்புடவையாகக் கட்டிக் கொண்டிருந்தாள் சாந்தா. அதற்கேர்வையாக உடம்போடு ஒட்டினுற்போல், கர்னுடகபாணியில் தைக்கப்பட்ட ஒரு ரவிக்கை. தலைமயிரைத் தழையவாரித் தாழம்பூ வைத்து இறுகப் பின்னி, வண்டிச் சக்கரம்போல் எடுத்துக் கட்டாகக் கட்டிக்கொண்டிருந்தாள். புடவைத் தலைப்பை இழுத்துப் பட்டையாகக்கட்டி அதன்மீது ஒரு ஒட்டியாணத்தையும் போட்டுக் கொண்டிருந்தாள். சுபாவமாகவே படிப்படியாய் வளைந்து, கூந்தல் அலைபோல் தென்படும் தனது முன் நெற்றி மயிரை அதெவ்வளவு சிரமப்பட்டு வெழுமூனுய் வாரி மரப்பாச்சிப் பொம்மைக்கு இருப்பதுபோல் மேல் நெற்றியோடு படிந்திருக்கும்படி செய்துகொண்டாளோ மகாராஜி!

இந்தக் கர்னுடக அலங்காரத்துடன் ஸேதுபதியின் அருகே வந்துநின்று, அவன், அவளை டிரஸ் மாற்றிக்கொண்டு வரும்படி கூறியதைக் காதில் வாங்கிக்கொள்ளாததுபோல், "ஏன் புறப்படலாமே! நான் ரெடி" என்றுள் சாந்தா.

"என்ன! இந்தப் பைத்தியக்கார வேஷத்துடனு ஸினிமாவுக்கு வரப்போகிருய்?" என்று திகைப்பு மேலிட்டவனுய்க் கேட்ட ஸேதுமூர்ச்சைபோட்டு விழுந்துவிடுவான்போல் இருந்தது.

"ஜாதி சம்பிரதாயப்படி புடவை உடுத்திக் கொண்டால் பைத்தியக்கார வேஷமா?"

"புடவை கட்டிக்கொண்டிருக்கும் ரீதி மாத்திரம் வேருக இல்லையே! உன் அழகையே பாழ்படுத்திக்கொண்டிருக்கிருயே! அதிருக்கட்டும். இவ்வளவு நாட்களாக இல்லாமல் இப்பொழுது திடீரென்று ஜாதி சம்பிரதாயத்தில் பற்றுதல் ஏற்பட்டதற்குக் காரணம்?"

"காரணம், எனக்கு இந்த மாதிரி உடுத்திக் கொள்வது பிடித்திருப்பதுதான். இனிமேல் நான் இந்தக் கர்னுடக பாஷனில்தான் 'டிரஸ்' செய்துகொள்ளப்போகிறேன்".

"நீ கர்னுடகமாய் இருப்பது என் மனதிற்குக் கொஞ்சம்கூட பிடிக்காதே! என் கண்மணியாகிய நீ என் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கலாமா?"

"இந்தமாதிரி சில்லறை விஷயங்களில் எல்லாம் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்துக் கொண்டு போவதுதான் ஒற்றுமையான தம்பதிகளுக்கழகு. நீங்கள்தான் என் சொந்த விஷயத்தில் தலையிடுவதில்லையென்பதாக அன்ரெருநாள் சொன்னீர்களே!"

சாந்தா இப்படிப் பேசியதும் ஸேதுபதியின் மனதில் சுறுக்கென்று தைத்தது. உடனே அவனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டுவிட்டது. "பழிக்குப்பழி தீர்த்துக்கொள்ளவேண்டுமென்பது உன் விருப்பமானுல், அதன்படியே நடந்துகொள்! அதனுல் எனக்குக் கொஞ்சமும் கவலையில்லை!" என்று ஆக்ரோஷத்துடன் கூறிவிட்டு அங்கு ஒரு நிமிஷம்கூட நிற்காமல் தடதடவென்று மாடிப்படிகளில் இறங்கி வாசலுக்கு வந்தான். வெளியே நிறுத்திவிட்டுவந்த காரை நடத்தி ஷெட்டில் விட்டுவிட்டுத் தன் அறைக்குவந்து உட்கார்ந்து ஸிகரெட்டைப் பற்றவைத்து மௌனமாய்ப் புகை இழுக்கத் தொடங்கினுன்.

மேற்சொன்ன சம்பவத்தினுல் இவ்விளம் ஜோடிகளிடையே ஏற்பட்ட பிணக்குத் திரக் கிட்டத்தட்டப் பதினைந்து தினங்கள் ஆயின. காதலுடன் ஊடலும்இருப்பது இயல்புதானே.

சாந்தாவுக்கு அது ஐந்து மாதம். இப்பொழுதே இந்த விசேஷ சமாசாரத்தைத் தெரியப்படுத்தி ஊருக்குக் கடிதம் போட்டால், தலைச்சன் பிள்ளைத்தாச்சி, மசக்கை, மண்ணுங்கட்டி என்று காரணங்கூறிப் பிறந்தகத்திற்கு அழைத்துக்கொண்டு போய்விடப் போகிருர்களே என்று சாந்தாவுக்குப் பயம். இதே காரணத்தினுல், தம்பதிகள் இருவரும் இது விஷயத்தில் ஒரு மனப்பட்டவராய், ஊருக்குத் தகவலே தெரிவிக்காமல் இருந்துவிட்டனர்.

"சாந்தா, உன்னுடைய மசக்கை ஆசை என்ன சொல். நான் நிறைவேற்றி வைக்கிறேன், எவ்விதமான அபூர்வ பக்ஷணங்கள் பணியாரங்கள் வேண்டுமானுலும் சங்கோசப்படாமல் கேள். நான் எப்படியாவது தயார் செய்து கொடுக்கிறேன். இல்லை, பழங்காலத்துத் தின்பண்டங்களான பொரிவிளாங்காய் உண்டை, வெல்லச்சீடை, முறுக்கு இவைகள் வேண்டுமானுலும் கேள். நம்மாத்திற்கு அப்பளாம் வடாம் இட்டுக்கொடுக்க ஒரு கூலிக்காரப் பாட்டி வருகிருளே, அவளிடம் நானே சொல்லி உனக்கு வேண்டியதை எல்லாம் பண்ணிக்கொடுக்கச் சொல்கிறேன். பிள்ளைத்தாச்சிப்பெண் மசக்கை ஸமயத்தில் பிறந்தகத்தில்போய்க் கொஞ்சகாலம் இருந்துவிட்டு வரவேண்டுமென்று நம்மவர்கள் அபிப்பிராயப்படுவது சுத்தப் பேத்தல் என்று எனக்குத் தோன்றுகிறது. ஊம், வாயைத் திறவாமல் இருக்கிருயே! என்னவேண்டும்? சொல்" என்று சாந்தாவை வற்புறுத்திக் கேட்டான் ஸேதுபதி.

சாந்தாவுக்கு வெட்கம் அதிகமாகி முகம் குபீரென்று சிவந்துவிட்டது. தன் கணவன் அன்புததும்பக் கேட்டதற்குப் பதிலே உரைக்காமல் சில விநாடிகள் தலைகுனிந்தபடி சும்மா இருந்தாள். பிறகு "எனக்கு இந்தச்சமயத்தில் ஒரு ஆசை என்னமோ இருக்கிறது. ஆனுல் பக்ஷணம், பணியாரம் வேண்டுமென்ற விருப்பம் அல்ல அது. நான் அதை உங்களிடம் தெரிவித்துத்தான் என்ன பிரயோஜனம். உங்களால் அதை நிறைவேற்றமுடியாது...இல்லை— முடியும் — நிறைவேற்ற இஷ்டப்படமாட்டீர்கள்" என்று தயங்கியபடி கூறி ஸேதுவை நாணமும் நயமும் மலிந்த தனது நயனங்களால் பார்த்தாள்.

அந்தப் பார்வையின் சக்தி ஸேதுபதியை எங்கேயோ ஒரு கற்பனு உலகத்திற்கு அழைத்துக்கொண்டு போயிற்று. அந்தச்சமயத்தில் அவன் ஆனந்தக்கடலில் மூழ்கிக்கிடந்தான் என்ருலும் மிகையாகாது.

"சாந்தா, என் கண்ணே, சீக்கிரம் சொல். என்ன உனது ஆசை? புதுமாதிரியான புடவையா, அல்லது ஏதானும் நகையா? என்னை வதைக்காதே. விரைவில் உன் ஆசையை வெளிவிடு. நிறைவேற்றிவைப்பது என் கடமை!" என்று ஆவலுடன் புகன்ருன்.

"எனக்குப் புடவையும்வேண்டாம், நகையும் வேண்டாம். நீங்கள் ஸிகரெட் பிடிக்கும் துர்ப்பழக்கத்தை அடியோடு விட்டுவிடவேண்டுமென்பதே எனது மசக்கை ஆசை!" என்று சந்தோஷமாய் இருக்கையில் "பிரமோஷன்" கேள் என்பார்களே அதுபோல் கேட்டு வைத்தாள் சாந்தா.

சற்று முன்பு அன்பின் அவதாரமாகத் தோன்றிய ஸேதுபதியின் முகத்தில் சட்டென்று வெறுப்புக் குறிகள் தென்பட்டன. கடுகடுத்த முகத்துடன் பதிலே பேசாமல் அங்கிருந்து எழுந்து தனது அறைக்குப்போய்க் கதவையும் சாத்திக்கொண்டான். இந்த மாதிரி சமயங்களில் அவனுக்கு ஆறுதல் உண்டாக்கும் கைகண்ட மருந்துதான் அவனிடம் எப்பொழுதும் இருக்கிறதே! அவ்வப்பொழுது புகையைச் சுவாரசியமாய் இழுத்தவண்ணம், வெகுநேரம் சிந்தனையில் ஈடுபட்டிருந்தான். கிட்டத்தட்ட அரை டஜன் ஸிகரெட்டுக்களை அக்னிஹோத்திரம் செய்தபிறகு ஏதோ முடி

ஜம்மியின்
லிவர்க்யூர்மூலம்
புனர்ஜன்மம்



ஜம்மியின்
லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப் படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருட காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ்
1/1, பிராட்வே ரோட், மைலாப்பூர், மதராஸ்
மற்றும்: பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

வுக்கு வந்தவன்போல் அவசரமாய்த் தன் மாமனாருக்கு ஒரு கடிதம் எழுதிப்போட்டான். கடிதம் எழுதிப்போட்ட மூன்றாம் நாளே ஊரிலிருந்து சாந்தாவின் பெற்றோர்கள் இருவரும் வந்து நின்றனர். சாந்தாவுக்கோ தன் பெற்றோர்களின் எதிர்பாராத வருகை மிக்க ஆச்சரியத்தை அளித்தது.

''மாப்பிள்ளை, நாங்கள் இன்று மாலையே புறப்பட்டுச் சாந்தாவை அழைத்துக்கொண்டு ஊருக்குப் போகிறோம். இன்றுதான் நாள் நன்றாக இருக்கிறது. இன்றுவிட்டால் இன்னும் ஒரு வாரம் வரைக்கும் நல்ல நாளே கிடையாது. பிறகு ஆறும் மாதம் பிறந்துவிடும். இரட்டைப்படை மாதத்தில் அழைத்துக்கொண்டுபோவது நம்மாத்தில் வழக்கமில்லையென்று அவள் சொல்லுகிறாள்'' என்றார் சாந்தாவின் தந்தை.

''அதற்கென்ன, உங்கள் ஸௌகர்யம்போல் செய்யுங்களேன்'' என்று பதிலளித்தான் ஸேதுபதி.

மூட்டையெல்லாம் கட்டியாகி விட்டது. ரயிலுக்குப் புறப்படும் நேரம் நெருங்கிக்கொண்டே இருந்தது. சாந்தாவின் உள்ளத்தில் உணர்ச்சி குமுறிற்று. தான் கர்ப்பமாக இருக்கும் விஷயத்தைத் தன் கணவன்தான் கடிதமூலம் தன் பெற்றோருக்கு அறிவித்திருக்கிறான் என்ற உண்மையைத் தெரிந்துகொண்டவுடன் அவள் மனம் பொருமிற்று. ஊருக்குப் புறப்படுகிறவர்களை ரயிலடிக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டு வருவதற்காகக் காரைக் கொண்டு வந்து வாசலில் நிறுத்திவிட்டுத் தன் தொப்பியை (Hat) எடுத்து வருவதற்காக மாடிக்குஓடினான் ஸேதுபதி. சாந்தா அவன் பின்னாலேயே மெதுவாய் வந்ததை அவன் கவனிக்க வில்லை. தொப்பியை ஸ்டாண்டிலிருந்து எடுத்துக் கொண்டு திரும்பியதும் பின்னால் நின்று கொண்டிருந்த சாந்தாவின் மீது மோதிக்கொண்டான்.

''நான் போய் வரட்டுமா? உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.'' என்று அவனிடம் விடை பெற்றுக் கொள்ளும் பொழுது அவள் தொண்டை கரகரத்தது. ஸேதுபதி இதைச்சற்றும் எதிர் பார்க்கவில்லை. இரண்டு தினங்களாகவே, அதாவது, அன்றைய மசக்கை ஆசைச் சம்பாஷணைக்குப் பிறகு சாந்தாவும் ஸேதுபதியும் ''உர்'' ரென்று தான் இருந்து வந்தார்கள். சாந்தா இப்பொழுதும் அதே பிகுவுடன தான் நடந்து கொள்வாள் என்று எண்ணியிருந்த ஸேதுபதிக்கு அவள் ஓசைப்படாமல் தன் பின்னாலேயே வந்து தன்னிடம் விடை பெற்றுக் கொண்டது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருந்தது. மேலும் அவள் அவனிடம் விடை பெற்றுக் கொள்ளும் பொழுது அவளுடைய குரலில் த்வனித்த குழைவும் விசனமும் ஸேதுபதியைக் கலகலக்கச் செய்துவிட்டன.

“அசடே அழாதே! சமத்தாய ஊருக்குப் போய்விட்டுக் கூடிய சீக்கிரம் திரும்பி வந்து விடு” என்று வாஞ்சையுடன்கூறிச் சாந்தாவை இறுகத் தழுவி முத்தமிட்டான். இதற்குள் “மாப்பிள்ளை, ரயிலுக்கு நாழி ஆகிறதே! இன்னும் புறப்படவில்லையா?” என்று கீழே இருந்து கூவினார் மாமனார்.

சாந்தா ஊருக்குப்போய்ப் பல நாட்கள் ஆகிவிட்டன. அவளிடமிருந்து ஸேதுவுக்கு அடிக்கடி கடிதம் வந்துகொண்டிருந்தாலும் அவள் நேரில் இருப்பதுபோல் ஆகுமா? ஒரு நாள் கழிவது ஒரு யுகமாக இருந்தது அவனுக்கு. ஏதாவது பொய்ச்சாக்குக்கூறிச் சாந்தாவை உடனே புறப்பட்டு வரும்படியாக தந்தி அடிக்கலாம் என்றுகூடப் பலதடவை யோசித்தான் ஸேது. நாட்களும் மாதமாயின.

இன்று, அந்த அமெரிக்க டாக்டர் எழுதியிருந்த கட்டுரையைப் படித்தவுடன் ஸேதுபதிக்கு முதலில் ரொம்ப வேடிக்கையாகத்தான் இருந்தது என்று சொன்னேமல்லவா? பிறகு தீவிரமாய் யோசனையில் ஆழ்ந்திருந்த அவன் மனதில் விவரிக்க இயலாத ஒரு கிளர்ச்சி ஏற்பட்டுவிட்டது.

“பாவம், அனியாயமாய் அந்தக் கர்ப்பிணிப் பெண்ணின் மனம் நோகும்படி நடந்துகொண்டுவிட்டேன். ரொம்ப ஜம்பமாய் ‘உனக்கு மசக்கை ஆசை என்ன சொல். எது வேண்டுமானாலும் நிறைவேற்றி வைக்கிறேன்’ என்று சொல்லிவிட்டு அவள் தன் விருப்பத்தை வெளியிட்டவுடன் ஒரு மூர்க்கனைப்போல் நடந்துகொண்டேன்! சீ, நான் ஒரு டபிள்கிராஜுவேட்டாக இருந்து என்ன பிரயோஜனம். காமன்ஸென்ஸ் கொஞ்சமும் கிடையாது. ஒரு ப்ரூட் (brute) நான்! சாந்தா என்ன அப்படி நிறைவேற்ற முடியாத ஒரு காரியத்தைச் செய்யும்படி கேட்டுவிட்டாள்? மனது வைத்தால் இந்தத் துர்வழக்கத்தைத் தொலைத்துத் தலைமுழுகுவது ரொம்ப சிரமமா என்ன? ஒரே நாளில் இந்தச் சனியனை அடியோடு விட்டொழிக்க முடியாவிட்டாலும் சிறுகச்சிறுக ஸிகரெட் பிடிப்பதைக் குறைத்துக்கொண்டேவந்து ஒரு வாரத்திற்குள் இந்த வழக்கத்தை முழுவதும் விட்டுவிடாது போனால் என்பெயர் ஸேதுபதி இல்லை” என்று திட ஸங்கல்பம் செய்து கொண்ட ஸேதுபதி தன் சங்கல்பத்தைக் காரியத்தில் நடத்திக் காட்டுபவன் போல், தன் கையில் அச்சமயம் பாதி எரிந்து கொண்டிருந்த, ஸிகரெட்டை ஜன்னலுக்கு வெளியே வீசி எறிந்தான். பிறகு அன்று முழுவதும் அவன் ஸிகரெட்டைத் தொடவே இல்லை. ரொம்ப கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவன் மன உறுதி குலையவில்லை. மறுதினம் ஒருவித அசட்டுத் தலை வலியும், பித்துப் பிடித்தது போன்ற உணர்ச்சியும் அவனைப் பிடித்தன. ஆபீஸில் வேலை ஓடவே இல்லை. அன்று என்னவானாலும் இரண்டு ஸிகரெட்டுக்கு மேல் உபயோகிப்பதில்லையென்று பிரதிக்ஞை செய்து கொண்டு வெகு பிரயாசையின் மேல் அதை நிறை வேற்றியும் விட்டான். மூன்றும் நாள் ஒன்றே ஒன்று; அதுவும் காலையிலிருந்து வைராக்கியத்துடன் இருந்து விட்டு, இரவு படுக்கைக்குப் போகு முன் சபலத்திற்காகக் கொஞ்ச நேரம் புகை இழுத்து விட்டுப் படுத்துக் கொண்டான். நான்காம் நாள் பூரண வெற்றி! தான் வைத்திருந்த ஒருவார கெடுக்கூட தேவையாக இல்லையே, இந்தக் கெட்ட வழக்கத்தை ஒழிக்க, என்று அறிய வந்த ஸேதுவின் மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் எல்லையே இல்லை. கைவசம் “ஸ்டாக்” செய்து வைத்திருந்த உயர்தர ஸிகரெட்டுக்களையெல்லாம் நிர்தாக்ஷிண்யமாய் வெந்நீர் அடுப்பில் போட்டுத் தகனக்கிரியை நடத்தினான். இந்த மகத்தான காரியத்தைப் பூரண வெற்றியுடன் (அவனுக்கு அது மகத்தான காரியமாகத்தான் புலப்பட்டது) சாதித்த பிறகு இனி ஒரு நிமிஷமும் அதைப் பற்றிச் சாந்தாவிடம் தெரிவிக்காமலிருக்க அவன் மனது பொறுக்கவில்லை. கடித மூலமாய் அறிவிப்பதைவிட தானே நேரில் சென்று சாந்தாவை ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கடிக்க வேண்டுமெனத் திட்டம் போட்டு, அதன்பிரகாரம் ஆபீஸுக்கு இரண்டுதினங்கள் ரஜா எழுதிப் போட்டு விட்டுப் புறப்பட ஆயத்தமானான். அவன் மனம் ஒரே பறப்பாய்ப் பறந்தது. ரயிலுக்கு இன்னும் இரண்டு மணி சாவகாசம் இருக்கும்பொழுதே உடைபோட்டுக்கொள்ள ஆரம்பித்துவிட்டான். அதே சமயத்தில் வீதியில் ஒரு ஜட்கா வந்துநின்றது. கிராமத்திலிருந்த ஸேதுபதியின் தாயார் பிள்ளையைப்பார்க்க வரப்போவதாகப் போன வாரம் கடிதம் போட்டிருந்தாள். இப்பொழுது வண்டி வந்து நிற்கும் சப்தத்தைக் கேட்டதும் ஸேதுவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டது. “பூஜைவேளையில் கரடியைவிட்டடிப்பது போல் இதென்ன இழவாய்ப்போச்சு!” என்று முணுமுணுத்தவண்ணம் மாடியிலிருந்து கீழே இறங்கிவந்தான்.

அங்கே அவன்கண்ட அற்புதக்காக்ஷி என்ன? ஸௌந்தர்ய தேவதை போல் முல்லைச்சிரிப்புடன், ஸாக்ஷாத் சாந்தாதேவியே, கையில் வெள்ளிக்கூஜாவுடன், உள்ளே பிரவேசித்துக் கொண்டிருந்தாள்! வண்டிக்காரனுக்கு வாடகையைக் கொடுத்தனுப்பிவிட்டுத் தன் தங்கையின் பின்னாலேயே வீட்டிற்குள் நுழைந்த ஸேதுபதியின் மைத்துனன், “மாப்பிள்ளை, நீங்கள் நிச்சயமாய் ஏதோ சொக்குப் பொடி போட்டுத்தான் எங்கள் சாந்தாவை மயக்கியிருக்கவேண்டும்? ஊருக்கு வந்து நேர இன்னும் ஒரு மாதம்கூட ஆகவில்லை. அதற்குள் ‘அவா தனியா இருக்கா, என்னை அழைத்துக்கொண்டு போய் விட்டுவிடுங்கோ. பிறகு மாசக்கணக்காய் இங்கு வந்து இருக்க வேண்டியஅவசியம்தான் எப்படியும் ஏற்பட்டிருக்கிறதே’ என்று பத்து நாளாய் எங்களை

எல்லாம் அரித்துப்பிடுங்கி விட்டாள். இவள் செய்யும் நச்சுத் தாங்காமல் அம்மாவும் 'உன் தங்கையை அழைச்சுண்டு போய் முன்னடி அவள் ஆத்துக்காரரிடம் கொண்டு விட்டு வாடாப்பா. அவள் பிடுங்கல் எனக்குச் சகிக்கவே இல்லை'' என்று என்னைக்கிளப்பிவிட்டாள். என்னடீம்மா சாந்தி. உள்ளம் குளிர்ந்ததா? இனிமேலாவது ராத்திரி சரியாகத்தூங்குவாயோ இல்லையோ?'' என்று தன் தங்கையையும் மாப்பிள்ளையையும் பரிகாஸம் செய்தான்.

மாப்பிள்ளையும் மைத்துனனும் சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்தனர். பிறகு மைத்துனன் குளிக்கப்போனான். சாந்தா நாணம் கலந்த புன்முறுவலுடன் ஸேதுபதியின் அருகே வந்து, ''என்ன ஒரு மாசத்திற்குள் உங்கள் உடம்பு இப்படி இளைத்து விட்டதே! உடம்பு ஒன்றுமில்லையே? ஸௌக்கியமாகத் தானே இருக்கிறீர்கள்?'' என்று பேச்சைத் துவக்கினான்.

''உடம்புக்கு ஒன்றுமில்லையடி, கண்ணு. எல்லாம் பிரிவாற்ருமையின் கொடுமை தான். அது போகட்டும், நீ என்ன இப்படி முன்னடியே ஒரு கடிதம்கூட போடாமல் திடீரென்று புறப்பட்டு வந்து விட்டாயே!''

''என்னமோ எனக்கு அங்கே கொஞ்சங்கூட இருப்பாகவே இல்லை. சதா உங்கள் நினைவு தான். ஏன் நான் வந்ததில் உங்களுக்குக் கஷ்டம் ஒன்றுமில்லையே? என்ருள் குறும்புச் சிரிப்புடன்.

''கஷ்டமா? யாருக்கு? உனக்குத்தான் கஷ்டம். அங்கே ஊரிலே உன் அம்மாவும் மன்னியும் சேர்ந்து கொண்டு உனது மசக்கை ஆசையை எல்லாம்தீர்த்து வைத்திருப்பார்கள். இங்கே நான் என்னசெய்யக் கிடக்கிறது, சொல் பார்ப்போம்''! என்ருன்.

மசக்கை ஆசை என்றதும் அவளுக்குப் பழைய மனஸ்தாபம் நினைவுக்கு வரவே, சட்டென்று சாந்தாவின் அழகிய வதனம் வாட்டமடைந்தது.

ஸேது சாந்தாவின் வாடிய முகத்தை நிமிர்த்தி, ''சாந்தா, என் தங்கமே, உனக்கு ஒரு சந்தோஷச் செய்தி! . நான் ஸிகரெட் பிடிக்கும் வழக்கத்தை அடியோடு விட்டு விட்டேன். இனிமேல் அந்தச் சனியனைக் கையால்கூடத் தீண்டுவதில்லையென்று பிரதிக்ஞை செய்திருக்கிறேன். உன் மசக்கை ஆசையை நிறைவேற்றும் பாக்கியத்தை நானும் தான் அடைகிறேன் என்றறிய எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா?''

மைதீட்டியிருந்த சாந்தாவின் அகன்ற கண்கள் இன்னும் அதிகமாய் விரிந்தன. ''நிஜமாகவா?'' என்ருள் தாங்கவொண்ணு வியப்புடன்.

''ஸத்தியமாக!''

''அப்பாடா! உங்கள் வாயிலிருந்து இவ்வார்த்தையைக் கேட்க எவ்வளவு ஆனந்தமாகவும் அமைதியாகவும் இருக்கிறது!'' என்று கூறி நிம்மதி நிறைந்த உள்ளத்துடன் ஸேதுவின் மார்பில் சாய்ந்தாள் சாந்தா.


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்கியாதிபெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக்கொண்டிருக்கிருர்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு,

# உடைந்த வீணை



கே. சுந்தரம்மாள்

●

— 7 —

அச்சமயம் மாதவன் அங்கு வந்தான். "நரேன் பூரணசுகம் அடைந்துவிட்டாயல்லவா?" என்று கேட்டுக்கொண்டே அவன் பக்கத்தில் உட்கார்ந்து அவனை அணைத்துக்கொண்டு, முகத்தை உற்று நோக்கினான். "நரேன் என்ன ஒரே யோசனையில் ஆழ்ந்துவிட்டாய் போலிருக்கிறது? விஷயம் என்ன?" என்றான்.

சிரமத்துடன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "ஒன்றுமில்லையே. சும்மா, பொழுது போகவில்லை, படுத்துக்கொண்டேன். தூக்கமும் வரவில்லை. அவ்வளவே" என்றான்.

"இல்லை நீ ஏதோ விஷயத்தை மறைக்கிறாய். 'அடுத்ததுக்காட்டும் பளிங்குபோல் மனம் கடுத்ததுகாட்டும் முகம்.' நரேன்! உன் மனதிலுள்ள விஷயத்தை என்னிடம் தாராளமாகச் சொல்லு. நான் தீர்ப்புச் சொல்லுகிறேன்" என்றான்.

"குற்றவாளி ஒருவருமில்லை நீ தீர்ப்புச் சொல்ல. இதெல்லாமிருக்கட்டும். இன்று காலை கடிதம் ஒன்று வந்ததே, அது விஷயம் பெண்பார்க்க எப்பொழுது புறப்படப்போகிறாய்? நானும் வரட்டுமா? ஏதோ உனக்குக் கொஞ்சம் உதவியளிக்கப் பிரயத்தனப் படுகிறேன்" என்று சிரித்துக்கொண்டே அவன் கைகளைத் தன் கைக்குள் கோத்துக் கொண்டான்.

"நீ இல்லாமலா நான் புறப்படுவேன். பருப்பில்லாமல் கல்யாணம் நடக்குமோ? நரேன்! என் கல்யாணம் இப்பொழுது நடைபெறாது. மாலதிக்கு ஓர் ஏற்பாடு செய்துவிட்டுத்தான் மற்றப்பேச்சு" என்றான் மாதவன்.

"மாலதிக்கு என்ன ஏற்பாடு செய்யப் போகிறாய்? உன் அப்பா செய்திருக்கும் ஸௌகரியத்தைவிட நீ என்ன செய்துவிடப் போகிறாய்? ஏற்பாடு என்பதின் அர்த்தம்?"

"ஏற்பாடா. அவள் இழந்த வாழ்வை மீட்கும் ஏற்பாடு."

"என்ன?" என்றான் ஆச்சரியத்துடன் அகல விழித்துக்கொண்டு. பிறகு ஒரு நீண்ட மூச்சு விட்டுவிட்டு, "மாதவா! நீ சொல்லும் ஏற்பாடு நடக்க முடியுமா? உன் தந்தையின் கொள்கையை உன்னால் எதிர்க்க முடியுமா? சமூகத்தைப் புறக்கணிக்க உனக்குச் சக்தியுண்டா? இதில் நீ வெற்றி காண முடியாது."

"ஏன் நரேன் இப்படிப் பயப்படுகிறாய்? நம் போன்றவர்கள் முயன்றால் ஏன் முடியாது? நரேன்! இதுவிஷயத்தில் எதிர்ப்பு வந்தாலும், என்ன கஷ்டம் வந்தபோதிலும், நான் நடத்தியே தீருவேன்."

"சரி உன் முயற்சி பயனளிக்கட்டும். மாலதியின் மனம் அறியவேண்டாமா?"

"அறிந்தேதான் சொல்லுகிறேன்" என்றான் புன்சிரிப்புடன்.

திடுக்கிட்டவனாய் அவனைப் பார்த்தவண்ணம் மௌனம் கடைப்பிடித்தான். ஆனால் மனம் பதறிற்று. கைகால்கள் ஆட்டம்

கொடுத்தன. முகத்தில் சோகத்தின் ரேகை தென்பட்டது. இவற்றையெல்லாம் மாதவன் கவனித்தான். மனதிற்குள், "பாவம், மறைக்கப் பார்க்கிறான். இருக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டான்.

"இவன் விஷயம் அறிந்துதான் பேசுகிறானா? எப்படி அறிந்தான்" என்று சிந்தித்தான். பிறகு "வரன் யார்?" என்ற கேள்வி, ஹ்ருதயத்தின் ஆழத்திலிருந்து மெல்லிய காற்றாக வெளிவந்தது.

"மஹாராஜராஜஸ்ரீ நரேந்திர சந்த்ரரவர்களே! கொண்ட கடையிலேயே விற்கப் பார்க்கிறீர்களே. 'வரன் யார்' என்பது உமக்குத் தெரியாதா?" என்றான் சிரித்துக்கொண்டே.

"ஸ்ரீமாதவமாயனவர்களே, விஷயம் எப்படி? ........." என்று நிறுத்தினான்.

"அப்படிவா வழிக்கு. உனது சயனத் திருக்கோலத்தின்பொழுது, உனது திருவாய் மொழியினாலேயே அறிந்துகொண்டேன். பிறகு ஸ்ரீதேவி விவரித்தாள்."

"உன்னிடம் எவ்விதம் அச்சமில்லாமல் சொன்னாள்?

"நரேன்! நான் மாலதியிடம் வைத்த பாசத்தின் ஆழத்தை ஒருவராலும் அறியமுடியாது. விதி சதி செய்தது. ஆனாலும் நான் சந்தோஷத்தையே கருதிவந்தேன். அந்தச் சமயம் நானும் அவளும்தான் அவ்விடமிருந்தோம். தன்னை ஒன்றும் கேட்கவேண்டாமென்று கெஞ்சினாள். நரேன் அன்பின்முன் எது நிற்கும். அவள் என்றைக்கும் அவள் இரகசியத்தை என்னிடம் மறைக்கமாட்டாள். இன்றும் அவசியமாயிற்று. அவ்வளவே" என்றான்.

"சரி மேலே நீ என்ன செய்வதாகத் தீர்மானித்திருக்கிறாய்?

"அன்று சமஸ்தானத்திலிருந்து உன்னை உத்யோகம் ஏற்றுக்கொள்ளும்படி கடிதம் வந்ததல்லவா? அதை நீ ஒப்புக்கொள்ளவேண்டியது. நான் சகல ஏற்பாடும் செய்தாய்விட்டது. அவ்விடம் வீடு முதல் பார்த்துச் சகல ஏற்பாடும் நடந்துவிட்டது என்ற தகவலும் கிடைத்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, இரண்டு கிளாஸில் ஆரஞ்சு ரஸத்தை எடுத்துக்கொண்டு அவ்விடம்வந்த மாலதி, "யாருக்கு வீடு பார்த்தாய் விட்டது" என்றுகேட்டுக் கொண்டேகிளாஸை அவர்கள் கையில்கொடுத்தாள்.

அதைக் கையில் வாங்கிக்கொண்டே, "உனக்குத்தான்" என்றான் மாதவன்.

"எனக்கா? என்ன அண்ணா கேலி பண்ணுகிறாய்!" என்றாள்.

"உண்மை மாலதி உண்மை. நாளை வருகிற வெள்ளிக்கிழமை உனக்கும், நரேனுக்கும் வைதீகச்சடங்குகளுடன் கல்யாணம். மறுநாள் சனிக்கிழமை ஹனிமூன். ஞாயிற்றுக்கிழமை சமஸ்தானத்தில், நரேன் வேலை ஒப்புக்கொள்ளவெண்டியது. அவ்விடம் நீங்கள் சகல ஸௌகரியங்களுடன் வரவேற்கப்படுவீர்கள். ஆனந்த சாகரத்தில் மிதக்கும் உங்கள் வாழ்க்கைப்படகைப் பார்த்துவிட்டு நானும் ஆனந்தமானக் கரைசேர்வேன்" என்றான்.

"அப்பா! எவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட்டாய்? இது நடக்கக்கூடிய விஷயமா? அப்பா ஒருநாளும் சம்மதிக்கமாட்டார். மேலும், எப்பொழுது வீணை உடைந்ததோ அன்றே, இது அநுசிதமான காரியம் என்று நான் தீர்மானித்துவிட்டேன். நீ வீண் பிரயாசைப்படாதே.

"ஆம் மாதவா! மாலதி சொல்வது உண்மை" என்றான் நரேன்.

"இல்லை. உடைந்த வீணை ஒன்றுகூடாமல் இருக்குமானால் நீங்கள் சொல்வதை ஒத்துக்கொள்ளவேண்டியதே. அது ஒன்றுகூடிவிட்டதால் நீங்களும் ஒன்றுகூடலாம். உடைந்துபோன வாழ்வை மீட்கும் அறிகுறியாகவே அந்த நிகழ்ச்சி ஏற்பட்டது" என்றான்.

"சரி, நீ சொல்வதை ஒத்துக்கொள்ளுகிறேன். அப்பா, அம்மா, இவர்களின் ஆலோசனை முடிவடைந்ததா?"

"மாலதி, இதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். எல்லாம் எனக்குத் தெரியும். அடுத்த வெள்ளிக்கிழமை, இந்நேரம் நீ புஷ்பம் குங்குமத்துடன் விளங்குவாய். இந்த வெள்ளிக்கிழமை, இதோ நிச்சயதாம்பூலம்" என்று நரேன், வலது கையையும், மாலதியின் வலது கையையும் சேர்த்துப் பிடித்துத் தன் கைக்குள் வைத்துக்கொண்டான்.

மூவர் மனதிலும் நீண்ட அமைதி.

"மாதவா, எனது இருண்ட வாழ்வில் ஜோதியை மிளிரச்செய்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். எனது ஆனந்தத்தை, இத்தருண நிம்மதியை எவ்விதம் சொல்லுவதெனத் தெரியவில்லையென்றான்" உணர்ச்சியுடன், தழுதழுத்த குரலுடன்.

"என் மாலதியின் மலர் மனம் வாடாமல் நீ காக்கவேண்டும், அவ்வளவே எனது கோரிக்கை" என்றான்.

"மாலதியின் மனதில் விஷயத்திற்கே இடமில்லை அண்ணா!" என்றாள். கண்களில் நீர் நிறைந்தது.

"சற்றுநேரம் ஏதேதோ பேசினார்கள். எழுந்து நின்றுகொண்டு "மாலதி! சற்றுநேரம் பேசிக்கொண்டிருங்கள், நான் கொஞ்ச நாழி

கைக்குள் வந்துவிடுகிறேன்'' என்று சொன்னான் மாதவன்.

அவனுடன் வாயிற்படிவரை நரேனும் சென்றான். நரேன் முதுகில் ஓர் தட்டுத் தட்டி, ''நீ பயப்படவேண்டாம். உன் இஷ்டப்படி நடக்க நான் அனுமதிக்கிறேன்'' என்று சிரித்தவாறே கூறிவிட்டுச் சென்றான்.

நரேன் கதவை மூடிவிட்டுத் திரும்பினான். மாலதி அவன் பக்கத்தில் வந்து ''நான் போக வேண்டும் வழிவிடுங்கள்'' என்றாள்.

''சற்று விலகி நின்று, இவ்விடமிருக்கப் பிரியமில்லாவிடில், செல்லலாம். தடுப்பாரில்லை'' என்றான்.

''இது ஓர் அஸ்த்ர ப்ரயோகம்'' என்றாள் புன்சிரிப்புடன்.

''அது என் சொல்லிலல்ல, உன் கண்களில். நான் இவ்விடம் முதல் அடிவைத்த அதே நிமிஷம் என்னை அடிமைகொண்ட கண்களில்'' என்றான்.

''இப்பொழுது நான் என்ன செய்யவேண்டுமென்பது தங்கள் சித்தம்?''

''நான் சொல்லுகிறபடிகேட்கத் திருவுள்ளம் தானா?''

''உம்'' என்று மேல்நோக்காக அவனைப் பார்த்துச் சிரித்தவண்ணம் தலையை அசைத்தாள்.

''ஸ்ரீ தேவி அன்றுபோட்ட தடையுத்தரவு வீணை உடைந்தவுடனேயே ரத்தாகிவிட்டது. இனிமேல் தடையுத்தரவு ஒன்றும்கிடையாதே என்ற சந்தேகம் தீரவேண்டும். பக்தன் வேண்டுகோள் அவ்வளவே'' என்றான்.

பதிலொன்றும் சொல்லாமல் புன்சிரிப்புடன் அவனைப்பார்த்துக்கொண்டே நின்றாள், கண்ணோடு கண் நோக்கின் வாய்ச்சொற்கள் எதற்கு? நிம்மதியடைந்த மனம்! யௌவன மிடுக்குடன் நிற்கும் பெண்தெய்வத்தின் தோற்றம், மோஹனஹார ரூபம், மயக்கம்தரும் கண்களின் பார்வை, தனிமை, இவ்வளவுமிருக்கும்பொழுது, புயலுக்குப்பின் அமைதியுற்ற உள்ளம் தடுமாறுவது இயற்கையின் சிருஷ்டி விநோத தத்வமல்லவா? அவள் கையைப் பற்றி அருகில் இழுத்து அணைந்து முத்தமிட்டான்.

அவன் பிடியினின்றும் விலக அவள் பிரயத்தனப்படவில்லை.

அவள் மோவாயைப்பிடித்து நிமிர்த்தி, ''மாலதீ, இந்தப் பாக்கியம் கிடைக்குமென்று நான் கனவில்கூட எதிர்பார்க்கவில்லை. கால தேவதையின் திருவிளையாடல்களில் நடக்காத விஷயம் எதுவுமில்லை''.

''நான் செய்வது நல்லதோ கெடுதலோ? இந்தச் சமயம் என் மனம் நான் செய்வது சரியெனச் சொல்லுகிறது. காலம் எதைவேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும். அதைப்பற்றி அவசியமில்லை'' என்று அவன்தோளில் சாய்ந்துகொண்டே கூறினாள்.

'கெடுதல் ஒன்றுமில்லை. நாம் களவொழுக்கம் செய்யவில்லையே. உண்மையான, நேர்மையான பாதையிலேயே செல்லுகிறோம். இல்லையென்றால் ஸனதனத் தலைவரான உன் தந்தை சம்மதிப்பாரா?''

''என் தந்தை சம்மதித்துவிட்டார் என்று எப்படி நிச்சயிக்கமுடியும்?''

''சம்மதிக்காவிடில் மாதவன், இவ்வளவு தைரியத்துடன், இவ்வளவு ஏற்பாடு செய்ய முடியுமா?''

''அது சொல்லமுடியாது. மாதவன் சுபாவம் தனிப்பட்டது. நினைத்தால் செய்யமுடியாது என்ற பதம் அவன் அகராதியில் கிடையாது. எதுவோ நாம்நினைத்தபடி நடத்தமுடியவில்லை. அவன் இஷ்டப்படிதான் நடந்துபார்ப்போமே'' என்றாள்.

அருகில் போடப்பட்டிருந்த சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு, மாலதியைத் தன் மடிமீது உட்காரவைத்துக்கொண்டான். சற்று நேரம் ஏதோ ஆனந்தமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். மணி ஐந்தடித்தது. மாலதி திடுக்கிட்டு எழுந்துநின்று, நரேன்! நான் இவ்விடம் வந்து எவ்வளவு நேரமாகிவிட்டது. பொழுதைப் பிடித்துத் தள்ளினதுபோக, இன்று அது சென்றவிதமே தெரியவில்லை. சந்தேகத்திற்கு இடம்கூடாது. நான் போகிறேன்'' என்றாள்.

''என்னைத்தனியாக விட்டுச் செல்லுகிறாயே, மாதவன் தான் வரும்வரை உன்னை இவ்விடமிருக்கச் சொன்னானல்லவா?'' என்று விஷமச் சிரிப்புடன் சொன்னான்.

எனக்கும் போகமனமில்லை. ஆனாலும், சமயம் சந்தர்ப்பம் இவைகளைக் கவனித்து நடப்பதுதான் கடமை. வேண்டுமானால் நாம் வீணை வாசிப்போம். இப்படிக் கதவை மூடிவிட்டு.............'' என்று சிரித்தாள்.

''உம். சரி உன் இஷ்டம். முதலில் நீ வாசி. கேட்டுக்கொண்டிருக்கிறேன்''.

பிறகு இருவரும், ''இதுவரை திரைக்குப் பின்னிருக்கும் மங்கின ஜோதியில் உணர்வின்றிப் பாடினோம். இன்று திரைக்கு வெளியில் பிரகாச அன்பில், உணர்வுடன் பாடுவோம்'' என்று கதைவைத் திறந்து வைத்துவிட்டு, வீணையை எடுத்துவந்து அவன் காலடியில் வைத்துவிட்டு, அவன் பாதங்களில் நமஸ்கரித்தாள்.

"இது என்ன?" என்று சிரித்தான்.

"பதிஸேவை" என்ருள்.

"அப்படியென்ருல், தினம் பாதபூஜை, பிரதக்ஷிண நமஸ்காரம் இவையெல்லாம் உண்டோ?"

"ஆம், இன்னும் நமது புது வாழ்க்கைப் படைகளெந்தெந்தவழிகளிலெல்லாம் செலுத்திஞல் லக்ஷ்யத்தை அடையமுடியுமோ அவ்விதமெல்லாம் செலுத்தியே பார்ப்பேன். இது விஷயத்தில், புராண இதிகாசங்களில் வரும் வனிதா ரத்னங்களின் செய்கைகளைப் படிக்கும் பொழுது, நமக்கு அந்தப் பாக்யம் கிட்டாமல் போய்விட்டதே என்று நினைப்பேன். இது விஷயமாக நான் அடைந்த துக்கந்தான் என்னைப் பாதித்தது. பாக்யம் கிடைத்தபின்?"

"மாலதி! உன் அழகைவிட அடக்கமான குணமே என்னை அடிமைகொண்டது. நான் மிக்க பாக்யசாலியே" என்ருன்.

கொஞ்ச நேரம் மாலதி வாசித்தாள். பிறகு இருவரும் சேர்ந்துவாசித்தார்கள். ஓர் அருமையான சிருங்கார ரஸ பதத்தை வாசித்தான். முடிந்தும் மாலதி வீணையைக் கீழே வைத்தாள்.

"ஏன்?" என்ருன் நரேன்.

"ஒரு சந்தேகம்"

"கேள்"

"இந்தப் பதத்தை எப்போதும் அதிக கவனமில்லாமல் வாசிப்பீர்கள். இன்று பொருந்தும் என்று இவ்வளவு உணர்ச்சியுடன் வாசித்தீர்கள்?"

"ஒரு விதத்தில் நீ சொல்லியபடி உணர்ச்சி வேகந்தான். ஆனல் சிருங்கார ரசம் என்று தோன்றும் இதன் உள்ளர்த்தம் பலாப்பழத்தை ஒத்தது. ஆழ்ந்து சிந்தித்தால், பரமாத்மா ஜீவாத்மாவினைச் சொல்லும் வாக்யம். வெளிஅர்த்தம், தலைவி தலைவன் கூற்று. அந்தச் சிந்தனையில் பாடுவேன். இன்று, பின்சொன்ன சிந்தனை தோன்றிற்று" என்ருன்.

"சரி. மணி ஆறு அடிக்கப்போகிறது. நாம் நிறுத்தவேண்டியதே".

"இல்லை. இன்று மாதவன் வரும்வரை இவ்விடம்தான்".

"நல்ல மாதவன்" என்று சிரித்துக்கொண்டே எழுந்திருந்து, "சந்தியாவந்தனத்திற்கு நாழிகையாய் விட்டது எழுந்திருங்கள்."

"இன்று உன்னுடைய வந்தனந்தான்".

"ரொம்ப விசேஷம். தோற்றத்திஞல் நாகரிகமாகத் தோன்றினும் நித்ய கர்மானுஷ்டானங்களில் நரேன் தவறுவதில்லை என்று அப்பா சொல்லிச் சந்தோஷப்படுவார். எனக்கும் திருப்திதான். இன்று 'எனக்கு வந்தனம்' என்ருல் நான் விடமாட்டேன். நீங்கள் சந்தி பண்ணச்செல்லுங்கள். எனக்கு இப்பாக்யம் தந்த தேவிக்குவணக்கம்செலுத்தி, தீபம் ஏற்ற நான் செல்லுகிறேன்" என்ருள்.

"உம், சரி. ராணியின் உத்தரவுப்படியே" என்று எழுந்தான்.

வீணையை எடுத்து அதன் இடத்தில் வைக்கத் திரும்பினள். அவள் பக்கம் வந்து தந்தியை மீட்டினன். "நரேன்" என்ருள்.

"ஏன்?" என்ருன்.

"இவ்வீணைக்குத் தந்தியில்லையேல்?"

"நாதமும் இல்லை".

"அதேபோல் என் ஜீவியம் அல்லவா?"

"சந்தேகமென்ன. வீணையடி நீ எனக்கு, மீட்டும் விரல் நானுனக்கு" என்ருன். இருவர் கண்களும், இருளும் வெளிச்சமும் கலந்த மாலை வேளையில் காதலின் வேகத்தைக் கண்டன.

பிறகு வீணையை வைத்துவிட்டு, அவன் அருகில்வந்து "நான் செல்லட்டுமா?" என்ருள்,

"உம்" என்று தலையை அசைத்தான்.

ஒருவர் முகம் ஒருவருக்குத் தெளிவாகத் தெரியாத அந்த நேரத்தில் ஒருவரையொருவர் பார்த்தவண்ணம் நின்றனர். அப்பார்வையில் என்ன சக்தியிருந்ததோ! தனது இரு கைகளை அவன் கழுத்தில்போட்டு இழுத்து, அதரத்தில் ஓர் முத்திரையிட்டுவிட்டு, அவன் எதிர்பாரா விதம் சட்டெனக் கையை எடுத்துக்கொண்டு ஒரே தாவலில் வெளியே ஓடிவிட்டாள் மாலதி.

"மிக்க விசித்திரமானது பெண்களின் உள்ளம்போலும். அன்று எவ்வளவு பயந்தாள். "மாலதி! இவ்வளவு உணர்ச்சியையும், அன்று எவ்வாறு அடக்கிவைத்திருந்தாய்?" என்று நினைத்துத் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

பிறகு சந்தியவந்தனம் முதயலிவைகளைச் செய்துமுடித்து, முகங்கழுவி, தலையை வாரி, ஸ்னே, பவுடர் முதலிய அலங்கார வாஸனதிகளெல்லாம் தரித்து, நன்ருக உடுத்துக்கொண்டான். மனம்அமிதமான ஆனந்தசாகரத்தில் மிதந்தது. இலேசாக ஒரு ராகத்தை இழுத்தவாறு மாலதியை எந்த இடத்தில் பார்க்கலாம் என்று நினைத்தான். அவள் அறைக்குப்போவது தவறு. அவள் எவ்விடமிருப்பாள்? ஒருசமயம் மாதவன் அறையில் மேல்நடக்கவேண்டியவைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாலும்இருக்கலாம். அப்படியிருந்தால் ரொம்ப நல்லது. நாம் தாராளமாகச் செல்லலாம் என்று நினைத்து மாதவன் அறையை நோக்கி நடந்

தான். ராகவய்யாவின் அறைப்பக்கம் வரும் பொழுது, மாதவன்குரல் அவ்விடம் கேட்டது. யாருடன் பேசுகிறுன் என்று ஜன்னலின் திரை வழியாகப் பார்த்தான். ராகவய்யா பேப்பரைக் கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் எதிரில் மேஜையில் கையை ஊன்றியவண்ணம் நின்றுகொண்டிருந்தான் மாதவன்.

"மாதவா! என்ன சொல்லுகிருய் எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே, ஸால்மூன்கரண்டி பொயற்றியைப்போல், வெள்ளி, சனி என்று அடுக்குகிருயே?" என்ருர்.

"விளக்குகிறேன். நரேன் அடுத்த திங்கட்கிழமை.........சமஸ்தானத்தில் வேலை ஒப்புக்கொள்ள வரவேண்டுமென்று தகவல் வந்துவிட்டதல்லவா?"

"ஆமாம். வருகிற ஞாயிற்றுக்கிழமை நல்ல நாளாக இருப்பதால் அன்று அனுப்பலாமென்று நினைத்திருக்கிறேன். ஏதோ நம்மிடம் வந்தவன் நல்லநிலைமையில் வெளிச்செல்லுவது எவ்வளவு பெருமை. அவன் தந்தைக்கு நான் செய்யவேண்டிய கடமை இது. ஒரு கல்யாணத்தைச்செய்து அனுப்பினுல் கவலையில்லை. நல்ல அழகு, காளைப்பருவம், ஏராளமான பணம், உயர்ந்த அந்தஸ்து, இந்த நிலையில் மனம் இஷ்டப்படி சஞ்சரிப்பது வாலிப சேஷ்டையல்லவா? அதனுல் அவ்விடம் ஏதாவது தீய ஜாதியரிடை பற்று உண்டாய்விட்டால் நமக்குத்தான் தலைகுனிவு. அவன் என்னமோ மூன்று வருஷமாகத் தட்டிக்கழிக்கிருன். நரேன் எல்லா விஷயங்களிலும் உயர்ந்த நோக்கமுடையவன். எனக்கு அவன்மீதில் மிகவும் திருப்தியே. ஆனுல் இந்தக் கல்யாண விஷயத்தில்மட்டும் அவன்மீது எனக்கு மிக வருத்தமே" என்ருர்.

"அதே கல்யாணத்தைத்தான் நான் சொல்ல வந்தேன். வருகிறவெள்ளிக்கிழமை கல்யாணம் ஞாயிற்றுக்கிழமை ஹனிமூன். தனிக்குடித்தன ஏற்பாடுஎல்லாம் செய்தாய்விட்டது" என்ருன்.

"என்ன? எனக்குத் தெரியாமல் எல்லாம் நடக்கிறுப்போல் இருக்கு. அப்பா! ஒரு கவலை விட்டது. அவன் எப்படிச் சம்மதித்தான். அந்த ரம்பை யார்?"

"அவளா நமது மாலதி" என்ருன் கம்பீரமாக.

"என்ன? மாலதியா? மாதவா! புத்தி ஸ்வாதீனத்துடன்தான் பேசுகிருயா?" என்ருர் பதட்டத்துடன்.

"நிதான புத்தியுடன்தான் பேசுகிறேன். ஆம் நமது மாலதிக்கும் நரேனுக்கும்தான்".

"இது என்ன அசம்பாவிதமான காரியம். ஸனுதனத்திற்கே தலைவனுன என் வீட்டிலா? அதுவும் என் பெண்ணு? மாதவா வேண்டாம். நமது குடும்ப கௌரவம் என்னவாகும்? நாலு பேர் என்னை என்னவிதமாகப் பேசுவார்கள். இன்னும் இருவருக்குக் கல்யாணம் ஆகவேண்டாமா? அவள்காலம் இப்படியே கழிய வேண்டுவதுதான் தர்மம். வீணுக நமது குடும்பத்திற்கு அவச்சொல் ஏற்படும்படி செய்யாதே"

"அவச்சொல் இல்லை. தவச்சொல் என்று நினைப்போம். உங்கள் ஸனுதனத்திற்கு ஓர் முழுக்குப்போடுங்கள். ஓர் இளம் ஹிருதயத்தின் மலர்ச்சிக்காக எந்தத் தகப்பனும் இந்தத் தியாகம் செய்யப் பின்வாங்கமாட்டான். இதனுல் ஒன்றும் குடும்ப கௌரவம் கெட்டுவிடாது. விதி அவள் வாழ்க்கைப்பாதையைச் செப்பனிடும்பொழுது, நாம் ஏன் அதில் முள்ளைப்போடவேண்டும். அப்பா அவள்மீது இரக்கம் காட்டுங்கள்".

"மாதவா! நான் இரக்கமற்றவனென்பது உன் எண்ணமா? நான் அவள் விஷயத்தில் எவ்வளவு சலுகை காட்டமுடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறேன். அந்த விஷயத்தில் ஸனுதனிகளிடம்கூட கொஞ்சம் எதிர்ப்பாகவே நடந்துவருகிறேன். காலத்தையொட்டி அவளை நடக்கும்படி வசதியளித்திருக்கிறேன். என் ஆஸ்தியில் சரிபங்கை அவளுக்கே வைக்கப்போகிறேன். இதுமாத்திரம் வேண்டாம். அவள் விதி அவ்வளவுதான். திரிந்தபால் நல்ல பாலாகுமா?"

"உங்கள் ஆஸ்தியை உடைப்பில் போடுங்கள். அகோரமான பசியுள்ளவனை முன்னுல் தலை வாழை இலையைப்போட்டு, அதில் பணத்தையும் பொன்னையும் கொண்டுவந்து வைத்தால், அந்தச் சமயம், அவனுக்கு அப்பணத்தினுல் என்ன உபயோகமோ அது போலத்தான் உமது ஆஸ்தி அவளுக்கு. பால்ய விவாஹம் வேண்டாம் என்று சொன்னேன். ருதுமதி விவாஹம் கூடாதென்று பிடிவாதம் செய்துமுடித்தீர்கள். ஆனுல் விதியிருந்தால், பால்ய விவாஹம் செய்த முன்னேர் எல்லோரும் விதந்துவாஞர்களா? என்று கேட்பீர்கள். வாஸ்தவம். அந்த விதி நம்மைச் சதிசெய்தது என்று நினைக்கும்படியான பருவம் வந்துவிட்டால், சமாதானம் கொள்ளமுடியும். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல், உனக்குக் கல்யாணம் ஆய்விட்டது, உன்கணவன் இறந்துவிட்டான் என்ற சொல்லால் தெரிந்துகொள்ளும் ஆத்மாவிற்கு எவ்விதசமாதனம்ஏற்படும்? அதனுல்தான் பால்ய விவாஹத்தை எதிர்க்கிறேன். மேலும் விதி மாற்றமுடியாது என்பதை நம்மால் முடிந்தவரை நல்லவழியில் அவ்விதியை அமைத்துக்கொள்ளலாமே. மாலதிக்குக் கல்யாணம் நினைவிருக்குமா? புருஷனை மறுமுறை பார்த்தாளா? ஓர் குழந்தைக்குத் தாயாகஇருந்தாலும் உங்கள்நியாயம் தர்மம் எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ளமுடியும். அதனுல் நீங்கள் இதற்குச் சம்மதித்துத்தான் ஆகவேண்டும்.

நீ சொல்லுவதை ஒப்புக்கொண்டாலும், நாம் இவ்வளவு நாள் அவனுக்குச் செய்த உதவியை, "உலகம், இந்தப் பெண்ணை அவன் கழுத்தில் கட்ட, இந்த அநுதாபம்?" என்று தூற்றும். வேண்டாம் சொல்லுவதைக் கேள்.

"அப்படி உலகம் முழுமோசமில்லை. தூற்ருது. அவர் செய்தது, சரியான விஷயம்' என்று யாவரும் உங்களைப்பின்பற்றுவார்கள், நம்மைப்போன்றவர்களே இவ்விஷயத்தில் முன் நிற்க வேண்டும்."

"மாதவா, நீ வேண்டுமானல் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கலாம். மாலதி இணங்க மாட்டாள். ஒரு சமயம் பெண் உள்ளம் விரும்பலாம். ஆனல் நரேன் மஹா உத்தமன். அந்த மாதிரியான எண்ணத்துடன் மாலதியிடம் பழகவில்லை என்பதை நான் அறிவேன். நான் அவனைப் பூர்ணமாக நம்பியே மாலதியிடம் சகஜமாகப் பழக அனுமதியளித்தேன். ஒருசமயம் உனது பிரசங்கத்தால், அவனை மடக்கி, அவனும்' மனம் தளரவிட்டிருக்கலாம். ஆனல் நான் கூப்பிட்டு நரேன், இது எனக்கு எள்ளளவும் இஷ்டமில்லை என்று சொல்லிவிட்டேனுனல், நினைக்கக்கூடமாட்டான். அவ்வளவு தூய்மையான ஹ்ருதயம் படைத்தவன்."

இந்த இடத்தில் நரேனுக்கு மயிர் சிலிர்த்தது. என்ன நம்பிக்கை!

"நரேன் மஹா உத்தமன்" என்பதை முக்காலும் நம்புகிறேன். இந்த மூன்று வருஷ காலமாக அவர்கள் எவ்வளவு மனதை வாட்டி வதக்கிக்கொண்டு உங்கள் மனம் நோகாமல் நடந்துவந்திருக்கிருர்கள். அவர்கள் ஆயுள் முடியுமட்டும், இதே ரீதியில் வாழ்க்கையை நடத்தத் தீர்மானித்தார்கள். நரேன் ஆயுள் பிரும்மசாரி எனத் தீர்மானித்தான். அவன் நினைத்தால், மாலதியை எப்பவேயோ அடைந்திருக்கலாம். என் மனமானல் அவ்விதம் செய்ய இடமளித்திருக்கும். அவன் தூய்மை அன்பு, உங்களுக்கு நன்மையளித்தது. இதற்காகவே, நாம் அவர்களை ஒன்றுசேர்க்கக் கடமைப்பட்டுள்ளோம். அவன் உள்ளம் புழுங்க, நாம் வாழமுடியாது."

"சரி, சரி, போதும் உனது பிரசங்கம். நயமாகச் சொன்னல், 'மேலே எத்துகிறவழியாக இருக்கிறது. நீ சொல்லுவது ஒன்றும் நடக்காது. நாளை மறுநாள் பெண்பார்க்க வருவதாக எழுதியிருக்கிறேன். புறப்படத் தயாராக இரு. வீண் கலாட்டாவெல்லாம் செய்யாதே" என்ருர் கடுமையாக.

"பெண் பார்க்கவா? ரொம்ப அழகு. ஒரே உதரத்தில் ஜனித்த எங்களில், வெற்றிகாணுக் காதலில் மனம் புழுங்கி ஒரு ஹ்ருதயம் தத்தளிக்க, ஒரு ஹ்ருதயம் காதல் களியாட்டங்களில் வெற்றிபெற, நான் சம்மதிக்க மாட்டேன். என் மனம் ஒவ்வாது. அப்பா! மாலதிக்கு மறுமலர்ச்சி உண்டானல், எனக்கும் மலர்ச்சியுண்டு. இல்லையேல், நானும் சந்யாசியாகவே காலம் கழிப்பேன். இது சத்யம்" என்ருன் ஆத்திரத்துடன்.

"மாதவா! என்ன ரொம்ப மிஞ்சுகிருய்? மாலதி எனது பெண் என்பது நினைவிருக்கட்டும். மிஞ்சினல், இருவரும், வாதி பிரதிவாதி ஸ்தானத்தில் நிற்க நேரிடும்"

"உங்கள் பெண்ணுனுலும், அவள் மேஜர். மைனரல்ல. அதுவிஷயத்தில் நான் எந்தக் கஷ்டத்தையும் ஏற்கத் தயார். அப்பா! வீண் விவாதம் ஏன்? நீங்கள் சம்மதித்தால் இவ்விடம் கல்யாணம் நடக்கும். இல்லையேல், "ஸிவில் மாரேஜ்" பிறகு சமஸ்தானதில் ஜமீன்தார்முன் கல்யாணம். நாங்கள் யாவரும் சேர்ந்தே இந்த ஏற்பாடு. நான் சொன்னபடி நடத்திவிடுவேன் என்பதை அறிவீர்?"

"அப்படி ஏதாவது செய்தால், உன் முகத்தில் விழிக்கமாட்டேன். என் ஆஸ்தியில் ஓர் தம்பிடிகூடக் காணமாட்டாய். வளர்த்த கடா மார்பில் பாயாதே. ஒரு விஷயம். நரேன் சம்மதித்தால்தானே நீ நடத்துவாய்?"

"அப்பா! எச்சரிக்கிறேன். நரேனிடம் இதைப்பற்றி நீங்கள் பேசினல், உம் காலின் கீழ் என் உயிரை விடுவேன். இது உம்மீது ஆணை. நான் நினைத்தபடி செய்யத்தான் போகிறேன். நீங்கள் ஸனுதனிகளைக் கட்டிக்கொண்டு அழுங்கள்" என்று மேஜையின்மீது ஓங்கிக் குத்திவிட்டு, விர் என வெளியில் சென்றுவிட்டான்.

இச் சம்பாஷணையைக் கேட்ட நரேனது ஆனந்தம் அந்தர்த்தானமாக மறைந்தது. அந்த இடத்தில் நிற்க முடியவில்லை. மனம் பதறிற்று. தான் இன்னது செய்வது என்று தோன்ருவண்ணம் திகைத்தான். அப்படியே ராகவய்யாவின் காலில் விழுந்து என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் நம்பிக்கைக்கு நான் பாத்திரமல்ல என்று சொல்லிவிட்டு, கண் காணுமல் சென்றுவிடலாமா? என்று நினைத்தான். ஆனல் சாயங்காலம் மாலதியின் எல்லையற்ற சந்தோஷம் என்னவாகும். அப்பேதைக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா? என்று நினைக்கும்பொழுது, அவன் துக்கம் எல்லையைக் கடந்தது. தனது அறைக்கு வந்து படுத்துக்கொண்டான். "என்னே விதியின் கூற்று. ஓர் க்ஷணநேரத்திற்குப்பின் நடப்பவைகளைக்கூட அறிய முடியவில்லையே. எனது இருண்ட வாழ்வில் ஜோதியைக் காட்டி, மறுபடியும் மறைந்துவிட்டதே" என்று நினைத்து நிலைகொள்ளாமல் புரண்டுகொண்டிருந்தான்.

அந்தச் சமயம் மாதவன் வந்து "நரேன்" என்ருன் வாசற்படியருகில் நின்று.

தனது நிலைமையைச் சமாளித்துக்கொண்டு "ஏன்" என்ருன்.

219013
சென்னை-600 008

''நான் அங்கே வரலாமோ?'' என்றான்.

"விளக்கின் ஸ்விச்சியைப் போட்டுவிட்டு, இதென்ன கேள்வி?'' என்றான் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு.

''ஓர் சமயம் மாலதி......'' என்று சொல்லும் பொழுதே இடைமறித்து, ''எங்களை அவ்வளவு கேவலமாக நினைத்துவிட்டாய் அல்லவா?''

"சே. இதிலென்ன கேவலம். சர்வசாதாரணமாகக் கிடைக்கவேண்டியதுதானே. சரி, சாப்பிடப்போவோம்'' என்றான்.

சாப்பாட்டிற்குப்பின் விஷயத்தைப்பற்றித் தம் மனைவியினிடம் சொல்ல ஏற்பாடுசெய்யலாமென்று நினைத்தார் ராகவய்யா. அதனால் யாதொருவிதமான மாறுதல்கள் தோன்றாமல் வழக்கம்போல், சாப்பாடு நடந்தது. சாப்பாடானவுடன் யாரோ ராகவய்யாவைப் பார்க்க வந்துவிட்டதால், அவர் சென்றுவிட்டார். மாதவன், நரேனைத் தந்தை தனியாகச் சந்திக்காத வண்ணம், அவன் கூடவே சுற்றினான். வேலைக்காரன் வழக்கப்படி வீணையைக் கொண்டுவந்து ராகவய்யாவின் முன் வைத்தான். சற்றுச் சிந்தித்தார். பிறகு தடுப்பது தவறு என்று தோன்றியபடியால், இதுவும் நல்லதே. பாடி முடிந்ததும், இருவரையும் வைத்தே, விஷயத்தை ஒழுங்குபடுத்தி விடுவது என்று நினைத்தார்.

இருவரும் வீணை வாசித்தார்கள். மாலதி அன்றலர்ந்த ரோஜாவெனச் சோபித்தாள். நரேன் காம்பொடிந்த மலரென உணர்வில்லாமல் வாசித்தான். அன்று அவ்விருவரையும் பார்க்கும்பொழுது, ''தம்பதிகளானால் பொருத்தமானவர்கள்தான். மாலதிக் கொடிக்கு நரேனைப்போன்ற கொழுகொம்பு கிடைத்தால், சோபிதமாகப் படருவது நிச்சயம். ஆனால் கௌரவம், அந்தஸ்து, ஸனாதனம், இவைகள் என்னவாவது? நான் உலகத்தின் முன் எப்படி விழிப்பது'' என்ற நினைவுகள் ராகவய்யாவின் மனதில் ஓடிக்கொண்டிருந்தன. மாதவனும் அவ்விடமிருந்தான்.

அந்தச்சமயம், டெலிபோன் மணி அடித்தது. அதைக் கவனிக்கச்சென்றார் ராகவய்யா. ஜார்ஜ் டவுனில், அவரது உற்ற நண்பர் ஆபத்தான நிலைமையிலிருப்பதாகவும், மாதவனையும் அழைத்துக்கொண்டு, உடனே வரும்படி செய்தி வந்தது. இதுவும் நன்மைக்கே எனச் சிரித்தான் மாதவன். பிறகு இருவரும் சென்றுவிட்டார்கள். அவர்கள் சென்றதும், வீணையைக் கீழே வைத்துவிட்டான் நரேன். மாலதியும் வைத்துவிட்டு எழுந்தாள். வேலைக்காரன் வீணையை எடுத்தபொழுது, இரண்டையும் என் அறையில் வைத்துவிடு, என்றான் நரேன்.

அவர்கள் சென்ற வியாதியஸ்தரின் குடும்பத்தைப்பற்றிச் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்தாள் தாயார். பிறகு நாழிகையாய்விட்டது, நாம் படுத்துக்கொள்ளுவோம். அவர்கள் வரும் நேரம் சொல்லமுடியாது என்று எழுந்து முன் சென்றாள் தாயார். அவளைப் பின்பற்றினாள் மாலதி. அவள் பின்சென்ற நரேன் அவள் பின்னலைப் பிடித்து இழுத்தான். திரும்பினாள். ஓர் கடிதத்தை அவள் கையில்வைத்து, காதருகில் குனிந்து அவசியம் தவறாதே, மறந்துவிடாதே என்று சொல்லிவிட்டுப் பாலை எதிர்பாராமல் விர் என முன்னால் சென்றுவிட்டாள்.

தன் அறைக்குச்சென்று கடிதத்தைப் படித்தாள். அதில்

,,அன்புள்ள மாலதி!

சரியாக இரவு பன்னிரண்டு மணிக்கு மாடியிலுள்ள வசந்த ஹாலுக்கு வா! விஷயம் முக்யமானது தவறாதே. நான் உன் வரவை எதிர்பார்த்திருப்பேன். தவறினால் என்னைக் காணமுடியாது''.

உன் அன்புள்ள,
நரேந்திரசந்தர்.

என்றிருந்தது. இது என்ன விந்தை!

தனிமையில் சந்திப்பதின் நோக்கம்? சே, அவர் அப்படிப்பட்டவரல்ல. விஷயம் புரியவில்லையே என்று நினைத்தாள். ஆனந்த சாகரத்தில் மிதந்த அவள் மனப்படகு, இப்புயல் காற்றால், தத்தளித்துத் தடுமாறியது. போவதா? வேண்டாமா? என்ற பிரச்னை தீராமல் சற்றுநேரம் திகைத்தாள். (தொடரும்)


# GRIPE-VIT-D



REGD.

## கிரைப் – விட் – டி

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று வலி' மாந்தம், வயிற்றில் புளிப்பு, உப்பிசம் வாந்தி, வயிற்றுப்போக்கு, விக்கல் முதலிய கோளாறுகளை உடனே நிவர்த்தியாக்கும்.

*Apply to:-*
Proprietors, **S. R. Remedies,**
**Trichinopoly.**

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் —ராமய்யா

மாசி மாதத்தில் மழையாவது மழை, இந்த வருஷம் பெய்தமாதிரி நான் எப்பொழுதும் கண்டதில்லை. காற்ருவது பேய்க் காற்று! ஏதோ மாம்பூ மழையென்று வசனம் சொல்வதுண்டு. சிலுசிலுவென்று காற்றடித்துக்கொண்டு பிசுபிசுவென்று தூறல் இருக்கும் சில சமயங்களில். நடுவில் சூரியன் சுரீரென்று சீறுவார், சாயந்திரமானல் தென்றலடிக்கும். எல்லாம் விளையாட்டைப்போல் நடந்துவிடும். இந்த வருஷம் என்னடான்ன பல்லெல்லாம் கூசும்படியாக, கன்னம் புளிக்க அறைந்துவிட்டதே மழை! சங்கீத வித்வான்களுக்கெல்லாம் தொண்டைக்கட்டல், ரசிகர்களுக்கு ஜலதோஷம். காலையில் "ஹிந்து" பேப்பரைக் கையில் எடுத்தால் நனைந்து நண்ட பிண்டலாக நமுத்துப்போன அப்பளம்மாதிரி இருக்கிறது. வண்ணான் வரவில்லை, தொட்டதெல்லாம் ஒட்டிக்கொள்ளுகிறது! இந்த மாதிரி காலந்தவறி நடக்கும் சம்பவத்தினல் எவ்வளவு தொல்லை பாரப்பா, என்று அம்மாஞ்சியைக் கேட்டால், அவன், "இதற்கெல்லாம் காரணம் உன்னுடைய மயிலை ஸங்கீத சபாதான், அந்தச்சபா நாயகர்களைப் போய்க் கேள்" என்று ஒரே போடாக போட்டான்! இதென்னடா குலாம்காதர் கோகிலாஷ்டமி நியாயமாக இருக்கிறதே என்று நான் யோசிக்கலானேன்! மயிலை ஸங்கீத சபைக்கும் மாசிமாதம் மழைக்கும் சம்பந்தம் என்ன? ஏதாவது இருதிசொல் அலங்காரம் புதிராக இருக்குமோ?

*சாம்பார் மணப்பதேன்?*
*வைத்தியனிடம் போவதேன்?*

என்பதும் "பெருங்காயத்தால்" என்று பதில் சொல்வதுப்போல், எனக்கு ஒன்றும் தெரியவில்லை. என்னைப் பார்த்துச் சிறிது சிரித்துவிட்டு அம்மாஞ்சி சொன்ஞன்:—

"மாசி மாதத்தில், அதாவது மார்ச்சு மாதத்தில் கிளாஸ் பரீக்ஷைகள், ஸ்கூல் பைனல் பரீக்ஷைகள், யூனிவர்ஸிடி பரீக்ஷைகள் எல்லாம் நெருங்கிக்கொண்டிருக்கும்போது யாராவது மியூஸிக் ஸீரீஸ் என்று பத்துக்கச்சேரிகள் வைத்துப் பார்த்திருக்கிருயா? பட்டணத்தில் இதற்கு முன் இந்தமாதிரி நிஷ்கண்டகமான வைபவங்களை நடத்தி நீ பார்த்ததுண்டா? மனஸில் ஈவு இரக்கம் பச்சாத்தாபம் இல்லாமல் இந்தமாதிரி செய்வது நியாயமா? ஸ்கூல் பைனல், இண்டர்மீடியட், பீ. ஏ. ஹானர்ஸ்: எப். எல்., பீ. எல். எல்லாப் பரீக்ஷைகளுக்கும் போட்டியாக, பாலஸரஸ்வதி, மாஹராஜபுரம், கனகாம்புஜம், அரியக்குடி. ஜி. என். பி. மதுரை மணி, செம்பை, ம. ஷ. இவ்வளவு பெயர்களையும் முடுக்கி விட்டுவிட்டு வேடிக்கைப் பார்த்தால், பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகள் எல்லாரும், பாட்டு கேட்பதா, படிப்பதா, பரீக்ஷைக்குப் போய்த்தாளம்போடுவதா? மழையில் நனைத்து வீட்டுக்கு வந்து பரீக்ஷையிலே சுழித்த குறை பாதியிலும் ஜலுப்புப் பிடித்த கஷ்டம் பாதியிலும் மூக்கை உறிஞ்சிக்கொண்டிருப்பதா? நீயும் நானும் படித்துப்பரீக்ஷைக்குப்போய்க் குப்பை கொட்டின காலத்தில் இந்தமாதிரி ஏதாவது குறுக்கு விசாரணைகள் இருந்ததுண்டா? இருந்திருந்தால் நீயொரு மனுஷனுகவும் நான் ஒரு அம்மாஞ்சியாகவும் இருக்க முடியுமா? மார்ச்சு மாதத்தில் சங்கீதக் கச்சேரிகளை நடத்திப் பரீக்ஷைக்குப் படிக்கும் பயல்களைப் புரட்டியடித்தால், மழை வரும், காற்றடிக்கும், தூள் பறக்கும், கள்ளிமரம் கண்ணைக் குத்தும், எல்லாம்தான் நடக்கும்!"

அம்மாஞ்சி சொன்னது மிகவும் சரி. நேற்று இரவு விக்டோரியா ஹாஸ்டல் பயல்கள் இரண்டுபேர் கிட்டதட்ட அடிதடி சண்டைக்கு வந்துவிட்டார்கள்! இருவருக்கும் தர்க்கம். மஹாராஜபுரம்பாடினமோஹனம்உயர்ந்ததா, மதுரை மணி மோஹனம் உயர்ந்ததா என்பதைப்பற்றி—இந்த இரண்டு வித்வான்களும் அதைக் கேட்டிருந்தால், மோஹன ராகத்தை இனி பாடவே மாட்டார்கள்! அடடா! ஒருவன் மஹாராஜபுரத்தைப் புகழுவதும், இன்னெருவன் அவரைத் தள்ளுவதும், மதுரை மணியை சிகரத்தில் ஏற்றுவதும், என்ன வேடிக்கை! இதிலேயே ஒரு மணி நேரம் கழிந்தது. இதோடு விட்டதா? அரியக்குடி, செம்மங்குடி, ஜீ. என். பி. செம்பை, சித்தூர் எல்லாரையும் பற்றி "டிஸ்கஸ்" பண்ணிவிட்டு, அவர்களையெல்லாம் பஞ்சா உதறி, கடைசியாக, ம. ஷ. வைப்பற்றி "டிஸ்கஷன்" தொடங்கி, அது ஓய்வதற்கு மணி பன்னிரெண்டு! அவர்களிருவருக்கும் சமரசம் வருவதற்குப் பத்ராசலம் ராமதாஸர்தான் காரணம்! அவருடைய "என்னகானுராமபஜன" என்ற கீர்த்தனத்தை, ம. ஷ. பாடுவதுபோல் இருவரும் பாடிக்கொண்டு "ராம, ராம, ராமயெனுசு, ராஹாம, ராஹாம, ராஹாம, எனுசு, ராஹாம, ராஹஹாம, ராஹஹாம, எனுசு, ராஹஹாம, ராஹஹஹாம, ராஹமா......எனுசு" என்று இருவரும் சேர்ந்து ஒலிபரப்பினது மிகவும் வேடிக்கையாயிருந்தது. இதற்கப்புறம் படிப்பேது, பரீக்ஷையேது? அம்மாஞ்சி சொன்னது நியாயம் தான்!

ஏப்ரல் மாதம் பதினைராம் தேதி ம. ஷ. சுப்பலக்ஷ்மியம்மாளுடைய கச்சேரி மயிலை சபா ஸீரிஸில் நடப்பதாகத் தெரிகிறது. அன்றைய தினம் டிக்கட் கட்டணம் என்னவென்று அறிவிக்கவில்லை. பாக்கி தினங்களில் ரூபாய்கள் 4,2,1, எனவும், 16 ஆம்தேதியன்று? எனவும் அறிக்கை செய்திருக்கிருர்கள். கட்டணத்தைக் குறைத்துக்கூட்டத்தை அதிகரிக்கலாம், அல்லது கட்டணத்தை அதிகரித்து கூட்டத்தைக் குறைக்கலாம், அல்லது கச்சேரிக்குத் தகுந்த கட்டணத்தை வைத்து வசூலைப்

பெருக்கலாம், சங்கீத அபிமானத்தைப் பெருக்கச் சபையை நடத்தலாம்,-இதற்குமேல் எழுத முடியவில்லை—அம்மாஞ்சி இதைப் படித்துக்கொண்டே முணகுகிறான். "கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம், கரடி வெம் புலி வாயையும் கட்டலாம்; ஒரு சிங்கமுதுகு மேற்கொள்ளலாம், மற்றொரு சரீரத்தினும் புகுதலாம்"—இனி என்ன செய்வது?

இந்த யுத்தபரிஸ்திதியில் மதராஸிகள் கன்னியாகுமாரியிலிருந்து லண்டிகோடல் வரையில் பரவியிருக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் கிருஷ்ணகான சபா, ரஸிகரஞ்சினி சபா, ஸ்ரீ தியாகராஜ சபா என்று முளைத்துக்கொண்டிருக்கின்றன. இந்த மாதத்தில் நிஜாம் ராஜதானி ஹைதராபாத்தில் ஒரு வாரம் தினந்தோறும் கச்சேரிகள் உண்டு. ஆனால் அவர்கள் தினந்தோறும் 6½ மணிக்குமேல் கச்சேரிபோட்டிருக்கிறார்கள்—ராகுகாலம் இல்லாத வேளையில்தான் ஏற்பாடாயிருக்கிறது. மயிலை ஸங்கீத சபையார்மாதிரி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கிரமமாக 5½ மணிக்குக் கொழுத்த ராகுகாலத்தில் ஆரம்பிக்காமல் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கு மழை, காற்று, புயலினால் துன்பம் ஏற்படாது என்று தோன்றுகிறது.

ஸர் நார்மன் ஸ்ட்ராதி என்ற பிரமுகர் மயிலை ஸங்கீத சபை ஸீரீஸ் ஆரம்பதினத்தில் தமிழ், தெலுங்கு ஸங்கீத சச்சரவைப்பற்றிப் பேசுங்கால் ஒரு சிறிய பொடிவைத்து ஊதினதை நீங்கள் கவனித்தீர்களா? ஸங்கீதம் எந்தப் பாஷையிலிருக்கவேண்டும் என்பதைப் பற்றி மூர்த்தன்னியமாக அபிப்பிராயப்பட்டாலும், வெளியே சொல்லிக்கொண்டு இயக்கத்தில் ஈடுபடுவது உசிதமல்லவென்றார். இது ஒரு நுட்பமான விஷயம்தான் என்கிறான் அம்மாஞ்சி. ரோஷனாராபேகம் தஞ்சாவூரில்போய்க் கச்சேரி செய்திருக்கிறார். அரியக்குடி ஹைதராபாத்திலும், டில்லியிலும் கச்சேரி செய்யப் போகிறார். நல்ல ஸங்கீதம் பாடவும் கேட்கவும் ஆட்கள் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றனர். அனாவசியமான கவலைகளை ஏன் அதிகரித்துக்கொள்ளவேண்டும் என்கிறான் அம்மாஞ்சி?

சென்னையில் மாம்பலம் ஒரு இடத்தில்தவிர, மற்றெல்லா பேட்டைகளிலும் சபைகள் விளங்குகின்றன. மயிலாப்பூரில் இரண்டு, திருவல்லிக்கேணியில் ஒன்று, நுங்கம்பாக்கத்திலும் ஒன்று இருக்கின்றன. நுங்கம்பாக்கத்திலுள்ள ஸரஸ்வதிகான ஸபா என்பது நித்யகண்டம் பூரண ஆயுஸ்உள்ள ஸபைகளில் ஒன்று. பணப்பெருக்கு இல்லை, ஆனால் கட்டுக்கோப்பும் ஞானமும் ஏராளமாயுண்டு. சிறிய வித்வானோ, பெரிய வித்வானோ யாராயிருந்தாலும் மரியாதையுடன் மதித்துப் பாராட்டுவார்கள். வித்வான்கள் அனைவரும் இந்தச்சபையில் வருஷத்துக்கு ஒருமுறையாவது கச்சேரி செய்யவேண்டியது அவசியம்; அதனால் அவர்களுக்குக் கௌரவமும் சிரேஸ்யமும் விருத்தியாகும். அந்த இடத்தில் நிஜ ஸங்கீதத்துக்குள்ள கௌரவம் வேருபெரிய இடங்களிலும் கிடைக்காது. ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளே நுங்கம்பாக்கத்தில் போரங்கியார் வீட்டில் மூன்று தினங்கள்தங்கி அந்தவூர் அகத்திச்வரர் தேவஸ்தானத்தில் தொழுது, ஈச்வரன்மேல் ஒரு கீர்த்தனமும் பாடியதாகத் தெரிகிறது. ஸங்கீத வித்வான்கள் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும் என்கிறான் அம்மாஞ்சி.

ஃ ஃ ஃ

திருச்சி ரேடியோ ஸ்டேஷனில் தினந்தோறும் ஐந்தில் ஒரு பாகம்தான் ஒழுங்கான ஸங்கீதம் நடைபெறுகிறது என்றும், பாக்கி நிகழ்ச்சிகள் சினிமா பாட்டுகள், துக்கடாக்கள் இவைகளாக இருப்பவையென்றும் சமீபமாக ஒரு பத்திரிகையில் படித்தோம். அம்மாஞ்சி இதைக்கண்டு சொல்லுகிறான், "இதுதான் உலகப்போக்கு! நல்ல கனபாடிகள், தீக்ஷிதர்கள் இவர்களுடைய பிள்ளைகள்தான் ஒரு நாளைக்கு ஒரு பாக்கட்டு ஸிகரெட்டுப் பிடித்துவிட்டு, மிலிடேரி ஹோட்டலிலேபோய் புலாவ் சாப்பிட்டுவிடுவான்-அதுபோல் அந்த காவேரி தீரத்திலுள்ள திருச்சினாப்பள்ளிக்குத்தான் ஸங்கீத சம்பந்தமாக அலௌசிக அலங்கோலங்கள் சம்பவிக்கும். என்ன செய்யலாம்! பால்காரன் முதலில் பாலில் ஜலம்விடுவான்—பிறகு ஜலத்தில் கொஞ்சம் பால்விட்டு, பிடித்தால் எடுத்துக்கொள் இல்லாமற்போனால் போவென்பான். அதுபோல் திருச்சியில் ஆரம்ப சூரத்துவம் பிரமாதமாயிருந்தது. கச்சேரி ப்ரோக்ராம்களென்ன லயசித்திரங்களென்ன, அமர்க்களமாயிருந்தன. இப்பொழுது, ஒரே சித்திரவதையாயிருக்கிறது. மலைக்கோட்டைப் பிள்ளையார்கூட மெல்ல ஓடிவந்து பரங்கிமலையிலே உட்கார்ந்துவிடுவார் பாரு, இனி சிறிது காலத்தில்".

ஃ ஃ ஃ

மார்ச்சு மாதம் இரண்டாம் தேதியன்று "ஹிந்து" பேப்பரில் ஸர் பி. எல். மிட்டர் எழுதிய ஒரு சிறு கடிதம் பிரசுரிக்கப்பட்டதை எல்லோரும் படிக்கவேண்டும். சென்னை ராஜதானியில் எடுக்கப்பட்ட மணக்கோலப் புகைப்படங்களில், ஆண்மக்கள் வெள்ளையர் உடுப்பையணிந்து இருக்கிறார்களே! அதற்குக் காரணம் என்ன? அத்தகைய காளைக்குட்டிகள் தமது சுதேச உடைகள் அனாகரிகமானவை எனக் கருதுகிறார்களா? மணக்கோலத்திலும் வெள்ளையர் உடுப்பையும் அணிகிறார்களா? உத்தியோக சம்பந்தமாக அணியட்டும்! சம்பிரதாயமாக இருக்கவேண்டிய சந்தர்ப்பத்திலும் பரதேச உடையா என்கிறார்! அம்மாஞ்சி சொல்லுகிறான்: "ஓய், மிட்டர்வாள்! உம்மை மிட்டாய்வாள் என்றும் கூப்பிட்டு, உம்முடைய வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும் காணும்! எங்களுடைய காளைக்குட்டிகளைப் பற்றி உமக்குப் பூராவும்-தெரியாது! குட்டிகளைச் சொல்லுவானேன்? காளைகள் எப்படிப் பட்டவை? கலியாணங்களில் முகூர்த்தங்களுக்கும், கச்சேரிகளுக்கும் வெள்ளையர் உடுப்பு இட்டுக்கொண்டு வருவார்கள்.

(56-ம் பக்கம் பார்க்க.)

# கன்னியின் கனவு

க. சந்தானம்

சிந்தாமயி பீஜகணிதத்தில் ஒரு சிக்கலான வினாவுக்கு விடைதேடிக் கொண்டிருந்தாள். பி.ஏ. ஆனர்ஸில் இரண்டாவது வருஷம். வயது பதினெட்டு. மாநிறம். கொடி உடல். அதிக அழகில்லை. ஆனால் வசீகரமான முகம். கணித சாஸ்திரத்தில் நிபுணையாகி இந்தியப் பெண்ணுலகுக்குப் பெருமை தர வேண்டுமென்ற பேராசை கொண்டிருந்தாள். அவளுடன் படித்துவந்த பையன்களுக்கெல்லாம் இவள் புத்தி கூர்மையைக் கண்டு ஆச்சரியம். பொறாமையால் அவள் பெண்மையைப் பரிகசிப்பதுமுண்டு.

பார்த்தால் சிறிய பிரச்சினை. இரண்டு மணி நேரம் இருபது பக்கம் காகிதத்தை வீண் செய்தும் வழி விளங்கவில்லை. இரவு பத்து மணிக்கு ஹாஸ்டலில் விளக்கு அணைத்து விட்டார்கள். நாற்காலியிலிருந்து எழுந்து கட்டிலின்பேரில் உட்காரந்தாள். விரிக்காத படுக்கையின்பேரில் சாய்ந்துகொண்டு அதே கணிதப் பிரச்னையைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள், ஆனால் சிறிது நேரத்தில் உடலிலிருந்து பிரிந்து மனம் வேறுலகுக்குப் போய்விட்டது. அவளுடைய வாழ்க்கையின் பழைய நினைவுகள் ஓர் புதிய நாடகம் நடத்தின. மூன்று வருஷத்திற்கு முன் இறந்த தன் தந்தையைக் கனவில் கண்டதும் சிந்தாமயியின் கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது. உதடுகளில் புன்னகை பூத்தது. அவர் பக்கத்தில் பத்து வருஷத்திற்கு முன் பரமபதமடைந்த தன் தாயைப் பார்த்து ‘அம்மா’ என்று அலறி அவளை இறுகத் தழுவிக்கொண்டாள்.

தாய்: ஏன் இப்படி வீணாக மண்டையை உடைத்துக்கொள்ளுகிறாய், சிந்தா? இதனால் என்ன ஆகப்போகிறது? பெண் ஜன்மம் எடுத்தவர்கள் கடைசியில் குடும்பம் நடத்தித்தான் ஆகவேண்டும் உரிய காலத்தில் கலியாணம் செய்துகொண்டு சுகப்பட வேண்டாமா?

தந்தை: உங்கம்மா வார்த்தையைக் கவனிக்காதே, அம்மா. இவர்களெல்லாம் இப்படித்தான். வாலிழந்த நரிகள், நீயாவது இவ்வளவு புத்திசாலியாகப் படிப்பதைப் பார்த்து எனக்கு அளவில்லாத ஆனந்தம். கணித சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று ஆயுள் முழுதும் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் என் வாழ்நாள் முழுதும் உபயோகமற்ற உத்தியோகத்தில் வீணாகிவிட்டது. நீயாவது அத்துறையில் சித்தியடையவேண்டுமென்று மனப்பூர்வமாக ஆசீர்வாதம் செய்கிறேன்.

தாய்: போதும் போதும், உங்கள் கணித சாஸ்திரம். அதனால் நான் பட்டபாடு நம் குடும்பத்திற்கு ஏழு ஜன்மத்திற்குப்போதும். நல்லவேளையாக ஒரு உத்[illegible]கமிருந்தது. இல்லாவிட்டால் உங்கள[illegible]பத்தியம் பிடித்திருக்கும். நா[illegible] கிடந்திருப்போம். வீடு[illegible]ம் கலப்பாகப் பேசினதுண்டா? குழந்தைகளிடம் கொஞ்சினதுண்டா? கடைசியில் அதனால் கண்ட பலன் என்ன?

தந்தை: செவிடுக்குச் சங்கீதத்தின் அருமையை எப்படிச் சொல்லுவது? நீ ஓயாமல் குடும்பம், குடும்பம் என்று கவலைப்பட்டு என்னவாயிற்று? நானாவது வாழ்நாள் முழுதும் மனக்கவலையின்றி நிம்மதியாகவிருந்தேன். கணித சாஸ்திரம் வினாடிதோறும் தோன்றி, மறைந்து, மாறிவரும் உலகின் அழியாத மூலதத்துவம். அதைவிட்டு வேறு எதைச் சிந்திக்கவேண்டும்?

தாய்: உயிர்பெற்ற ஜீவன் உணர்ச்சியிழந்து கல்லாவதற்குக் கணிதம் நல்ல வழிதான். என் அனுபவத்திலிருந்து, கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் மோகம் கொண்டவர்கள் பிரம்மசாரிகளாக இருக்கவேண்டும். பெண்களுக்கு அது தகாது?

தந்தை: ஏன் தகாது? பெண்களே தங்களை இழிவு செய்துகொண்டால், ஆண்கள் ஏன் அவமதிக்கமாட்டார்கள்?

தாய்: இது வீண்விதண்டாவாதம். மக்களைப் பெற்று வளர்ப்பதே எங்கள் பிறவித் தர்மம். இதற்குக் குந்தகம் விளைவிக்கும் எந்த வழியும் தீமையில்தான் முடியும்.

தந்தை: சமூக சாஸ்திரத்தில் பரீக்ஷை எழுதினால், நிச்சயம் பெரிய பட்டம் பெற்றுவிடுவாய்.

தாய்: அந்தப்பட்டங்களை எல்லாம் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். ஏட்டுச் சுரக்காய் கறிக்காகுமா? நீங்கள் குடும்பம்நடத்தினவிதம் வெளியில் தெரிந்திருந்தால் உலகம் சிரித்திருக்கும்.

தந்தை: நீ போனபிறகு ஏழுவருஷம் குடும்பம் நடத்தினேன். என்ன குறைந்துபோயிற்று? சிந்தாவைக் கேட்டுப்பார்?

தாய்: கேட்கவேண்டுமா? அவர்களை ஹாஸ்டலில் விட்டுவிட்டு நீங்கள் வீட்டில் கணிதம் படித்துக்கொண்டிருந்தீர்கள். பரிசாரகன் இஷ்டப்படி திருடிக்கொண்டிருந்தான். குழந்தைகள் லீவுக்குவந்தபோது, நீங்கள் அவர்களைக் கவனித்தீர்களா? அவர்கள் தான் உங்களைக் கவனிக்கவேண்டியிருந்தது. கொஞ்சம் பணத்தை எறிந்துவிட்டால் கடமை தீர்ந்துவிட்டதா?

தந்தை: என்ன சிந்தா, உண்மையைச்சொல். அம்மா போனதிற்குப்பிறகு அதிக கஷ்டப் பட்டிருப்பீர்களா!

சிந்தா: அப்படிக் கேட்டால், என்ன பதில் சொல்வது, அப்பா! குழந்தைகளுக்கு அம்மா இல்லாவிட்டால் உலகமே தலைகீழாகத்தானிருக்கும். ஆனால் அம்மா, அப்பாமீது நீ ஏன் வீண் குற்றம் சுமத்துகிறாய்? நீ இல்லாததைத் தவிர எங்களுக்கு வேறு ஒரு குறைவும் தெரியவில்லை. பணத்தைக் கணக்குத் தெரியாமல் செலவழித்தோம். சில அந்தரங்க விஷயங்

களில் திக்குத்தெரியாமல் விழித்தோம். ஆனால் அப்பா அன்புக்குக் குறைவில்லை.

தாய்: ஆதி முதல் இந்த அநியாயம்தான். நாங்கள் பெற்று, வளர்க்கவேண்டியது, உங்கள் பட்சபாதமெல்லாம் பாடுபடாத புருஷர்கள் பக்கம்தான்.

தந்தை: உன் அறியாமைக்காக ஏன் குழந்தையைக் கோபித்துக்கொள்ளுகிறாய்? இந்த உலகில் உயிருக்கு முக்கியமானது சுதந்திரம். அதற்குப் பிறகுதான் உணவும், உடையும். சோற்றுக்கும், துணிக்கும் பதிலாகச் சுதந்திர வளர்ச்சியைத் தடுப்பவர்கள்மீது குழந்தைகள் அன்புகொள்ளுவதில்லை.

தாய்: இந்தப் பிரசங்கத்தை நான் பல வருஷங்கள் கேட்டாய்விட்டது. நான் போன பிறகு பெண்களுக்குப் பூர்ண சுதந்திரம் கொடுத்தீர்கள். கின்னரியின் கதி என்னவாயிற்று. ரேடியோவில் சேர்ந்தாள். பிறகு ஜாதியைவிட்டு யாரையோ மணந்தாள். இப்பொழுது அவனோடு சண்டைபோட்டுக் கொண்டு தனியாகத் திண்டாடுகிறாள். சிந்தாவின் தலையில் என்ன எழுதியிருக்கிறதோ?

தந்தை: கின்னரியாவது தன் திறமையினால் சம்பாதித்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாள். நீ சிரமப்பட்டுக் கலியாணம் செய்துவைத்த மோகனாங்கியைப்பற்றி என்ன சொல்லுகிறாய்? பதினான்கு வயதில் யார் பேச்சையோ கேட்டுக் கொண்டு உபயோகமற்ற ஒரு வரனை முடித்து வைத்தாய். கலியாணத்திற்கு முன் கூறிய லக்ஷ ரூபாய் ஆஸ்தி விவாகத்திற்கு மறுநாள் மாயமாக மறைந்துவிட்டது. நான்கு வருஷத்தில் நாலு குழந்தைகள். பதினெட்டாவது வயதில் விதவை. நீ பழிக்கும் கணிதத்தில் ஒரு புஸ்தகம் எழுதியிருந்தேன். அதற்கு ஐயாயிரம் ரூபாய் கிடைத்தது. அதைக்கொண்டு ஒரு வீடும் ஒருவேலி நிலமும் வாங்கிக்கொடுத்தேன். கின்னரியும் கொஞ்சம் உதவி செய்துகொண்டு வருகிறாள். இல்லாவிடில் அவளுடைய கதி அதோ கதிதான்?

தாய்: அதற்கு நான் தான் ஜவாப்தாரியா? நீங்கள் மாடியில் உட்கார்ந்து கணக்குப் போட்டுக்கொண்டிருந்தால் யார்வரன்தேடுவார்கள்? என் சொந்த மாமா இப்படி ஏமாற்றுவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை. விதியின் செயலுக்கு நாம் என்ன செய்வது? ஏதோ குழந்தைகளாவது இருக்கிறார்கள். எப்படியோ பிழைத்துக்கொள்ளுகிறார்கள். சிந்தாவை எவன் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறான்?

தந்தை: மோகனாங்கியின் குழந்தைகளை காக்கும் விதி சிந்தாவின் விவாகத்திற்கு மட்டும் இல்லையோ? நமக்குப் பழைய கஷ்டங்கள் சகஜமாகவிருக்கின்றன. புதிய கஷ்டங்களைக்கண்டு பிரமிக்கிறோம். என்றும் கஷ்டங்களிலிருந்து விடுதலையில்லை. அவைகளை மாற்றிக்கொள்ளுவதுதான் நம்வசமிருக்கிறது. சகித்துக்கொள்ளும் சக்தியை வளர்ப்பதும் நம் கையிலிருக்கிறது. சிந்தாவைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. என்ன கஷ்டம் வந்தாலும் அதைச்சகித்துக்கொள்ளக் கணிதம் உதவிபுரியும். ஒரு புதிய கணித புத்தகத்தை எடுத்துக்கொண்டால், உலகத்தை மறந்துவிடுவாள். அவளையே கேட்டுப்பார். இந்த இரண்டு வருஷங்களாக நம்மை எவ்வளவுதரம் நினைத்திருக்கிறாள்? இப்பொழுது கூட ஒருவினாவுக்கு விடை தெரியவில்லை. அந்த அலுப்பினால் தான் நம் நினைவு வந்தது.

தனது வெட்கத்தை மறைத்துக்கொள்ள சிந்தா தன் தந்தையின் இரண்டு கைகளையும் இழுத்துத் தன் முகத்தை மூடினாள். 'இல்லை' 'இல்லை' என்று சொல்ல வாயெடுத்தாள். திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள். படுக்கையை விரித்துப் படுத்துக்கெண்டாள். வெகு நேரம் தன் கனவைப்பற்றிச் சிந்திக்கலானாள். ஓயாமல் பணிவிடை செய்து குடும்பத்திற்குப் பலியான தன் அன்னையின் திருமுகம் புதிய தேசர் பரிவுடன் மனக்கண்முன் தோன்றிற்று. தாமரையிலையின்மேல் நீர் முத்துப்போல் உலக வாழ்க்கையில் பற்றற்றுக் காலங்கழித்த தந்தையின் ஆசிகள் தன்னைச் சூழ்ந்திருப்பதாக உணர்ந்து மயிர்க்கூச்சல் கொண்டாள். விடியற்காலையில் அயர்ந்து நித்திரையில் ஆழ்ந்துவிட்டாள். எழுந்திருக்கும்பொழுது 9 மணியாகிவிட்டது. ஆனால் இரவில் அவள் தேடிய விடை காலையில் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கிற்று. தன் கனவைப்போல் இதுவும் ஆச்சரியமாகவிருந்தது.

---

(54ம் பக்கம் தொடர்ச்சி)

பிச்சைக்காரன் வாந்தியெடுத்ததுபோல், பஞ்சகச்சம், கோட்டு, காலர், நெக்டை, தலைக்குட்டை இத்துடன் வருவார்கள்! பாட்டுக்கச்சேரிகளுக்கு ஸூட் மாட்டிக்கொண்டு வந்து அகப்பட்டவர்கள் விரல்களையெல்லாம் மிதித்துப் புண்ணாக்கிவிடுவார்கள்! அவர்கள் ஈன்ற கன்றுக்குட்டிகளைக் கேட்பானேன்! உம்முடைய பெங்கால் ராஜதானியில் தொப்பையுடனும் தொந்தியுடனும் நீங்களெல்லாரும் மல்ஜிப்பாவைப் போட்டுக்கொண்டு சாயந்திரத்திலே வெளியிலே கிளம்பிடுவீர்கள். எங்களுடைய ஊரிலேயா! தொண்டு கிழங்கள்கூட ஸூட்டுகளை மாட்டிக்கொண்டு வாலும்தோலுமாகத் திரியவருங்களே! அந்த வயிற்றெரிச்சலை நீர் ஏன் கிளப்பினீர்!"

ஃ ஃ ஃ

மதுரை ஸௌராஷ்டிர சபையாரிடம் இருக்கும் ஸ்ரீ தியாகய்யர்வாளுடைய கிரந்தங்களில் அநேக க்ஷேத்ரஞ்ய பதங்கள் ஸ்வரப்படுத்தி எழுதியிருப்பதாக அறிகிறோம். அய்யர்வாள் இவைகளையும் கவனித்து, தம்முடைய பத்ததியில் வேண்டியவளவு ஏற்றுக்கொண்டிருப்பாரோ? விஷயம் தெரிந்தவர்கள் இதைச்சிறிது ஆராய்ச்சிசெ[illegible] வெளிப்படுத்தினால் மிகவும் சிலாக்கிய[illegible]சம் என்கிறான் அம்மாஞ்சி.

Edited & Published by N. R. Ramanujan B. A[illegible] Rangaswami B. A.
at The Cauveri Colour Press, Basu[illegible]am.

# ★ பொருளடக்கம் ★

தாரண மலர் 3 — சித்திரை இதழ் 9


| | | |
|---|---|---|
| வருஷப் பிறப்பு | ... ... | 6 |
| கதம்பம் | ... ... | 9 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் | ... 'ராமய்யா' | 15 |
| உவகைச்சுவை | ... வே. நாராயணன் | 19 |
| பாசம் | ... சீதாபாய் | 21 |
| முத்தம் | ... ரா. வீழிநாதன் | 25 |
| பண்ணைத் தெய்வம் | ... கௌரீ | 33 |
| இது விளையாட்டானால் | ... ரா. ஸ்ரீ. தேசிகன் | 41 |
| மனம்போல மாங்கல்ய வாழ்வு | ... கமலா பத்மநாபன் | 44 |
| உடைந்த வீணை | ... கே. சுந்தரம்மாள் | 50 |
| புத்தக விமர்சனம் | ... ... | 55 |


குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.


ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

**M. N. நாகேந்திரம் ஸன்ஸ்**

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.